www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 11/00

දිනමුරසු වාරමලර් ஒக்.27 – நவ.02,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 176

# புதைகுழி இரகசியம்

## இரும்புத்திரை மர்மங்கள்



பரபரப்பான ரிப்போர்ட்

மதுவில் விழும் நட்சத்திரங்கள்

தாடிவளர்க்கக் கட்டாயச் சட்டம்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## உறுத்தும் உண்மை

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

இலண்டன் பி.பி.சிக்கு
அமைச்சர் கதிர்காமர் அவர்கள்
பேட்டியொன்றை வழங்கியிருக்கிறார்.
புலிகள் ஒழிந்தால் பிரச்சனை முடியும்
என்பதுதான் பேட்டியின் சாராம்சம்!

பொறுப்புள்ள அமைச்சர் என்றரீதியில்
அரசாங்கத்தை ஆதரித்து
வாதிடுவதும் அவர் கடமைதான்!
அதற்காகத்தான் அப்பொறுப்பும்
அவருக்கு வழங்கப்பட்டுள்ளது!

கடந்தகால அரசாங்கமாயினும்
நிகழ்கால அரசாங்கமாயினும்
வெளிநாட்டமைச்சர் பதவியை
சிறுபான்மையினப் பிரதிநிதிகளே
அநேகமாக அலங்கரித்திருக்கிறார்கள்.

ஒரு உண்மை உறுத்துகிறது.
பாதுகாப்புத்துறை சார்ந்த பொறுப்பில்
சிறுபான்மையினத்தைச் சேர்ந்தவர்
நியமிக்கப்பட்டால் என்னாகும்?
பிரளயம்தான் ஏற்படும்.
இனவாத அலை சுழன்றடிக்கும்!

அரச சார்பான தமிழ் கட்சிகள்-
புலிகளுக்கு எதிரான அமைப்புக்கள்-
ஆயுதம் வைத்திருப்பதைக்கூட
பெரும்பான்மை இனத்துக்கு ஆபத்தென்று
இனவாத சக்திகள் முழங்குகின்றன.

இந்நிலையில்
பாதுகாப்புத்துறையில்
சிறுபான்மையினத்தவர் ஒருவர்
அமைச்சுப் பொறுப்பில் இருந்தால்
நிலவரம் எப்படியிருக்கும் என்பதை
நினைத்தாலே கசக்கிறது!

வெளிநாட்டமைச்சராக
சிறுபான்மை இனத்தவர் இருப்பதை
இனவாத அமைப்புக்கள்
இதுவரை கண்டித்ததும் கிடையாது!

இனப்பிரச்சனை விடயத்திலும்
நாட்டின் தலைவிதியை தீர்மானிக்கும்
பொறுப்புக்களிலும்
சிறுபான்மையினத்தைச் சேர்ந்தோர்
பதவி வகிப்பதை மட்டும்
இனவாதம் ஒருபோதும் சகியாது!

சிறுபான்மையினப் பிரதிநிதிகள்
வலுவான பொறுப்புக்களில்
இருப்பதைத்தான் கண்டிப்பார்கள்.
அதே பிரதிநிதிகள் தமக்காக
வாதிடும் வக்கீல்களாக
இருந்தால் வரவேற்பார்கள்!

வெளிநாட்டமைச்சுப் பொறுப்பு,
வர்த்தக அமைச்சுப் பொறுப்பு
போன்றவற்றில் இருப்பவர்களும்
கிட்டத்தட்ட
வக்கீல்கள் மாதிரித்தான்!

தாம் சார்ந்த பக்கத்துக்காக
உரத்து வாதாடி
வெளியுலக உதவிகளை
வென்று தருவதுதான்
அவர்களது கடமை!

அமைச்சர் கதிர்காமர்
இனவாதிகளின் முகச்சுளிப்பை
முகம்கொடுக்க நேராதிருப்பதும்,
தனது கடமைக்கு அப்பால்
அவர் தலையிடாமல் இருப்பதால்தான்!

அமைச்சர் கதிர்காமர்
நல்லவர், நாகரிகமானவர்,
சிறந்த சட்டத்தரணியுமாக
இருப்பது மேலதிகத் திறமை.

அவரது புலமையும், திறமையும்
நெல்லுக்கிறைத்த நீராகாமல்
புல்லுக்கிறைத்த நீராகிவிடக்கூடாது
என்பதே நமது கவலை!

இனவாதத்துக்கு அப்பாற்பட்ட
ஒருவராக அவர் இருப்பது
நமக்கெல்லாம் பெருமைதான்!

விடுதலைப் புலிகளின்
கொள்கைகள், அணுகுமுறைகள்
தொடர்பாக தனது எண்ணத்தை
மறைக்காமல், ஒளிக்காமல்
நேர்நின்று சொல்வதும்
நேர்மையான போக்குத்தான்!

ஆனால், இன்றைய அவலங்களை
புலிகளின்மீது மட்டும் போட்டுவிட்டு
'எல்லாம் ஒழுங்காகவே இருக்கிறது
புலிகளைத் தவிர' என்பதுபோல
அவர் வாதிடுவதுதான் வருத்தமாயுள்ளது!

இனப்பிரச்சனைக்கு
தீர்வென்று பேச்சு எழுந்தால்
மூச்சுப்பிடித்து நின்று
எதிர் வீச்சு நடத்துவது யார்?

அகதிகள் பெருக்கத்துக்கும்
அவலங்கள் தொடர்கதையாவதற்கும்
யுத்தம் மட்டுமல்ல,
யுத்தம் நடத்தப்படும் முறையும் ஒரு
முக்கிய காரணமல்லவா?

அமைச்சர் கதிர்காமர்
உள்நாட்டு நிலவரங்களையும்
உன்னிப்பாக உற்று நோக்கினால்
உண்மைகள் பல கண்ணில்படும்.

❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## ஆன்மீகம்

### மனந்திரும்புதல்

நாம் உலக இச்சைகளில் மூழ்கி, உலகமே இதுதான், வாழ்க்கை என்றால் இதுதான், என்று கடவுளுக்குப் பிரியமற்ற வாழ்க்கை வாழ்ந்து, கடவுளால் மீட்கப்பட்டு அநீதி வழி துறந்து அறநெறி வாழ்க்கை வாழ முற்படும்போது, சமுதாயத்தில், இவன் இப்படிப்பட்டவன் அல்லவா? இவன் இன்னான் அல்லவா? என்று பேசிக் கொள்கின்றதைக் காணுகின்றோம்.

ஒருபாவி மனந்திரும்புதலின் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோசம் உண்டாயிற்று என்று திருமறை வாயிலாக அறிகின்றோம். ஆனால் சமூகத்தில் சந்தோசம் ஏற்படாமல் எரிச்சல் ஏற்படுகின்றதையே காணுகின்றோம்.

"ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின." (II கொரி 5:17) எப்பேர்ப்பட்ட பாவியையும் மன்னித்து, அன்புகாட்டி, அரவணைத்து, புது வாழ்வு காட்டும் ஆண்டவர் இயேசுவின் முன்மாதிரிகளின்படி வாழ, பழையவைகளைத் தூக்கியெறிந்து விட்டு கிறிஸ்துவுக்குள் புதியவர்களாய்ப் பார்க்கும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள முனைவோமாக.

சகோ.எஸ்.யேசுநாதன், வாழைச்சேனை.



### சிந்தனைக்குச் சில நபி மொழிகள்

கடைசிக்காலத்தில் மார்க்க அறிஞர்களின் மரணத்தின் காரணமாக சமய அறிவு உயர்த்தப்பட்டுவிடும். மக்கள் அறியாதவர்களையும் சிறியவர்களையும் தங்களின் தலைவர்களாகத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். அன்னவர்கள் தவறான விடயங்களை மனிதர்களிடம் சொல்லி தாங்களும் வழிகெட்டுப் பிறரையும் வழி கெடுப்பார்கள்.

எனது சமூகத்தினர் எழுபத்திமூன்று கூட்டத்தினராகப் பிரிந்து விடுவார்கள். அவர்களுள் ஒரு பிரிவினர் மட்டும் சுவர்க்கம் செல்வார்கள். ஏனையோர் நரகில் நுழைவார்கள். நானும் எனது தோழர்களும் எதன் மீதிருக்கிறோமோ அதன்படி நடந்தவர்களே சுவர்க்கவாதிகள்.

எனது (ஸஹாபா) தோழர்கள் நட்சத்திரங்களைப் போன்றவர்கள்; அவர்களில் எவரைப்பின்பற்றினாலும் நீங்கள் நேர்வழிபெறுவீர்கள்.

இறைதியானம் (திக்ர்) செய்பவன் உயிருள்ளவனாவான். இறைதியானம் செய்யாதவன் செத்த சடலம் போன்றவனாவான்.

திஹாரியா-ஹாரித்

## கவிதைப் போட்டி இல.173

பரிசுக்குரிய கவிதை

### உதிர்ந்த உறவுகள்

கல்லுக்குள் ஈரங் காட்டும்
கருணையா? கடுஞ்சமரின்
சில்லுக்குள் அகப்பட்ட தேரையா?
செத்து, உறவுகள்
உதிர்ந்துபோன சீவனா?

ரி.சங்கீதா-இறம்பைக்குளம்.
வவுனியா.



**இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்**

### தலைவிதியோ?

புருஷனை இழந்தேன்...!
புத்திரரைத் தானிழந்தேன்!
சுற்றமும் நானிழந்தேன்....!
நானிருந்து என்ன பயன்?


கு.சண்முகம்-வந்தாறுமூலை.

### ஒப்பாரி

அடிமேல் அடி அடித்ததால்,
அம்மியும் நகர்ந்தது!
எங்கள் குடிமேல் செல் அடித்ததால்
இருப்பிடமும் நகர்ந்தது!

வீரசிங்கம் ஸ்ரீதரன்-மல்லிகைத்தீவு.

## கவிதைப் போட்டி இல-176



**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி:- 02.11.1996
-முகவரி- கவிதைப் போட்டி இல.176 தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### ஊரோடிகள் நாம்

கீரிமலை தலை முழுகி மாவிட்ட புரம் விட்டு
நல்லூரைச் சேர எல்லோரையும் செல் என்று
'ஷெல்' வந்து செப்ப சாவகச்சேரி வந்து
மந்துவில் மிருசுவில் சரசாலை மீசாலை
எங்கும் அலைந்த பின்பும் போ என்றே கிளவிநின்றார்
குழவிமுதல் கிழவிவரை கும்பலாய் கிளாலி தாண்டி
பரந்த(ன்) வழி பரவிப் பாய்ஞ்சான் வருகையில்
கண்ணிரண்டும் இரணைமடுவாகி இருண்டு போச்சு!
கரடிப் போக்கால் மூட்டை முடிச்சுடனே தின(ம்)
முரசு மோட்டைக் காட்டைக் கடந்து கிளிநொச்சி
வந்து மாட்டிபாச்சு-இங்கும் 'புக்காரா' தன்
குட்டிகளுடன் வந்து குண்டு கொட்டிக் குவிக்கையிலே
தாண்டிக்குளம் தாண்டவும் வழியின்றி
கல்லறைப் பூமியில் கூடிக் குடியேறிவிட்டோம்.

சிவ.கங்காதரி-மட்டக்களப்பு.

### வாழ்க்கைச் சரிவு

நாட்டுக்கு வரவு வைத்தோம்,
நமக்கென்று ஒன்றும் இல்லை!
மாடாய் உழைத்தோம்,
ஓடாய்த் தேய்ந்தோம்,
மண் சரிவும் சேர்ந்தெம்மைத்
தன்னகத்தே சேர்த்தது!
மீளமுடியாத மலையகத்து மக்கள் நாம்!

திருமதி க.கதிரவேலு-கரப்பன்காடு, வவுனியா.

### இழப்பு

ஒன்னொண்ணா சேர்த்து
ஓரடுக்கு வீடு கட்டி
கண்ணுக்குக் கண்ணாக
காத்து வந்த சொத்தெல்லாம்
கண் மூடிதிறக்குமுன்னே
கற்குவியலாச்சுதம்மா!

திருமதி.யோகாம்பாள் தம்பித்துரை-
பதுளை.

### எங்கு தேடுவேன்?

காணிச்சண்டையிலே-நாளாந்தம்
கால் தேய நடந்தோமே...!
எல்லை வேலி சரிந்துவிட்டால்-
மல்லுக்கட்டி நின்றோமே...!
நாம் வாழ்ந்த வாழ்க்கை எல்லாம்
மண்மேடாய்க் கிடக்கிறதே....
எங்கு தேடுவேன் என் வீட்டு
காணி எல்லை?

அமுதா மகாலிங்கசிவம்-மட்/கல்லடி.

### இது எங்களின் சீவியம்

சண்டைக்குப் பயந்து
ஊர் விட்டு ஓடுவதும்...
வேட்டுக்குப் பயந்து
காட்டுக்குள் ஒளிப்பதும்...
குண்டுக்குப் பயந்து
குன்றுக்குள் வாழ்வதும்...
'எங்களின் சீவியம்!'

அம்பிளாந்துறையூர்-அரியரன்.

### கல்லாய் சமைந்தனையோ?

உற்றார் உறவினரை
உடமைகளை- தொடரும் போர்
முற்றுகையில் இழந்ததனால்
மோன நிலையினில் நீ
வற்றாத துன்பத்தில்
வாடி வதங்கியுமே
கற்கள் நடுவினிலே
கல்லாய்ச் சமைந்தனையோ?

கி.குலசேகரன்-கொஸ்லந்தை.

### அ(ஆ)ழு(ளு)வதும்

இழப்புக்கள் பலயிங்கு
இன்னுமின்னும் தொடர;
அழுகுரலும் கண்ணீரும்
அன்றாடக் கதையாக;
குந்திக்கொண்டு அழுவதும்,
அன்னையினம் தானிங்கு...!
முந்திக்கொண்டு ஆளுவதும்
அந்தயினம் தானேயிங்கு?!

பூ.இதயரெத்தினம்- ஆரையம்பதி-3.

### முரண்பாடு

"எல்லோருக்கும் புகலிடம்"
இரண்டாயிரம் ஆண்டளவில்
என்றது அரச அறிவிப்பு!
இருந்த குடிசையும் இழந்ததனால்
இதுதான் இவளின் குடியிருப்பு!

சி.மு.சுந்தரேசன்-அரசினர்
வைத்தியசாலை, மஸ்கெலியா.

### சின்னம்

அழுகை
எம்
தேசிய கீதம்;
அழிவு
எம்
தேசிய விளையாட்டு!

சுபா வரன்-கண்டி.

### கல்லறைக் காவலர்

காலமிது காலமிது-கல்லறைகள்
இனப்பெருக்கக் கால மிஃது!
தேய்பிறையே இல்லாத வளர்பிறையாய்
கல்லறைகள் பெருகிவர
கல்நெஞ்சக்காரர் தாம் வாழ்வதற்காய்
கல்லறைக்கே எமைக் காவல்
வைத்து உய்கின்ற காலமிது!

சாரதா சிவபாதம்-மட்டக்களப்பு.

## வாசக(ர்) சாலை

அன்பின் ஆசிரியருக்கு,

யாழ்குடாநாட்டில் மர்மமாக ஆட்கள் காணாமல் போவது அதிகரித்துவருவது யாவரும் அறிந்ததே. இந்நிலையில் இச்செயல்களும் பயங்கரவாதமே என கோடிட்டுக்காட்டியமை பாராட்டுக்குரியது.

நவீனன், தெகிவளை.

முரசில் வெளியாகியிருந்த "கைது" எனும் சிறுகதை இன உறவுப் பாலத்தில் புரிந்துணர்வுடன் பயணிக்கும் ஒரு சராசரி மனிதனுக்கு சமூகம் தரும் பரிசை படம் பிடித்துக் காட்டியது. தொடரட்டும் கதாசிரியரின் இலக்கியப் பணி.

அமீர்டீன். கே. முகம்மட், திருகோணமலை.

அன்பின் முரசே!

நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் பலே ஜோர்! ரசிகன் தரும் பரபரப்பான கொள்ளை ராணி பூலான்தேவி தொடர், இலக்கியநயம், ஆகியவை எமது உள்ளங்களில் நிலையான இடத்தைப் பிடித்து விட்டன. ரசிகனுக்கு எமது பாராட்டுக்கள்! முரசு மேலும் மேலும் புதிய அம்சங்களுடன் பவனி வர எமது வாழ்த்துக்கள்!

மகாலிங்கம், பி.கலாவதி, பி.ராஜேஸ்வரி,
ஒகொடபொல, குருநாகல்.

சிந்திக்கத் தூண்டும் சிறப்பான கேள்விகளுக்கு சிந்தியாவின் திறமான பதில்கள்!

'இலக்கிய நயம்' இதனைத் தரும் ரசிகனுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள். அதனோடு கொள்ளை ராணி பூலான் தேவி, காதில பூ கந்தசாமி ரொம்ப ரொம்ப இனிமை.

க. மகேஷ்குமார், ஆண்டிமுனை, உடப்பு.

என் இனிய முரசே,

நீ சுமந்து வரும் அனைத்தும் படு சூப்பர். கல்முனையில் கொல்லப்பட்ட இரு இளைஞர்களும் அப்பாவிகள் என்பதனை முரசு எல்லோருக்கும் விளக்கியிருக்கின்றது. இருந்தும் அவர்கள் மாணவர்களது சீருடையில் வந்ததாகவும் பாடசாலை சீருடையை அவமானப்படுத்தியதாகவும் கிழக்கில் வெளியிடப்பட்ட பிரசுரம் குறிப்பிடுகின்றது. அவர்கள் அவ்வாறான சீருடையில் வரவுமில்லை அவமானப்படுத்தவுமில்லை. என்றோ ஒருநாள் அவர்கள் அப்பாவி என்பது புலப்படும். அப்போது இப்பிரசுரத்தை வெளியிட்டவர்கள் என்ன செய்யப்போகின்றார்களோ?

எஸ். அரஷ், கல்முனை.

எனது அன்பிற்கினிய முரசே! நான் கடல் கடந்து வெளிநாடு வந்தாலும் முரசே உன்னை நான் மறக்கவில்லை. இங்கு வந்ததும் முதலில் உன்னைத்தான் பார்த்தேன். தனிமையில் இருக்கும் எனக்கு உன் மூலம் தான் பொழுது போகிறது.


அதிலும் 'பூலான் தேவி'யின் கதையைப் படிக்கும்போது இப்படி ஒரு கொடுமை வேறு எந்தப் பெண்ணுக்கும் வரக்கூடாது, என்று மனம் துடிக்கிறது. இலக்கியநயம் இனிமையாக இருக்கிறது. முரசே! உன் பணி தொடரட்டும். இதோ எனது வாழ்த்துக்கள்.

ஆர்.பவளம், துபாய், சார்ஜா.

முரசே!

சூடு-சுவை-சுவாரசியம் கலந்து நீ வாரா வாரம் அள்ளிவழங்கும் அத்தனை அம்சங்களும் மிகச் சிறப்பாகவுள்ளன. எக்ஸ்ரே ரிப்போர்ட் மூலம் இருதரப்பு நிலைப்பாடுகளையும் எடுத்துக்கூறிய நாரதருக்குப் பாராட்டுக்கள்.

எஸ். பிரேம் ஆனந்த்,
அக்கரைப்பற்று-9.



என் அன்பின் முரசே!

தித்திக்கும் தேன் தமிழில் வாராவாரம் நீ சுமந்து வரும் அனைத்து ஆக்கங்களும் பிரமாதம். அதிலும் பிரபாகரின் 'தா' தொடர் படு சூப்பர். உன் பணி தொடர என் வாழ்த்துக்கள்.

செல்வி வெ.பாரதி,
பள்ளிக்குடியிருப்பு.

என் பிரிய தினமுரசே!

வாரம் தோறும் உன் வருகைக்காக காத்திருந்து உன் வருகைமூலம் வசந்தமடைகின்றேன். நீ சுமந்து வரும் பூலான்தேவி, 'தா' தொடர் இரண்டும் தனிச் சுவை கொண்டவை. அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை அரசியல் தொடர், தேன் கிண்ணம், ரசிகனின் இலக்கியநயம் எல்லாம் அருமையிலும் அருமை, ரசிகனுக்கும், பட்டுக்கோட்டை பிரபாகருக்கும் எனது பாராட்டுக்கள். உன் இனிய சேவை மேலும் தொடர என் வாழ்த்துக்கள்.

செல்வி ஆ. கீதா, கடியன்லேன.



படிப்பகம்

www.padippakam.com

# துறைமுகப்பகுதிகளில் கடற்புலிகளின் வேவு நடவடிக்கை!

# கடற்பகுதியில் பாரிய தாக்குதலுக்குத் திட்டம்

## திட்டத்தை முறியடிக்க கடற்படை தாக்குதல்!

**வ**டபகுதியில் மழைக்காலம் ஆரம்பித்துள்ளமையால், படை முகாம்களுக்கான கடற்போக்குவரத்தில் கடற்புலிகள் குறுக்கிடலாம் என்று கருதப்படுகிறது.

கடந்த மாதம் 13ம் திகதியன்று திருமலை துறைமுகத்துக்கு வடக்கே கடற்படையினர்மீது கடற்புலிகளின் தாக்குதல் ஒன்றும் இடம் பெற்றது.

திருமலை துறைமுகப் பகுதியைத் தாக்குவதற்கான வேவு பார்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட கடற்புலிகள் எதிர்பாராதவிதமாக கடற்படையினரைச் சந்திக்க நேர்ந்தமையால் தாக்குதலில் ஈடுபட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

துறைமுகங்களுக்கும், படையினரின் கடல்வழிப் போக்குவரத்து விநியோகப் பாதைக்கும் கடற்புலிகளின் பலம் பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது.

இந்நிலையில் கடற்புலிகளின் பலத்தை ஒடுக்குவதற்காகவே வெற்றிலைகேணிப் பகுதியில் உள்ள கடற்புலித் தளம்மீதான பாரிய தாக்குதலுக்கு திட்டமிடப்பட்டதாகத் தெரிகிறது.

புலிகள் இயக்கத்தினர் அத்தாக்குதல் குறித்து செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளனர்.

அச் செய்திக் குறிப்பில் தமது கடற்புலித் தளம்மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படவில்லை.

புலிகள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"21.10.96 அன்று காலையில் கடற்படையும் விமானப்படையும் கூட்டாக நடத்திய தாக்குதல் ஒன்று புலிகளின் எதிர்த்தாக்குதலால் முறியடிக்கப்பட்டது.

சுண்டிக்குளம் கிழக்கு கரையோரப் பகுதியில் அமைந்திருந்த மீன்பிடித் தொழில் செய்வோரின் குடியிருப்புக்கள் மீது படையினர் விமானப்படை, கடற்படை உதவியுடன் தாக்குதல் நடத்தினர். புலிகளும் பதில் தாக்குதல் நடத்தினார்கள்.

இச் சண்டையில் விசேட கொமாண்டோக்களை ஏற்றிவந்த 46 அடி நீளமான விரைவுத் தாக்குதல் படகொன்று புலிகளின் ஆர்.பி.ஜி. தாக்குதலால் சிதைக்கப்பட்டது. அதேவேளை விமானப் படைக்குச் சொந்தமான எம்.ஐ.24 ரக ஹெலிக்கொப்டர் ஒன்றும் புலிகளின் எதிர்த்தாக்குதலில் சேதமடைந்தது. இதனையடுத்து கடற்படையினரும், விமானப் படையினரும் திரும்பிச் சென்றுவிட்டனர்.

இக் கடற்சண்டையில் 20 பீரங்கிப் படகுகள், 2 கிபீர் விமானங்கள் 2 புக்காரா விமானங்கள் என்பவை ஈடுபடுத்தப்பட்டன. குறைந்தது பத்து விசேட கொமாண்டோ படையினர் பலியானதாகத் தெரிகிறது. புலிகள் தரப்பில் மூன்றுபேர் பலியாகியுள்ளனர்," என்று புலிகளின் தலைமைச் செயலக செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

தமது தரப்பில் 9 கடற்படையினர் பலியானதாகவும், 44 கொமாண்டோக்கள் காயமைந்தனர் என்றும் படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

### ஒத்திகையா?

கடற்புலிகளின் தளம்மீது பாரிய தாக்குதல் நடத்தப்பட்டதாகவே படைத்தரப்பினர் கூறியுள்ளனர். ஆயினும் புலிகளின் டபிள்-கப் வாகனம் ஒன்றையே தாம் கைப்பற்றியதாகவும் படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

கடற்புலிகளது தளத்தில் படகுகளும், ஆயுதங்களும் வைக்கப்பட்டிருக்கும். படகுகள் எதனையும் தாம் கைப்பற்றியதாக படையினர் தெரிவிக்கவில்லை.

எனவே கடற்புலிகள் தரப்பில் பலத்த சேதத்தை ஏற்படுத்தும் முயற்சி பயனளிக்கவில்லை என்றே தெரிகிறது.

இதேவேளை புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் திடீரென்று வான் மூலமாக படையினரை தரையிறக்கி தாக்குதல் நடத்துவதற்கான ஒத்திகையாகவும் வெற்றிலைக்கேணி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

கடற்புலிகளின் தளத்தை குறிவைத்துத் தாக்குதல் திட்டமிடப்பட்டாலும், வான்மூலமான தரையிறக்க தாக்குதலை புலிகள் எவ்வாறு எதிர்கொள்கிறார்கள் என்று பரீட்சார்த்தமாக கண்டறியும் நோக்கமும் இருந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

# ஆங்கிலப் பத்திரிகை கிளப்பிய சர்ச்சை!

## ஜனாதிபதி கூறியதாக வெளியான செய்தி

**கொ**ழும்பு ஆங்கில வாரப் பத்திரிகையான 'சண்டே லீடர்' வெளியிட்ட செய்தி ஒன்று சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது.

அச்செய்தி தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக்குழுக்கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டது.

அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டமொன்றில் ஜனாதிபதி தெரிவித்த கருத்து என்று சண்டே லீடர் செய்தி ஒன்றைப் பிரசுரித்திருந்தது.

"விடுதலைப்புலிகள் பௌத்த மத வழிபாட்டுத் தலங்களைத் தாக்குவார்களேயானால், நானே முன்னின்று தமிழர்கள்மீது தாக்குதல் நடத்த வேண்டியிருக்கும்," என ஜனாதிபதி கூறினார் என்று சண்டே லீடர் செய்தி வெளியிட்டிருந்தது.

'சண்டே லீடர்' எவ்வாறான ஆதாரத்தின் படி அச்செய்தியை வெளியிட்டுள்ளது என்பது தெரியவில்லை. எனினும் அச் செய்தியை ஐக்கிய தேசியக் கட்சியினர் தமது பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் விவாதித்ததோடு தமிழ் கட்சிகள் அதனைக் கண்டிக்கவில்லையே என்று வருத்தமும் தெரிவித்துள்ளனர்.

"ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் இனவாதத்துடன் பேசிவருகின்றனர் என்பதை நாம் மறக்க முடியாது. அதே சமயம் ஜனாதிபதி சொன்னதாக வெளியான ஒரு செய்தியை மட்டும் வைத்து நாம் எப்படிக் கண்டனம் தெரிவிக்க முடியும்? இது ஒரு பாரதூரமான விடயம் என்பதால் முதலில் உண்மை நிலையை அறிந்த பின்னரே மேற்கொண்டு கருத்துத் தெரிவிக்கலாம்" என்று தமிழ் கட்சி வட்டாரங்கள் கூறியுள்ளன.

# கிழக்கில் துறைமுகம்! ஆட்சிக்குள் இழுபறி!

## அஷ்ரப்பின் முடிவை ஜனாதிபதி நிராகரிப்பு

**சி**றீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் பொதுஜன முன்னணிக்கும் இடையே ஏற்பட்டுள்ள இழுபறி தொடர்பாக பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் ஒலுவில் பகுதியில் துறைமுகம் ஒன்றை அமைப்பது தொடர்பாகவும், அதற்கு முன்னோடியாக அங்கு கடற்தொழில் பயிற்சி மையம் அமைப்பது தொடர்பாகவுமே பிரச்சனை ஏற்பட்டுள்ளது.

கடற்தொழில் பயிற்சி மையம் திருக்கோணமலையில்தான் அமைக்கப்பட வேண்டும் என்று கடற்தொழில் அமைச்சர் இந்திக குணவர்த்தனா விரும்புகிறார்.

ஏற்கனவே ஒலுவிலில் துறைமுகம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டதால் அதனைக் கைவிட முடியாது என்று கூறியுள்ளார் அமைச்சர் அஷ்ரப்.

இது தொடர்பாக அரசாங்கக் கட்சிக் கூட்டத்தில் காரசாரமான விவாதம் நடைபெற்றது.

திருக்கோணமலையில்தான் கடற்தொழில் பயிற்சி மையம் அமையவேண்டும் என்று ஜனாதிபதியும் தெரிவித்ததாகவும், அதனையடுத்து ஜனாதிபதிக்கும் அமைச்சர் அஷ்ரப்புக்கும் இடையே வாதப் பிரதிவாதங்கள் எழுந்ததாகவும் தெரிகிறது.

"ஒலுவிலில் துறைமுகம் அமைவதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. கிழக்கில் அமையலாம் என்பதுதான் எனது கருத்து" என்றும் ஜனாதிபதி கூறினாராம்.

கொழும்பு துறைமுக அபிவிருத்தி தொடர்பாக நிறுவனம் ஒன்றுடன் அமைச்சர் அஷ்ரப் நடத்திய கடிதப் போக்குவரத்து விடயமும் பிரச்சனைக்கு உள்ளானதாம்.

"அமைச்சர் அஷ்ரப் தான் நினைப்பது போல நடந்துவிட முடியாது" என்ற சாரப்பட ஜனாதிபதி ஒரு கருத்தைக் கூறியதை அடுத்து நிலமை நெருக்கடிக்கு உள்ளானது. அமைச்சர் அஷ்ரப் வெளிநடப்பு செய்ய முற்பட்டார். அமைச்சர் மங்கள சமரவீரா தலையிட்டதால் அந்த முயற்சி தடுக்கப்பட்டது என்று தெரிகிறது.

இதன்பின்னரே முஸ்லிம் காங்கிரசின் உயர்மட்ட கூட்டங்கள் நடத்தப்பட்டு நிலமைகள் குறித்து ஆராயப்பட்டது.

# தாக்குவது புலிகள், சந்தேகவலையில் தமிழ்க் கட்சிகள்!

## முரண்பாட்டை உருவாக்குவதில் புலிகள் தீவிரம்!

**ச**மீபகாலமாக திருமலை, மூதூர் பகுதிகளில் புலிகள் இயக்கத்தினர் ஊடுருவும் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

திருமலையில் ஒரு பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் புலிகள் இயக்கத்தின் நகர்ப்புற கெரில்லாக்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து திருமலையில் உள்ள தமிழ் கட்சிகளின் அலுவலகங்கள் படையினரால் சோதனையிடப்பட்டன.

16.10.96 அன்று திருமலை மாவட்டத்தில் மூதூரில் புலிகள் இயக்கத்தினர் பொலிசார் மீது திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தினார்கள். அதில் ஒரு பொலிஸ்காரர் பலியானார்.

இச் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு அருகே ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க அலுவலகம் அமைந்திருந்தது. சம்பவம் நடைபெற்ற பின்னர் ஸ்தலத்துக்கு வந்த படையினர் அந்த அலுவலகத்தை சோதனையிட்டனர். அங்கிருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினரும் கைது செய்யப்பட்டார். அவர் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. விசாரணையின் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தமிழ் கட்சி அலுவலகங்கள் அருகே தாக்குதல் நடத்தினால் படையினரின் சந்தேகப் பார்வை தமிழ் கட்சிகள் மீதும் திரும்பும். தமிழ் கட்சிகளுக்கும் படையினருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்படும் என்பதை புலிகள் இயக்கத்தினர் புரிந்து கொண்டனர்.

ஏனவே இனிமேல் கிழக்கு மாகாணத்தில் தமிழ் கட்சிகளின் அலுவலகங்கள் அருகே வைத்து படையினர் மற்றும் பொலிசார்மீது புலிகள் இயக்கத்தினர் தாக்குதல் நடத்தலாம் என்று கருதப்படுகிறது.

முன்னர் தமிழ் கட்சிகளுக்கும் புலிகள் இயக்கத்துக்கும் இடையே உள்ள பிரச்சனைகளை படைத்தரப்பினர் பயன்படுத்தினர். இப்போது படையினருக்கும் தமிழ் கட்சிகளுக்கும் இடையே விரிசலை ஏற்படுத்தும் வாய்ப்பு புலிகள் இயக்கத்தினருக்கு கிடைத்துள்ளது.

# படையினர் பாதி -புலிகள் மீதி!

## அணைக்கட்டுத் தகர்ப்பு

(ஏறாவூர் நிருபர்)

**க**டந்த வாரம் கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் வேன் ஒன்று புலிகளால் சித்தாண்டியில் வைத்துக் கடத்தப்பட்ட பின்னர் வேன் கொண்டு செல்லப்பட்ட உள்ளூர் வீதியைப் படையினர் குழிதோண்டி வாகனங்கள் செல்லமுடியாதவாறு ஆக்கியுள்ளனர். இதே காரணத்திற்காகவே முன்னர் படையினரால் பாதியாகத் தகர்க்கப்பட்டிருந்த மகிழையடிக் கட்டு கடந்த 14.10.96 அன்று மீண்டும் பாரிய குண்டு வைத்து முற்றாகத் தகர்க்கப்பட்டது. குண்டு வெடிப்புச் சத்தம் 5 மைல் தொலைவுக்குக் கேட்டது.

இந்த அணைக்கட்டு முன்னர் படையினரால் தகர்க்கப்பட்ட பின்னர் புலிகள் இரும்புக் கேடர்களைப் போட்டு அதைத் திருத்தியமைத்தனர். பதுளை வீதியில் படையினர் நிலை கொண்டிருந்த போது பாவித்த கிராம சேவையாளர் ஒருவரின் வீட்டை உடைத்து அப்பொருட்களைக் கொண்டே புலிகள் இந்த அணைக்கட்டைத் திருத்தியிருந்தனர் என்று கூறப்படுகிறது.

# மலையகப் பகுதிகளில் ஆசிரியர் நியமனம்

## நியமனம் வழங்க நிதி போதாது!

(கண்டி நிருபர்)

**அ**ரசாங்கப் பாடசாலைகளிலும் தோட்டப் பாடசாலைகளிலும் தமிழ் மொழி மூல தகுதிகாண் ஆசிரியர்களை நியமிக்கும் பொருட்டு இவ்வாண்டு பெப்ரவரி மாதம் முறையே 10ம் 24ம் திகதிகளில் நாடு பூராவும் இடம்பெற்ற போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் முதற்கட்டமாக 415 ஆசிரியர்கள் நியமிக்கப்பட இருக்கின்றனர்.

இதே வேளையில் அரசாங்க தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்கள் உதவி அரச அதிபர் பிரிவு அடிப்படையில் நிரப்பப்படவுள்ளன.

கண்டி மாவட்டத்தில் 100 பேரும் மாத்தளை மாவட்டத்தில் 20 பேரும் நுவரெலியா மாவட்டத்தில் 60 பேரும் இவ்வாறு நியமனம் பெற இருக்கின்றனர்.

இதே வேளையில் தோட்டப்புறப் பாடசாலைகளில் மத்திய மாகாணத்தில் 235 ஆசிரியர்கள் நியமிக்கப்பட இருக்கின்றனர்.

இத்தொகையில் 31 பேர் கண்டி மாவட்டத்திற்கும், மாத்தளை மாவட்டத்திற்கு 10 பேரும் ஏனையோர் நுவரெலியா மாவட்டத்திற்கும் நியமனம் பெற இருக்கின்றனர்.

மத்திய மாகாண சபையின் கல்வி அமைச்சு மூலம் இவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட இருப்பதாயினும் போதிய நிதி இல்லாமை காரணமாக இந்த நியமனங்கள் நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இடம்பெறலாம் எனவும் கருதப்படுகின்றது.

# 'சர்வதேச கவன ஈர்ப்பு வாரம்'

**அ**ரசுக்கு எதிராக சர்வதேச ரீதியிலான பாரிய பிரசார நடவடிக்கை ஒன்றுக்கு புலிகள் இயக்கத்தினர் திட்டமிட்டுள்ளனர்.

'அனைத்துலக தமிழர் சம்மேளனம்' என்ற பெயரில் வெளிநாடுகளில் உள்ள புலிகள் இயக்க ஆதரவு அமைப்புக்கள் பிரசாரத்தை முடுக்கிவிட திட்டமிட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக 'சர்வதேச கவன ஈர்ப்பு வாரம்' அனுஷ்டிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

அக்டோபர் 30ம் திகதி முதல் நவம்பர் 5ம் திகதிவரை 'சர்வதேச கவன ஈர்ப்பு வாரம்' வெளிநாடுகளில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

'மறந்ததோ வையம் மறத்தமிழ் இனத்தை' என்ற கோஷத்துடன் கவன ஈர்ப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாரத்தில் இலங்கையில் தமிழ் மக்கள் நிலை தொடர்பாக சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லும் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# போர் நிறுத்தம் மீறப்பட்டதாக புலிகள் புகார்

## மூன்று புலிகள் பலியானதாகத் தெரிவிப்பு

**இ**ளம்பிள்ளைவாதத் தடுப்பூசி ஏற்றுவதற்காக செப்டம்பர் 8ம் 9ம் திகதிகளிலும், அக்டோபர் 11ம் 12ம் திகதிகளிலும் போர் நிறுத்தம் செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஐக்கியநாடுகள் சபையின் யுனிசெப் நிறுவன கொழும்புப் பிரதிநிதியே அவ் வேண்டுகோளை விடுத்திருந்தார்.

குறிப்பிட்ட திகதிகளில் போர் நிறுத்தத்தை கடைப்பிடிப்பதாக புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் யுனிசெப் கொழும்பு பிரதிநிதிக்கு கடிதம் மூலமாக அறிவித்திருந்தார்.

எனினும் அரசாங்கம் அது குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை. செப்டம்பர் 7ம் 8ம் திகதிகளில் தாம் போர் நிறுத்தத்தை கடைப்பிடித்ததாக புலிகள் அறிவித்திருந்தனர்.

மீண்டும் இம்மாதம் கடந்த 11ம் 12ம் திகதிகளில் தாம் போர்நிறுத்தத்தை கடைப்பிடித்தாகவும், படையினர் அதனை மீறிவிட்டனர் என்றும் புலிகள் இயக்கத்தினர் புகார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து புலிகள் இயக்கத்தினர் தெரிவித்திருப்பதாவது:

கடந்த 12ம் திகதி யாழ்ப்பாணத்தில் கொக்குவில் வீதியால் சென்று கொண்டிருந்த புலிகள் மீது படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதில் கப்டன் மணிமாறன் என்பவர் பலியாகியுள்ளார். படையினர் தாக்கிய போதும் புலிகள் திருப்பித் தாக்கவில்லை.

மேலும் அதேநாள் படையினரின் தாக்குதலில் மேஜர் இளஞ்செழியன், கப்டன் உதயராசா ஆகியோர் பலியாகியுள்ளனர்.

குழந்தைகளின் நலனுக்காக விடுதலைப் புலிகள் அமைதிகாத்த நேரத்தில் சிறீலங்கா படையினர் பல இடங்களில் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

# "பேச்சுவார்த்தைக் கதவுகள் மூடப்படுகின்றன"

## பிரபா மீதான வழக்கு! புலிகள் வரவேற்பு!

**கொ**ழும்பு மத்தியவங்கி குண்டு வெடிப்பு தொடர்பாக பிரபாகரன், பொட்டம்மான் உட்பட புலிகள் இயக்கத்தினர் மீது அரசாங்கம் வழக்குத் தொடுத்துள்ளமை தெரிந்ததே.

இவ்வழக்குத் தொடர்பாக புலிகள் இயக்கத்தினர் உத்தியோக பூர்வமாக கருத்து எதனையும் வெளியிடவில்லை.

வன்னியில் இருந்து வெளியாகும் புலிகள் இயக்க தினசரியான 'ஈழநாதம்' பத்திகையில் அரசாங்கம் தொடுத்துள்ள வழக்குத் தொடர்பாக ஆசிரியர் தலையங்கம் தீட்டப்பட்டுள்ளது. புலிகள் இயக்கத்தினரின் கருத்தை ஒட்டியே ஈழநாதம் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் வெளியாவது வழக்கமாகும்.

அந்த ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொழும்பு மத்தியவங்கி குண்டுவெடிப்பு தொடர்பாக சிறீலங்கா அரசு கொழும்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

புலிகள் இயக்கத்தை தடைசெய்தால் என்ன, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தால் என்ன, இவ்வாறான நடவடிக்கைகளால் பயனேதும் விளையப்போவதில்லை. இனப் பிரச்சனை விடயத்தில் இன்றுள்ள அரசியல், இராணுவ யதார்த்தங்களை இத்தகைய நடவடிக்கைகள் மாற்றிவிடப்போவதில்லை.

அரசியல் தீர்வொன்றுக்கான சமாதானப் பேச்சுவார்த்தைக் கதவுகளை சந்திரிக்கா அரசு படிப்படியாக மூடிவருவதையே இத்தகைய நடவடிக்கைகள் புலப்படுத்துகின்றன.

அரசியல் தீர்வுக்கான கதவுகளை சந்திரிக்கா அரசு இறுக்கமாக மூடிக்கொள்வதும் நல்லதுதான். தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பொறுத்தவரை அது சாதகமான நடவடிக்கையே. இவ்வாறான சாதக நிலையை அரசு தானாக முன்வந்து செய்வதை வரவேற்கலாம். இவ்வாறு 'ஈழநாதம்' தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

# பிச்சைச் சம்பளம் இடைநிறுத்தம்!

## பரம ஏழைகள் பரிதவிப்பு!

(ஏறாவூர் நிருபர்)

**பி**ரதேச செயலகங்களினால் பரம ஏழைகளுக்கும் இல்லாத இயலாதவர்களுக்கும் மாதாமாதம் வழங்கப்பட்டுவரும் பொதுசன உதவிப் பணம் (பிச்சைச் சம்பளம்) தொழுநோயாளர் உதவிப் பணம், காச நோயாளர் பணம், குஷ்டரோக நோயாளர் பணம், புற்று நோயாளர் பணம் என்பனவற்றை இவ்வருட இறுதிக் காலாண்டுப் பகுதிக்கு வழங்க வேண்டாமென்று கேட்டுக் கொள்ளும் சுற்று நிருபத்தை வடக்கு கிழக்கு மாகாணசபை சகல பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

"நடப்பு வருடத்தின் 4ம் காலாண்டிற்கான நிதி ஏற்பாடு பற்றாக்குறையாக இருப்பதனாலும், குறை நிரப்பு மதிப்பீடு ஏற்றுக் கொள்ளப்படுவது சந்தேகத்திற்குரியதாக இருப்பதாலும் மறு அறிவித்தல் வரும்வரை 4ஆம் காலாண்டிற்கான எந்தவிதக் கொடுப்பனவுகளையும் மேற்கொள்ள வேண்டாமெனத் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்நிலையில் ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெறாமல் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளுக்கு இத்திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது என்பதையும் கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." என்று வட கிழக்கு மாகாண சமூக நலத்துறைத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் தெ.து.விஜயலெட்சுமி அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்.

இதன்பிரகாரம் ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் இக்கொடுப்பனவுகளைப் பெற்றுவந்த- இல்லாத இயலாத ஆயிரக்கணக்கான பரம ஏழைகள் பெருங் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளார்கள். இந்த பரம ஏழைகளது பிச்சை மடியிலும் யுத்தம் கை வைத்து விட்டதோ என்ற கேள்வி எழுந்துள்ளது. ஒவ்வொரு பிரதேச செயலகமும் மாதாந்தம் 1500 இற்கு மேற்பட்ட பரம ஏழைகளுக்கு சுமார் இரண்டு இலட்ச ரூபா வரையில் பொதுசன உதவிக் கொடுப்பனவுகளை வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

www.padippakam.com

## "கைக்குண்டை படையினரே வைத்தனர் கடை உரிமையாளரையும் கைது செய்தனர்!"

யாழ் நகரில் 'லிங்கம் கூல்பார்' உரிமையாளர் கைதுசெய்யப்பட்ட முறை அநீதியானது. திட்டமிட்டு பழிபோட்டுள்ளனர் என்று சட்டத்தரணி விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார். அவர் முரசுக்கு எழுதியுள்ள கடிதத்தில் பின்வருமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது:

ஐயா!

தினமுரசில் யாழ்ப்பாணம் மணிக்கூட்டு கோபுர றோட்டில் இருக்கும் லிங்கம் கூல்பார் சொந்தக்காரராகிய நாகலிங்கம் அப்புலிங்கத்தை பதினேழு இலட்சம் கொடுத்தமைக்காக இராணுவம் கைது செய்ததாக எழுதப்பட்டிருந்தது. அவரின் சட்டத்தரணி என்ற கோதாவில் உண்மையாக நடந்தவற்றைத் தங்களுக்கு அறிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

புலிகள் அவரிடமிருந்து பதினேழு இலட்சம் பெற்றது உண்மையே. ஆனால் அதற்காக அவர் கைது செய்யப்படவில்லை. இரு கைக்குண்டுகளைக் கடையில் வைத்திருந்தார் என்ற ஒரு பொய்க் குற்றச்சாட்டின் பேரில் அவரும் அங்கு வேலை செய்யும் ஏனைய பன்னிரண்டு பேரும் கைதாகி தற்பொழுது கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் இருக்கிறார்கள்.

23.8.96 இல் பல இராணுவ வீரர்களும் சிவில் உடையணிந்த ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தரும் கடைக்குச் சென்றனர். முதலில் பொலிஸ் உத்தியோகஸ்தர் கடைக்குள் சென்று அங்கே உள்ள எல்லா கன்டோஸ் பெட்டிகளையும் சோதித்தார். கடைக்குள் இருக்கும் எஞ்சின் அறையின் பக்கத்தே ஒரு தொழிலாளியின் முன்பே இச்சோதனை நடந்தது. அந்தச் சோதனையில் ஒன்றும் எடுக்கப்படவில்லை.

பின்பு அந்தப் பொலிஸ் உத்தியோகஸ்தர் கடைக்கு வெளியே சென்று ஒரு இராணுவ உத்தியோகஸ்தரை கடைக்குள்ளே கூட்டி வந்தார். அந்த இராணுவ அதிகாரி கடைக்குள்ளே வந்ததும் தனது பொக்கற்றுக்குள் இருந்து இரண்டு கைக்குண்டுகளை எடுத்து, அவற்றை அந்தக் கடைக்குள் இருந்து எடுத்ததாகச் சொன்னார்.

அதை அங்கே வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளி மறுத்தார். பின்பு நாகலிங்கம் அப்புலிங்கமும் கடையில் வேலை செய்யும் ஏனைய பன்னிரண்டு தொழிலாளிகளும் தாக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு கடைமூடப்பட்ட பின்பு அவர்கள் இராணுவ உத்தியோகஸ்தர்களால் இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பின்னர் காங்கேசன்துறைப் பொலிஸில் பாரம் கொடுக்கப்பட்டது. இது கூல்பாரை மூடுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையாகத் தோன்றுகிறது.

உண்மையுள்ள,
அ.விநாயகமூர்த்தி.

ஆசிரியர் குறிப்பு:- சட்டத்தரணி விநாயகமூர்த்தி முரசில் வெளியான செய்தியை சரியாகக் கிரகிக்கவில்லை என்று நினைக்கிறோம். 'லிங்கம் கூல்பார் உரிமையாளர் புலிகளுக்கு பணம் கொடுத்ததாக சந்தேகிக்கப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ளார்' என்று மட்டுமே முரசில் செய்தி வெளியாகியிருந்தது. அவர் புலிகளுக்கு பணம் கொடுத்ததாகவோ, அது பதினேழு லட்சம் என்றோ முரசு செய்தி வெளியிடவில்லை. எனவே முரசின் செய்தியில் தவறு இல்லை.

## "தமிழ் அமைப்புக்களை உடன் நிராயுதபாணியாக்கவும்"
## "ஈ.பி.டி.பி. மீது உடன் விசாரணை தேவை"
## கிழக்கு 'சிங்கள ஐக்கிய முன்னணி' கோரிக்கை!

தமிழ் அமைப்புக்களை நிராயுதபாணியாக்குமாறும், ஈ.பி.டி.பி. அமைப்பு மீது குற்றம் சாட்டியும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவுக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. 'கிழக்கு சிங்கள மக்கள் ஐக்கிய முன்னணி' என்ற பெயரில் அக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. 'திவயின' பத்திரிகையில் முக்கிய இடமளித்து அக்கடிதம் வெளியிடப் பட்டிருந்தது.

அக்கடிதத்தில் பின்வருமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது:

'திருமலையில் ஈ.பி.டி.பி. செயலகத்திற்கு நடாத்திய தாக்குதல் தொடர்பாக பொதுவான விசாரணையொன்று நடத்துக' எனும் தலைப்பில் மேன்மை தங்கிய ஜனாதிபதிக்கு ஈ.பி.டி.பி. முன்வைத்திருக்கும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை அனைத்தும் உண்மைக்கு மாறானவை என்பதை தெரிவிக்கின்றோம்.

ஈ.பி.டி.பி. பாராளுமன்ற அங்கத்தவர் ரமேஸ் நடராசா அவர்களின் ஒப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள இக் கடிதத்தில் இதன் பொறுப்பை முழுமையாக திருகோணமலை சிங்கள மக்கள் மீதும் பொலிஸ் உத்தியோகத்தர் மீதும் சுமத்தி தங்களை காத்துக்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி.யினர் 1996ம் ஆண்டு ஆரம்பம் முதல் மனித படுகொலைகள் பொருட்டு இரகசியமாக பேச்சுவார்த்தை நடாத்தி, மிகவும் தந்திரோபாயமாக இக் கொலைகளை திட்டமிட்டு செய்கின்றனர். இவை வெளிவருகின்ற அனைத்து சந்தர்ப்பத்திலும் அரசையும், உயர் அதிகாரிகளையும் தவறாக வழி நடாத்தி ஈ.பி.டி.பி. தன்னைப் பாதுகாத்துக் கொள்கின்றது.

திருமலையில் மனித வேட்டைகள் பல நடைபெற்றுள்ளன. திருமலை சுதந்திரக்கட்சி நகரசபை உறுப்பினர் எல்.ஜி.எச். கமகீர்த்தன, இராணுவ கப்டன் ஹேரம் பிரகாஷ், மற்றும் அவரது தாயார், உளவுப் பிரிவு உத்தியோகத்தர் கள் பத்துப்பேர், காணி அதிகாரி தயானந்த பீரிஸ் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

இதற்கு மேலாக இப்பிரதேசத்தில் செயல்படும் பிக்குமார்கள் உட்பட சீனக்குடா பிக்குவிற்கும் தாமானதுறா ஹாமி அவர்களுக்கும் தினம் தோறும் தொலைபேசி மூலம் மரண அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. அத்துடன் திருகோணமலை அரச அதிபருக்கும் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. போதி விகாரைகளின் பெரும் சொத்தான வெள்ளரசு மரங்களை போயாதினங்களில் வெட்டுதல், நகரத்தில் அரச காணிகளை கொள்ளையடித்தல், இக்காணிகளில் தமிழர்களை மட்டும் குடியேற்றும் சம்பவங்கள் தொடர்பாக ரமேஸ் நடராசா அவர்கள் ஜனாதிபதிக்கு விளக்கக் கூறாமல் இருக்கின்றார்.

மேற்குறிப்பிட்ட சம்பவங்கள் தொடர்பாக விசுவாசித்திற்கும் சிங்கள மக்களின் குரல்களை அரச உயரதிகாரிகள் செவி மடுக்காமல் இருப்பதுடன் மேற்குறிப்பிட்ட சம்பவங்கள் தொடர்பாக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் பொலிஸ் அதிகாரிகளினால் முடியாமல் இருக்கின்றது.

96.10.10 ம் திகதி நடைபெற்ற சம்பவத்தை முழுமையாக திரிவுபடுத்தி ஜனாதிபதிக்கு காரணங்களை முன்வைத்திருக்கும் பாராளுமன்ற அங்கத்தவர் ரமேஸ் நடராசா அவர்கள் தம்முடைய கைகளில் உள்ள இரத்தக் கறையை சுத்தமாக்க முயலுகிறார் என்பது தெளிவாகின்றது.

இவ்வாறான சூழ்நிலைகள் காரணமாக எமது பொறுமையின் வரையறை எம்மையும் மீறிச் செல்ல இடமுள்ளதுடன் இந்த ஈ.பி.டி.பி.க்கு பதில் அளிப்பது வெகு தூரத்தில் இல்லையென்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு கிழக்கு சிங்கள ஐக்கிய முன்னணியின் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## மன்னார் நிலவரம்

(மன்னார் நிருபர்)

* மன்னார் நகரில் பொதுத் தொலைபேசிக்கூடங்களை நிறுவுமாறு பொது மக்கள் கோரியுள்ளனர்.
* இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் வர்த்தக சேவை நிகழ்ச்சிகளை மன்னார்ப் பகுதியில் தெளிவாகக் கேட்க முடிவதில்லை.
* 1995 ஆம் ஆண்டுக்கான ஆபத்துக் கால ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் மன்னாரில் இதுவரை வழங்கப்படவில்லை.
* தகுதிகாண் நிலை ஆசிரியர் நேர்முகப் பரிட்சைக்கு மன்னார் மாவட்டத்திலிருந்து 67 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.
* மன்னார்ப் பகுதியில் அரிசியின் விலை உயர்ந்துள்ளது. சம்பா அரிசி ஒரு கிலோ 32 ரூபா வரை சில கடைகளில் விற்கப் படுகின்றது.
* மன்னாரிலிருந்து பேசாலைக்குச் செல்லும் தனியார் வேன்கள் சிலவற்றில் எந்த இடத்தில் இறங்கினாலும் ரூபா 10 அறவிடப் படுகின்றது.

## போதைக் கடத்தலுக்கு மரண தண்டனை!
## புலிகள் கடத்தியதாக குமார் சட்டவாதம்

(புத்தளம் நிருபர்)

போதைவஸ்து கடத்திய புத்தளம் நகரைச் சேர்ந்த முஸ்லிம் வாலிபரொருவருக்கு நீர்கொழும்பு உயர் நீதி மன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

இது குறித்து மேலும் கூறப்படுவதாவது:- செய்யது கவுஸ் முஹம்மது மவ்பீர்(27) என்பவர் புத்தளம் நகரிலுள்ள வான் வீதி, இலக்கம் 9 என்னும் வதிவிடத்தைக் கொண்டவர். இவர் கடந்த 17.10.1989 ஆம் ஆண்டு வெளிநாட்டிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்திலிறங்கிய போது அவரால் கடத்திவரப்பட்ட 796.2 கிராம் "ஹெரோய்ன்" என்னும் போதை வஸ்த்தை பொலிஸார் கண்டு பிடித்தனர்.

சந்தேக நபரைக் கைது செய்தபோது, தான் இலங்கைப் பிரஜையல்ல என்றும், தான் ஒரு பங்களாதேஷ் பிரஜையென்றும் தனக்கு தமிழோ, சிங்களமோ தெரியாது எனவும் கூறி வங்காள மொழியிலேயே பேசி நடித்துள்ளார். பின்னர் இவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பிணையில் விடப்பட்டார்.

பின்னர் குற்றப் புலனாய்வுத் துறையினர் தீவிர விசாரணைகளை நடாத்தியதில் சந்தேக நபர் ஒரு இலங்கைப் பிரஜையென்றும் புத்தளம் நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒரு முஸ்லிம் எனவும் தெரிபவந்தது.

பிணையில் விடப்பட்டிருந்த சமயம் சந்தேக நபர் தலைமறைவானார். எனினும் சந்தேக நபரின்றியே வழக்கு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவர் குற்றவாளியாக காணப்பட்டதையடுத்து அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

பின்னர் அவர் சி.ஐ.டி. பிரிவினரால் கைது செய்யப்பட்டு நீர்கொழும்பு உயர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். இவர் சார்பாக வாதாடிய பிரபல சட்டத்தரணி திரு. குமார் பொன்னம்பலம் வாதாடுகையில், இவர் வேண்டுமென்றே ஒளிந்திருக்கவில்லையென்றும் புலித்தீவிரவாதிகள் இவரைக் கடத்திச் சென்று பின்னர் விடுதலை செய்தனர் என்றும் வாதாடினார்.

இந்தக் கூற்றை நீர்கொழும்பு உயர் நீதிமன்றம் நிராகரித்தது.

இதன்பிரகாரம் கடந்த திங்கட்கிழமை (7.10.96) நீர்கொழும்பு உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. காமினி அபேரத்தினா, முன்னர் விதிக்கப்பட்ட மரண தண்டனையை ஊர்ஜிதம் செய்து தீர்ப்பு வழங்கினார்.

## நீர்கொழும்பில் இரதோற்சவம்

நீர்கொழும்பு ஸ்ரீ முத்துமாரியம்மன்-கதிர் வேலாயுத சுவாமி, சித்திர அலங்கார இரதத்தின் மேல் ஆரோகணித்து சகல விருதுகளுடனும் அடியார்கள் பக்தி திருநாமங்களை துதித்துவர, நாதஸ்வரம், கிளாரினட், பாண்ட் வாத்தியங்கள், காவடி, மயிலாட்டம், கரகாட்டம், யானை, பொய்க்கால் குதிரை முதலிய நிகழ்ச்சிகளுடன் 21.10.96 அன்று வீதிவலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

அன்றையதினம் நாதஸ்வர வித்துவான் ஆர்.வி. செல்வராஜா குழுவினரோடு தவில் புகழ் ஆர்.எஸ்.வி. ஸ்ரீகாந், எம்.கே. கலைச்செல்வன் மற்றும் வி.கே. பஞ்சமூர்த்தி, எஸ். கமலஹாசன், ஆர். புண்ணியமூர்த்தி, பி.முருகதாஸ் இவர்களும் இணைந்து கான மழை பொழிந்து பக்தர்களின் ஆனந்தக் கரகோசங்களைப் பெற்றமை நிகழ்ச்சியின் சிறப்பம்சங்களாய் அமைந்தன.

## படையினர் வழங்கும் அடையாள அட்டைகள்

(திருமலை நிருபர்)

திருக்கோணமலையில் குடியிருப்பாளர்களுக்கு இராணுவத்தினரால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகள் யாவும் மீளப் புதுப்பிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பதினைந்து வயதுக்கு மேற்பட்ட எல்லாக் குடியிருப்பாளர்களுக்கும் விசேட மாவட்ட அடையாள அட்டைகள் வழக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பழைய அட்டைகளில் சிதைவுகள், மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாமெனப் பாதுகாப்பு அதிகாரிகள் கருதுவதாலேயே புதிய அட்டைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக அறிய வருகின்றது.

இப்பணி கிராம சேவகர்கள் ஊடாகவே நடைபெற்று வருகின்றது.

இது இவ்வாறிருக்க, சகல குடியிருப்பாளர்களும் தங்களது குடும்ப அட்டைகளையும் புதுப்பிக்க வேண்டுமென்று நகரப் பொலிஸாரும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.


### ரிஷி அஜமாமிச லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 195/=,105/=
தங்க பஸ்பம் கலந்தது 990/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 890/=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398

### றெறாசோ ஷிப்ஸ்
(TERRAZZO CHIPS)

★ கலர்பவுடர் (Pigments) (Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்

றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

### Bright - 1997 ஆண்டு மாணவர் களுக்கான
ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைமுன்னோடிப் பயிற்சி
Bright ன் தபால் மூலம் கல்வி

புதிய வெற்றிக்கனி 1-10

புதியதோர் அமைப்பு, புதியதோர் உத்வேகம், அறிவு, திறன், மனப்பாங்கு வளர்ச்சியூடாக புதியதோர் வழிகாட்டல் நூலாக வெளிவரவுள்ளது.
புதிய வெற்றிக்கனியை தொடர்ச்சியாக பெற விரும்புவோர் விண்ணப்பப்படிவம் பெற தொடர்பு கொள்க.

Bright Book Centre (Pvt) Ltd
S-27, First Floor, P.O. Box 162
Colombo Central Super Market Complex
Colombo -11 T.P : 434770

### ஆண்டு 1–7 வரை சகல பாடங்களும், (Scholar ship வகுப்புக்கள் உட்பட) உங்கள் வீட்டில் வந்து கற்றுக் கொடுக்கப்படும்.

Contact:
Mrs. Rohini Ponniah
17/4 B, Mayura Place,
Colombo-06.
T.P : 591106

### Bright ன் புலமைப்பரிசில் பரீட்சை
மாணவர்களுக்கு மலிவு விலையில் புத்தகப் பொதி

| | |
|---|---|
| வெற்றிக்கனிக் களஞ்சியம் 1-6 | 250.00 |
| வெற்றிக்கனிக் களஞ்சியம் 7-12 | 250.00 |
| புலமைப்பரிசில் மாதிரிவினா விடை | 100.00 |
| பொது விவேகமும் பாடநூல் | 75.00 |
| பொது உளச்சார்பு செயல்நூல் | 60.00 |
| மொத்தம் | 735 |
| Brightன் கழிவு | 235 |
| | 500 |

V.P.P. உண்டு
தபாற் செலவு இலவசம்

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27 First Floor P.O.Box - 162
Colombo Central Super Market Complex
Colombo -11 T.P:434770

### Bright ன் தபால் மூலம் கல்வித்திட்டம்

மூன்றே மாதங்களில்
ஆங்கிலம்/ சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத் தரப்படும்
விபரங்களுக்கு கீழ்க்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க.

பெயர் ..............................
விலாசம் ..............................

BRIGHT BOOK CENTRE (PVT) LTD
S-27, FIRST FLOOR, P.O.BOX 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX,
COLOMBO 11. TEL : 434770

### மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPHY)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

ஒக்டோபர் 19 முதல் 31 வரை Dr.P. ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.,) COLOMBO 11. T.P: 436383, 436390 Fax : 436439 நவம்பர் 4, 5 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஓட்டமாவடியிலும், நவம்பர் 9, 10, 11 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் DR.P.ARUMUGAM No.35, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOஅவிலும் சந்திக்கலாம்.

### 3 மாதத்தில் தீர்வு



கணவன்-மனைவி பிணக்கு, பிரிந்தவர் ஒன்றுசேர, காதலித்தவர் திருமணம் புரிய, தொழில் உயர்ச்சியை மேம்படுத்த, வீழ்ச்சியுற்ற தொழிலை வீழ்ச்சி அடையா வண்ணம் இருந்த நிலைக்கு 3 மாதத்திற்குள் கொண்டு வர, வன்னிய தொழில் கிடைக்க, திருமணமே ஆகாதென விரக்தி உற்றோருக்கு தெய்வீக வரத்தால் திருமணம் நடைபெற இன்னும் முனிவர்களால் அருளிய ஜீவிய கால காண்டம்-நாடி ஜோதிடம் எழுதிக் கொள்ள, அக்குபஞ்சர் சிகிச்சை மூலம் காது கேளாதவர், கண் தெரியாதவர், வாய்பேச முடியாதவர்கள், பாரிச வாதம், முடக்கு வாதம், இடுப்பு வலி, அஸ்மா, படபடப்பு, வீரியமின்மை, பெண்களுக்கு வெள்ளைபடுதல், மாதவிடாய் கோளாறு, மனநோய் (ஹிஸ்டீரியா) குழந்தை பேறின்மை, பாலியல் குறைபாடுகள், ஞாபக சக்தி இன்மை, நித்திரை இன்மை, பசியின்மை, தலை முடி உதிர்தல், தோல், நோய் இப்படி தீர்க்க முடியாத வியாதிகளுக்கு மனோதத்துவ ரீதியிலும், வைத்திய முறையிலும், மாந்திரிக முறைகளிலும் வெற்றி கண்டவர். எத்தனை எத்தனையோ பேர்-இதைவிட பெரிய சக்தி வந்தாரை வாழவைக்கும் மகாசக்தி ஸ்ரீ துர்கா தேவியின் அருளால் வசதி அற்றோருக்கு எம்மாத கடைசியும் கொழும்பிலும், நுவரெலியாவிலும் இலவச அற்புத ஞான தியான பூஜை நடைபெறுகிறது. தேவைகளுக்கு முன் அறிவித்தலுடன் தொடர்புகொள்ளவும். தொடர்புகளுக்கு:-

P.K.SAAMI (J.D.G.A.N) & J P, [illegible] மாந்திரிக உச்சாடனபீடம்,
162, கொட்டாஞ்சேனை வீதி, [illegible], கொழும்பு-13.
தொலைபேசி - 01.342463/64 344832 விசேட பிரிவு - 344831 EXT FRS

### விளம்பரப் பகுதி

காண்டம்
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை,
கொழும்பு-06
T.P: 586218, 078-63611
Fax: 503030




படிப்பகம்

www.padippakam.com



நாரதர்

# கிழக்கில் ஆயுதக் களைவுகள்!

தமிழ் அமைப்புக்களிடம் உள்ள ஆயுதங்களை களைந்துவிட வேண்டும் என்று பௌத்த மதகுருமார் சிலர் உட்பட, கிழக்கு சிங்கள முன்னணி என்று புதிதாக முளைத்துள்ள ஒரு அமைப்பும் கோரிக்கை எழுப்பியிருக்கிறது.

அக்கோரிக்கையை அரசாங்கமும் ஓரளவுக்கு செவிமடுத்துள்ளது என்றுதான் தெரிகிறது.

மட்டக்களப்பிலும், திருமலையிலும் புளொட், ரெலோ அமைப்புக்களிடம் ஆயுதங்கள் மீளப்பெறப்பட்டுள்ளன.

புலிகள் தவிர்ந்த தமிழ் கட்சிகளின் நடவடிக்கைகளை இரண்டுவிதமாக நோக்க வேண்டும்.

ஒன்று: அரசியல் கட்சிகள் என்ற வகையில் அவற்றின் செயற்பாடுகள்.

இரண்டு: தமது நிதித் தேவைக்காக பொதுமக்களிடம் பலாத்காரமாக நிதி திரட்டும் நடவடிக்கைகள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூரில் முஸ்லிம் ஒருவரிடம் நிதிவாங்க ரெலோ இயக்கம் முயற்சி செய்தது. இறுதியில் அந்த முஸ்லிம் கொல்லப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து ரெலோ உறுப்பினர்கள் சிலர் கைதுசெய்யப்பட்டனர். ஆயுதங்களும் மீளப்பெறப்பட்டன.

இதேபோல மட்டக்களப்பில் நிதி திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டதாக புளொட் உறுப்பினர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஒவ்வொரு இயக்கத்துக்கும் தமது உறுப்பினர்களை பராமரிக்க நிதித் தேவை இருக்கிறது.

இன்று ஜனநாயகப் பாதைக்கு திரும்பியுள்ள சகல தமிழ் கட்சிகளும் முன்னர் ஆயுதம் ஏந்திய இயக்கங்களாக இருந்த போது பல்வேறு வழிமுறைகளில் நிதி திரட்டலில் ஈடுபட்டவைதான்.

எப்படி நிதி பெறுகிறோம் என்பது முக்கியமல்ல, பெறும் நிதியை எதற்காகப் பயன்படுத்துகிறோம் என்பதுதான் முக்கியம் என்று நியாயம் சொல்லப்பட்டே நிதி திரட்டல்கள் நடந்தன.

இதற்கு புலிகள் இயக்கத்தினரும் விதிவிலக்கல்ல.

ஆனால் இப்போது புலிகள் தவிர ஏனைய இயக்கங்கள் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டுள்ளன. ஜனநாயகப் பாதைக்கு திரும்பியுள்ளதாகக் கூறுகின்றன.

இந்நிலையில் முன்னர் நிதிதிரட்ட சொல்லப்பட்ட காரணங்கள் பல இல்லாமல் போய்விட்டன.

ஆயுதங்கள் வாங்கிச் சேகரிக்க வேண்டும்.

ஆயிரக்கணக்கான உறுப்பினர்களை இயக்கத்தில் சேர்த்து பராமரிக்க வேண்டும். சர்வதேசரீதியாக பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். இதற்கெல்லாம் உண்டியல் குலுக்கியா பணம் சேர்க்க முடியும்? என்ற கேள்விக்கு இடமில்லாமல் போய் விட்டது.

புலிகள் இயக்கம் தவிர்ந்த ஏனைய இயக்கங்கள் அவ்வாறான கேள்வியை எழுப்ப முடியாத நிலைக்கு வந்துவிட்டன.

எனினும் சில இயக்கங்கள் தற்போதும் பரவலான நிதி திரட்டலில் பலாத்காரமான முறையில் ஈடுபடவே செய்கின்றன.

அதிலும் சாதாரண பொதுமக்களிடமும் மிரட்டிப் பணம் பறிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றன.

இவ்வாறான செயற்பாடுகளையிட்டு பொலிசாராலோ பாதுகாப்புப் படையினராலோ மேற்கொள்ளும் சட்ட நடவடிக்கைகளை தமிழ் அமைப்புக்களுக்கு எதிரான நடவடிக்கைகளாகச் சித்தரிக்க முற்படுவது சரியாக இருக்காது.

ஆனால் சமீபகாலமாக இனவாத அமைப்புக்களும், சில பௌத்த குருமார்களும் தமிழ் அமைப்புக்களின் ஆயுதங்களை பறிக்குமாறு விடுக்கும் கோரிக்கையையும், தமிழ் இயக்கங்கள் சிலவற்றின் நிதிதிரட்டல் நடவடிக்கைகளையும் முடிச்சுப்போட முடியவில்லை.

கிழக்கில் உள்ள சிங்கள மக்களுக்கு ஆபத்து என்ற அடிப்படையில்தான் பௌத்த குருமார்கள் சிலர் கோரிக்கை விட்டுள்ளனர்.

ஒரு விடயத்தை இதில் கவனிக்க வேண்டும். வடக்கு-கிழக்கிலோ வெளியிலோ தமிழ் கட்சிகள் எதுவும் இதுவரை சிங்கள மக்களிடம் நிதி திரட்டலில் ஈடுபட்டதில்லை. அவர்களை அச்சுறுத்தியதும் இல்லை.

அதேபோல தமிழ் கட்சிகள் தமிழ் மக்களிடம் எப்படி நடந்துகொள்ளுகின்றன என்பது தொடர்பாக சிங்கள இனவாத அமைப்புக்கள் கவலைப்பட்டதும் இல்லை.

ஆனால் சமீபத்தில் திருமலையில் நடைபெற்ற ஒரு சம்பவம்தான் இனவாத அமைப்புக்களை சீற்றம் கொள்ளவைத்துள்ளது.

திருமலையில் காணி அதிகாரியான பீரிஸ் என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதற்கு முன்னரும் திருமலையில் பல துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடைபெற்றன. அப்போதெல்லாம் எழாத சீற்றம் பீரிஸ் கொலைக்குப் பின்னர் சீறி எழுந்தது.

காரணம்: பீரிஸ்தான் திருமலையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கு மூளையாக செயற்பட்டுக் கொண்டிருந்தவர்.

எந்தக் காணியை எப்படி வளைத்துப் போடலாம். எங்கே எப்படி குடியேற்றம் நடத்தலாம் என்பதெல்லாம் பீரிசுக்கு அத்துப்படி.

ஆனாலும் பீரிஸ் ஒரு அம்பு மட்டும்தான். திருமலையில் தமிழ் பேசும் மக்களின் விகிதாசாரத்தை குறைப்பது என்பது நீண்டகால பேரினவாதத்திட்டம். அந்தத் திட்டத்தால் ஏவப்பட்ட ஒரு அம்புதான் பீரிஸ்.

தமது அம்புகளில் ஒன்று இலக்கை பூரணமாக எட்டமுன்னர் விழுந்துவிட்டதே என்பதுதான் இனவாத அமைப்புக்களது வருத்தம்.

அந்த வருத்தம் திருமலையில் உள்ள தமிழ் அமைப்புக்கள் மீதான கோபமாகத் திரும்பியிருக்கிறது. குறிப்பாக பீரிஸ் கொலைக்கு ஈ.பி.டி.பி. மீதுதான் இனவாத அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

திருமலை சிங்கள மக்களின் பாரம்பரிய பூமி போலவும், அங்கே தமிழ் அமைப்புக்கள் இப்படி கொட்டமடிப்பது நியாயமா? என்பது போலவும் இனவாத அமைப்புக்கள் வரிந்து கட்டிக்கொண்டு எழுந்துள்ளன.

திருமலையில் திட்டமிட்ட குடியேற்றம் என்பதை மையமாக வைத்தே அதற்குள்ள தடைகளை விலக்கும் நோக்கத்தில் இனவாத அமைப்புக்கள் தமிழ் கட்சிகளை குறிவைத்துள்ளன.

பீரிஸ் யாரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பதை கண்டறிய வேண்டியது பாதுகாப்புப் படையினரின் பொறுப்பு. அதற்கு மாறாக தமிழ் கட்சிகளை நாம் ஒன்றும் சந்தேகப்படாமல் இருக்கவில்லை என்று காட்டுவதுபோலவே திருமலையில் படையினரும் பொலிசாரும் நடந்து கொண்டனர்.

திருமலையில் ரெலோ, புளொட் இயக்கங்களின் ஆயுதங்கள் மீளப்பெறப்பட்டுள்ளன. இத்தனைக்கும் திருமலை நகரில் உள்ள தமிழ் இயக்கங்கள் எதுவுமே அங்கு நிதி திரட்டல் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்கான புகார்கள் எதுவுமே எழவில்லை.

அதுமட்டுமல்ல ரெலோ, புளொட் இயக்க உறுப்பினர்கள் திருமலையில் படையினருடன் இணைந்தும் செயற்பட்டார்கள்.

சிங்கள மக்களின் பீதியைப் போக்கவே ஆயுதங்கள் எடுக்கப்பட்டதாகக் காரணம் கூறப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் இயக்கங்கள் மட்டுமல்ல படையினரும் ஆயுதங்களுடன் திரிகின்றனர். திருமலையில் வெள்ளை வான் பீதி தமிழ் மக்களை தூங்கவிடாமல் துரத்துகிறது.

நீலநிற பஸ் ஒன்றில் திருமலையில் நடமாடும் பொலிசாரின் நடவடிக்கைகள் தமிழ் மக்களைப் பீதி கொள்ளச் செய்கின்றன.

அதற்காக பொலிசாரும், படையினரும் ஆயுதங்கள் இல்லாமல் நடமாடவேண்டும் என்று தமிழ் கட்சிகள் கோரமுடியுமா?

படையினர் புலிகளிடமிருந்து எதிர்நோக்கும் அதே அச்சுறுத்தல் தமக்கும் இருப்பதாக தமிழ் கட்சிகள் வாதிடுகின்றன.

புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் தமிழ் கட்சிகளின் உதவியையும் அரசாங்கமும், படையினரும் பயன்படுத்தியும் உள்ளனர்.

இப்போது இனவாத அமைப்புகளின் கோரிக்கைகளை செவிமடுத்து தமிழ் அமைப்புக்களை நிராயுதபாணியாக்கியுள்ளனர் படையினர்.

தமிழ் கட்சிகளின் நிலையும் பரிதாபம்தான்.

தமிழ் கட்சிகள் சில இனப்பிரச்சனைத் தீர்வுக்கு புலிகளுடன்தான் அரசாங்கம் பேசவேண்டும் என்று பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுக்கின்றன. இதன் அர்த்தம் புலிகள்தான் தமிழ் மக்களின் பலமான பிரதிநிதிகள் என்பதுதான். அதே சமயம் படையினருடன் இணைந்து புலிகளுக்கு எதிரான போரிலும் உதவுகின்றன.

"போர்நிறுத்தம் வேண்டும், அரசே! போரை நிறுத்து!" என்று பத்திரிகைகளில் அறிக்கை விடுக்கிறார்கள். களத்தில் படையினருடன் இணைந்து புலி வேட்டைக்குப் போகிறார்கள்.

# வடக்கில் புதையுண்ட மர்மங்கள்!

தமிழ் கட்சிகள் பல ரொம்பத்தான் குழம்பிப் போயிருக்கின்றன. அவர்கள் குழம்புவது போதாது என்று அரசாங்கமும் தமிழ் கட்சிகளைக் கையாளும் விடயத்தில் குழம்பிப் போயிருக்கிறது.

அரசாங்கத்தின் குழப்பத்துக்கு காரணம் இருக்கிறது. இனவாதிகளையும் திருப்தி செய்ய வேண்டும். புலிகளுக்கு எதிரான போரில் தமிழ் கட்சிகள் தமது பக்கம் இருப்பதாக வெளியுலகுக்குக் காட்டவும் வேண்டும்.

முன்னர் இனவாதிகளின் கூக்குரல்களால் ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன. இப்போது தமிழ் அமைப்புக்களிடமிருந்து ஆயுதங்கள் களைந்தெறியப்படுகின்றன.

எப்போதுமே இனவாதிகளின் குரலுக்கு மதிப்பு அதிகம். இலங்கையின் அரசியலில் மாறாத விதி அது ஒன்றுதான்.

★★★

"காணவில்லை, காணவில்லை" என்று பெற்றோர்கள் பிள்ளைகளைத் தேடுகிறார்கள்.

"நாமும் அவர்களைக் காணவில்லை, கண்டால் எமக்கும் தெரிவிக்கவும்" என்று படையினரும் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

யாழ் குடாநாடு தமது பூரண கட்டுப்பாட்டில் இருப்பதாக அரசாங்கம் கூறுகிறது. நம்பாவிட்டால் ஒரு முறை சென்று பாருங்கள். பயணம் இலவசம். உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும் என்று ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்கம் அழைப்பும் விடுத்துள்ளது.

யாழ் குடாநாட்டில் காணாமல் போனவர்கள் எங்கே? என்று கேள்வி எழுப்பினார் பாராளுமன்ற உறுப்பினர் பரராஜசிங்கம். ஒருவாரத்தில் பதில் சொல்லப்படும் என்றார்கள். ஒருவாரம் ஒரு மாதமாகியும் பதிலும் சொல்லப்படவில்லை. பதில் எங்கே? என்று பரராஜசிங்கத்தாரும் கேட்கவில்லை. ஆவேசமாக கேள்வி எழுப்பினார் என்று பத்திரிகையில் செய்தி வந்ததே அவருக்குப் போதும்.

தனது பூரண கட்டுப்பாட்டில் உள்ள யாழ் குடாநாட்டில் நடைபெற்றுள்ள அவலங்கள் தொடர்பாக பதில் சொல்லாமல், யாழ் குடாநாட்டை சமாதான சுற்றுலாப் பகுதிபோல சித்தரிப்பதில்தான் அரசாங்கம் அக்கறை காட்டுகிறது.

திருமலையில் நடைபெற்ற ஒரு சம்பவத்துக்காக தமிழ் அமைப்புக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட சோதனை மற்றும் ஆயுதப் பறிப்பு விவகாரங்கள் மூலமாக தான் ஒரு நியாயமான அரசாங்கம் என்று நிருபித்தாகிவிட்டது.

யாழ் குடாநாட்டு சம்பவங்கள் தொடர்பாகவும் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. விபரங்கள் கோரப்பட்டுள்ளன. எவைக்கும் நேரடியாகப் பதில் சொல்வதை அரசாங்கம் தவிர்த்து வருகிறது.

யாழ் குடாநாட்டுச் செய்திகள் தணிக்கை இருந்த காலத்திலும் சரி, தணிக்கை விலகிய பின்னரும் சரி, காலதாமதமாகவே வெளிவருகின்றன.

யாழ் குடாநாட்டு மக்களைப் பொறுத்தவரை நீண்டகாலமாக இரும்புத்திரைக்குப் பின்னால்தான் இருந்து வருகின்றனர்.

புலிகள் இயக்கத்தினரின் கட்டுப்பாட்டில் யாழ் குடாநாடு இருந்தபோது புலிகள் இயக்கத்தினரின் செய்தித் தணிக்கை அமுலில் இருந்தது.

உள்ளேயிருந்து வெளியே வரும் செய்திகளும், வெளியே இருந்து உள்ளே செல்லும் செய்திகளும் புலிகள் இயக்கத்தினரால் வடிகட்டப்பட்டே வழங்கப்பட்டன.

இப்போது அதே வேலையைப் பாதுகாப்பு படையினர் செய்கின்றனர்.

நாடெங்கும் செய்தித் தணிக்கை நீக்கப்பட்டுள்ளது. ஆனால் யாழ் குடாநாட்டு மக்கள் எவ்வாறான செய்திகளை அறியவேண்டும். எவ்வாறான செய்திகளை அறியக்கூடாது என்பதை படையினர்தான் தீர்மானிக்கின்றனர். வானலை வழியான செய்திகளை மட்டுமே படையினரால் தடுக்க முடியாமல் உள்ளது.

சிறைகளில் செய்திப் பத்திரிகைகள் விடயத்தில் ஒரு விதி கடைப்பிடிக்கப்படுவதுண்டு. சிறைக்குள் இருப்போரை கலகம் செய்யத் தூண்டுகின்ற செய்திகள், சிறைகளுக்குள் நடைபெறும் சம்பவங்கள் தொடர்பான செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்தால் குறிப்பிட்ட செய்தியை கறுப்பு மையால் பூசி மறைத்துவிட்டுத்தான் கொடுப்பார்கள்.

யாழ் குடாநாட்டு மக்களின் நிலையும் அதுதான். அரசாங்க பத்திரிகை ஒன்று மட்டுமே கொழும்பில் இருந்து செல்கிறது. யாழ் குடாநாட்டில் 'உதயன்' பத்திரிகை வெளிவருகிறது.

யாழ் குடாநாட்டிலிருந்து வெளியே வரும் செய்திகளும் பெரும்பாலும் வாய்மூலமாக அறியப்பட்டவையாகவே உள்ளன. பாதுகாப்பு காரணம் கூறப்பட்டு யாழ் குடாநாட்டு கடிதங்கள் உடைக்கப்படலாம் என்ற சந்தேகத்தால் கடிதங்களில் தாம் அறிந்த செய்திகளை எழுதவும் மக்கள் அஞ்சுகின்றனர்.

இத்தனை தடைகள், சிரமங்களைத் தாண்டியும் பல செய்திகள் வெளியே வந்துள்ளன. எல்லாமே திடுக்கிடும் செய்திகளாகவே உள்ளன.

சமீபத்தில் வெளியான செய்தியொன்று அவலச்சம்பவங்களுக்கு சிகரம் வைப்பது போல் அமைந்துள்ளது.

ராஜினி வேலாயுதபிள்ளை என்னும் இளம் பெண் மலசலக்கூடக் குழி ஒன்றிலிருந்து நிர்வாணப் பிணமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து ஆறு இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டனர். விசாரணைகள் நடைபெறுகின்றன என்று செய்திகள் வெளியாகின.

அதற்கு முன்னரும் யாழ் குடாநாட்டில் பல இளம்பெண்கள் காணாமல் போனதாக செய்திகள் வெளியாகின. கிருஷாந்தி என்ற மாணவி காணாமல் போனார். அந்த விவகாரத்தை வெளியே கொண்டுவந்த அவரது தயாரும், சகோதரரும் கடத்தப்பட்டு காணாமல் போயினர்.

கோண்டாவிலில் ராஜினி வேலாயுதபிள்ளை என்ற பெண் காணாமல் போனதையடுத்து, மற்றொரு இளம்பெண்ணும் காணாமல் போனார்.

இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட இளம் பெண்களும், இளைஞர்களும் காணாமல் போனதாக உறுதியான புகார்கள் தனக்குக் கிடைத்திருப்பதாக யாழ் அரசாங்க அதிபரே தெரிவித்துள்ளார்.

ஆனால் ஒரே ஒரு புதைகுழி மட்டுமே கண்டறியப்பட்டுள்ளது. ஏனையோர் எங்கே?

நடைபெற்றுள்ள சகல சம்பவங்களும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில்தான் நடைபெற்றுள்ளன.

காணாமல் போனதாகக் கூறப்படுவோர் புலிகளோடு போய்ச் சேர்ந்திருக்கலாம் என்று கூறப்படும் காரணம் உறுத்துகிறது.

தமது பிள்ளைகள் புலிகளோடு போய்ச் சேர்ந்திருந்தால் படையினரிடம் புகார் செய்வதற்கு பெற்றோர்கள் முன்வருவார்களா என்பது நியாயமான கேள்வியாகப்படுகிறது.

அதுமட்டுமல்ல காணாமல் போன கிருஷாந்தி விடயத்தில் படையினர்மீதே சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

கைதடி காவலரனில் வைத்தே கிருஷாந்தி கைதுசெய்யப்பட்டார். அதே காவலரனில் வைத்தே கிருஷாந்தியின் தாயாரும், சகோதரரும், அவர்களுடன் உதவியாகச் சென்ற ஒருவரும் கைது செய்யப்பட்டனர் என்று கிருஷாந்தியின் சகோதரி பிரசாந்தி புகார் செய்திருக்கிறார்.

பிரசாந்தியின் கடிதம் ஜனாதிபதிக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இதுவரை விசாரணை எதுவும் விரிவாக நடைபெறவில்லை.

கோண்டாவில் சம்பவத்தில் ஆறு இராணுவத்தினர் கைது செய்யப்பட்டனர். விசாரணை நடைபெறுகிறது என்று வெளியாகியுள்ள செய்திகள் மட்டும் யாழ் குடாநாட்டில் நடைபெற்றுள்ள சம்பவங்களுக்கு போதுமான தீர்வாக அமையாது.

பத்துச் சம்பவங்கள் நடைபெறும்போது ஒரு சம்பவம் பற்றி மட்டுமே விசாரணை நடைபெறுவதால் ஏனைய ஒன்பது சம்பவங்களுக்கான பொறுப்பு விசாரணையில்லாமலேயே வேறுபுறம் திரும்பிவிடலாம்.

இராணுவத்தினர் சம்பந்தப்பட்ட விடயத்தை நாம் கண்டுபிடித்துவிட்டோம், நடவடிக்கை எடுத்துள்ளோம்; ஏனைய சம்பவங்களுக்கு யார் பொறுப்பு என்று ஆராய்ந்து வருகிறோம் என்று அரசாங்கம் மனித உரிமை அமைப்புக்களுக்கு சொல்வதற்கு தயாரான பதில் ஒன்று கிடைத்திருக்கிறது.

எனவே-ராஜினி வேலாயுதப்பிள்ளை தவிர யாழ்ப்பாணத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பாக பதில் சொல்ல வேண்டிய பொறுப்பில் இருந்து அரசாங்கம் விலகிக்கொண்டதாகவே கருதலாம்.

எனவே காணாமல் போனோர் விடயங்கள் புதையுண்ட இரகசியங்களாகவே இருக்கின்றன.

புதைகுழிகளை மீறிக்கொண்டு மறைந்தவர்கள் எழுந்து வந்து பேசினால்தான் மர்மம் விலகுமா?

காணாமல் போவோர் ஒருபுறமிருக்க இரவு நேரங்களில் வீடுகளுக்குள் புகுந்து பெண்களை பலாத்காரம் செய்யும் சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

மாலை ஆறுமணிக்குப் பின்னர் ஊரடங்கு உள்ள நிலையிலும் வீடுகளுக்குள் புகுந்து அத்துமீறல்கள் நடைபெறுகின்றன.

சாவகச்சேரி, அரியாலை போன்ற பகுதிகளில் தங்கள் பிள்ளைகள் பலாத்காரம் செய்யப்படுவதை தடுக்க முற்பட்ட தந்தைமார் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்.

ஊரடங்கு நேரத்தில் நடைபெறும் இச் சம்பவங்களுக்கு பொறுப்பு யார்? யாழ் குடாநாடு தமது பூரண கட்டுப்பாட்டில் இருப்பதாக அரசாங்கம் கூறுவதால், அங்கு நடைபெறும் சம்பவங்களுக்குப் பதில் கூறவேண்டிய பொறுப்பும் அரசாங்கத்திற்குத்தான் இருக்கிறது.

யாழ் குடாநாட்டில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள், கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகள் என்று இரண்டுவிதமான பகுதிகள் உள்ளன.

கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தான் அத்துமீறல்கள் தொடர்பான புகார்கள் கிளம்பியுள்ளன. எனவே இது விடயத்தில் அரசாங்கத்தின் பொறுப்பு அதிகமாகியிருக்கிறது.

வடக்கு-கிழக்கில் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை பட்டியலிட்டு காட்டுவதைவிட, கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முனைவதே அரசாங்கத்தின் தலையாய பொறுப்பாகும். ○

# அதிரடி அய்யாத்துரை



யாழில் முன்னர் ரெண்டு எழுத்தாரின் நீதிமன்றங்கள் இயங்கின. இப்போது அரச நீதிமன்றங்கள் இயங்கத் தொடங்கியிருக்கிறதாம். சமீபத்தில் கசிப்பு தயாரிப்பாளர்களுக்கு தண்டம் அறவிடப்பட்டதாம். தண்டத்தைக் கட்டிப்போட்டு ஜாலியாக வெளியே வந்த மதிப்புக்குரிய கசிப்புத் தயாரிப்பாளர் ஒருவர் என்ன சொன்னவராம் தெரியுமோ? "இது பரவாயில்லை, தண்டம்தானே. கட்டிப்போட்டு வந்து தொழிலைத் தொடரலாம். முந்தியெண்டால் தண்டனைக்குமல்லோ பயப்படவேணும்." பார்த்தியளோ, அவையைப் பொறுத்த வரைக்கும் நிலமை வழமைக்கு திரும்பியாச்சுது!

பரவலாக யாழில் தந்தையுடன் மகளையும் பரலோகத்துக்கு பாஸ் கொடுத்து அனுப்பிய சம்பவங்கள் நடைபெற்றிருக்குதாம். பலாத்காரக் காதல்தான் பின்னணியில் இருக்குதாம். இணங்காத மகளையும் அவளுக்கு துணையாக இருக்கும் தந்தையையும் ரிக்கெற் கிழிச்சு அனுப்பினால் அதுக்கு என்ன பெயர்? காதல் இல்லையேல் சாதல் என்பதை பிழையாக விளங்கிக்கொள்ளுகினமாக்கும் சம்பந்தப்பட்ட ஆட்கள்.

தேனக கூட்டான கட்சிப் பிரதிநிதியின் பெயரை பள்ளிக்கூடக் கட்டிடத்துக்கு வைக்கும் விவகாரம் விகாரமானது தெரியும்தானே. மாணவர் விருப்பமே என்விருப்பம் எண்டு சிங்கத்தார் பல்டி அடிச்சாலும் மனதுக்குள் கடுப்பாகத்தான் இருக்கிறாராம் மனுசன். குறிப்பிட்ட பாடசாலையுடன் தொடர்புடைய வணபிதாக்கள்மீது கோபத்தைத் திருப்பியிருக்கிறாராம். பிதாக்களிடம் பாவ மன்னிப்புக் கேட்கலாம், பாய நினைக்கலாமோ? அபத்தம்! அபத்தம்!!

குடாநாட்டில் ரெண்டு எழுத்தாரின் நிர்வாகத்தில் கையைக் கட்டிக்கொண்டு பவ்வியமாக பணிசெய்த அதிகாரிகள் பலர் இப்ப தலைகீழாக மாறி நிக்கினமாம். நிவாரணங்களில் குளறுபடிகள் கோலோச்சுகிறதாம். விவசாயிகளுக்கு வழங்கப்படும் மண்எண்ணெயின் அளவைக் குறைத்து கறுப்புச் சந்தைக்கு அனுப்புவது முதற்கொண்டு பல தில்லுமுல்லுகள் அரங்கேற்றப்படுகிறதாம். இப்பதான் நாலு காசு சம்பாதிக்க வாய்ப்புக் கிடைத்திருக்கு. விடுவினமோ. காய்ந்த மாடுகள் கம்பில் விழும்தானே. எனக்கு ஒரு விசயம் கிளியராகுது. அடி உதவுற மாதிரி அண்ணன் தம்பிகூட உதவுறதில்லை.

கிழக்கின் தனித்துவத் தலைவருக்கும், தமிழர் கட்சித் தலைவர் ஒருவருக்கும் இடையே பிணக்கை ஏற்படுத்தத்தான் அமைச்சர் பதவிப் பேச்சுக்கள் கிளப்பிவிடப்பட்டதாம். இருவரும் வெளிநாட்டுக்கு ஒரே தூதுக்குழுவில் சென்றபோது மனம்விட்டுப் பேசிக் கொண்டார்களாம்.

பக்கத்துநாட்டு வெளிவிவகாரத்துக்கு பொறுப்பானவர் தலைநகருக்கு வருகிறார். தமிழ் கட்சிகள் ஒன்றாக வரலாம். சந்திக்கலாம் எண்டு சொல்லப்பட்டதாம். சில விஷயங்களை தனியாக இரகசியமாகப் பேசவேண்டும். தனியாகவே நாங்கள் பார்க்கிறோம் எண்டு கூட்டான கட்சியினர் கூறியிருக்கினம். தனியாகப் பேசுவதில் ஒரு வசதி இருக்குப் பாருங்கோ. எதிர்காலத்தில் பக்கத்து நாடு ஏதாவது நல்ல முடிவு எடுக்குது எண்டு வைச்சுக்கொள்ளுங்கோ. "அது நாங்கள் சொல்லித் தான் நடந்தது" எண்டு பின் ஒரு காலத்தில் அறிக்கை விடலாம் அல்லோ. நாங்கள் சொல்லித்தான் ஒப்பந்தம் வந்தது எண்டு முந்திசொன்னதை மறக்கத்தான் முடியுமோ? ஆகவே, அதனால் தனியான சந்திப்புக்கள் தான் எல்லாவகையிலும் சாணக்கியம்.

வெளிநாடுகளில் நம் ஆட்கள் கலியாண வீடுகளை ஜாம் ஜாம் எண்டு நடத்துகினமாம். வெளிநாடுபோன ஐயர்மாருக்கும் சளையான வருமானம். மணவறைபோட்டு மந்திரம் சொல்லி மாப்பிள்ளையையும், மணப்பெண்ணையும் கலாதியாக அலங்கரிச்சு மேளம் கொட்டித் தாலிகட்டு வதை வெள்ளைக்காரர் விழுந்து விழுந்து பார்க்கினமாம். ஏதோ வெள்ளைக்காரரை வியக்கவைக்கவும் எங்கட சனத்திடம் சில சமாச்சாரங்கள் இருக்குத்தானே!

சமீபத்தில் கணையாழி இதழ் படிக்கக் கிடைத்தது. அதில் கவர்ந்த ஒரு கவிதையில் சிலவரிகள்.

"பெருமாள் கோவில் இது
பெரும் பணக்கோயில்
தினசரி உண்டியலில்
பிதுங்குது லட்சம்.
பணவரவெல்லாம்
பாவமன்னிப்பு எனின்
இது
பக்திப் பெருக்கமா-வெறும்
பாவப் பெருக்கமா?"



படிப்பகம்

www.padippakam.com



# 100 அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அற்புதன் - எழுதுவது

# ஒப்பந்தமும் - புலிகளின் நிலையும்!

### பிரபா மறுப்பு

பிரபாகரன் இந்தியாவிலிருந்து ஹெலிக்கொப்டர் மூலம் சுதுமலை அம்மன் கோவில் முன்றலில் இறக்கப்பட்டதாக சென்றவாரம் குறிப்பிட்டிருந்தேன்.

அதில் ஒரு சிறு திருத்தம்.

பலாலி விமான தளத்தில்தான் பிரபாகரன் வந்திறங்கினார். பின்னர் அங்கிருந்து இந்தியப் படையினரின் கவச வாகனம் மூலமாக பாதுகாப்பாக சுதுமலைக்கு அழைத்து வரப்பட்டார்.

எங்கிருந்து பிரபாகரன் இந்தியாவுக்குப் புறப்பட்டாரோ அதே சுதுமலையில்தான் பிரபாகரனை தமது பொறுப்பில் இருந்து விடுவித்தனர் இந்தியப் படையினர்.

சுதுமலையில் நடைபெற்ற புலிகள் அமைப்பினர் நடாத்திய பொதுக்கூட்டத்துக்கு செல்வதற்கு இடையில் முக்கியமான சில சம்பவங்களை குறிப்பிட்டுவிடுகிறேன்.

ஆயுத ஒப்படைப்பு தொடர்பான விடயத்தில் பிரபாகரனுக்கும், இந்தியப் படை அதிகாரிகளுக்கும் இடையே சிறியளவிலான கசப்புணர்வு ஏற்பட்டது.

பிரபாகரன் ஆயுத ஒப்படைப்பில் கலந்துகொள்ளவேண்டும். ஒரு அடையாளத்திற்காக சில ஆயுதங்களையாவது அவர் கொடுக்க வேண்டும் என்று விரும்பினார்கள் இந்தியப் படை அதிகாரிகள்.

ஜெனரல் திபேந்தர் சிங்கும், ஹரிகரத் சிங்கும் பிரபாகரனை சந்தித்தனர்.

"எனது கையால் இலங்கை இராணுவத்தினரிடம் ஆயுதங்களை ஒப்படைக்கவே முடியாது. அது ஒருபோதும் நடக்காத காரியம்" என்று சொல்லிவிட்டார் பிரபாகரன்.

அதன்பின்னர்தான் யோகியை ஆயுத ஒப்படைப்புக்கு அனுப்பிவைத்தார் பிரபாகரன்.

ஆயுத ஒப்படைப்பு நடைபெற்றவுடன் போராளிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கும் பிரகடனத்தை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிக்கல வாசித்தார்.

அந்தப் பிரகடனத்தில் இடம்பெற்ற வாசகங்கள் இதுதான்:

"சிறீலங்காவின் எதிர்காலம் தொடர்பான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தினம் இன்றாகும். ஆயுதங்களை ஒப்படைக்கும் இந்நடவடிக்கை எமது ஜனநாயக சமுதாய அமைப்பு முழுவதற்கும் பாதிப்பை தந்துகொண்டிருக்கும் இரத்தம் சிந்துதல், மற்றும் வன்முறைக்கு முடிவு கட்டுவதைக் குறிப்பதாகும்.

எமது சொந்த நாட்டில் இலங்கையர்களாகிய நாம் அனைவரும் அமைதியாகவும், நல்லுறவுடனும் வாழ்வதற்கு இனிமேல் வழி கிடைக்கும் என்று முழுமையாக நம்புகிறோம்."

### வேடிக்கை

ஆயுத ஒப்படைப்பு நிகழ்ச்சியில் ஒரு வேடிக்கையும் நடந்தது.

சேபால ஆட்டிக்கலவிடம் தனது பிஸ்டலை ஆயுத ஒப்படைப்பின் அடையாளமாக வழங்கினார் யோகி. அந்தச் சந்தர்ப்பத்தில் படமெடுக்க தவறிவிட்டனர் தொலைக்காட்சிக்காரர்கள்.

மீண்டும் ஒருமுறை யோகி ஆயுதத்தை சேபால ஆட்டிக்கலவிடம் கொடுப்பது போல செய்து காட்டினால் படம்பிடித்துவிடலாம் என்று வேண்டுகோள் விடுத்தனர் படப்பிடிப்பாளர்கள்.

இந்திய-இலங்கை அதிகாரிகளும் சொல்லிப்பார்த்தனர். சேபால ஆட்டிக்கல தயார்தான். ஆனால் யோகியோ 'முடியவே முடியாது' என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார்.

யோகி கொடுத்த பிஸ்டல் மேசையில் இருந்தது. அதன்மீது சேபால ஆட்டிக்கல கையை வைத்துக்கொண்டிருக்க அதனைத்தான் படம்பிடிக்க முடிந்தது.

ஆயுத ஒப்படைப்பின்போது தமிழீழ இலக்கத் தகடுகள் பொருத்தப்பட்ட வாகனங்களில்தான் புலிகள் இயக்கத்தினர் வந்திருந்தனர். வாகனங்களில் புலிக்கொடிகள் பறந்து கொண்டிருந்தன.

இந்தியப்படை நிலைகொண்டதையடுத்து வடக்கில் இருந்து ஆறாயிரம் இலங்கைப் படையினர் இந்திய விமானங்களின் உதவியுடன் தென்பகுதிக்கு கொண்டுவரப்பட்டனர். மொத்தமாக அறுநூறு படைவீரர்கள் மட்டுமே வடக்கில் உள்ள முகாம்களில் இருந்தனர்.

### சுதுமலைக் கூட்டம்

யாழ்ப்பாணத்திலிருந்து கிட்டத்தட்ட ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் இருக்கிறது சுதுமலை.

சுதுமலை அம்மன் கோவில் முன்றலில் சுமார் பதினைந்து அடி உயரத்தில் மேடை அமைக்கப்பட்டிருந்தது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு வத்திருந்தனர். யாழ் குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் வேன்கள், மினி பஸ்சுகள், லொறிகள் என்பவற்றில் மக்கள் சுதுமலைக்கு வந்து சேர்ந்தனர்.

பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலர்கள் மேடையைச் சுற்றியும், மேடையின்மீதும் வியூகம் அமைத்ததுபோல பாதுகாப்பாக நின்றனர்.

பிரபாகரன், மாத்தையா, கிட்டு, குமரப்பா, திலீபன், யோகி ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கிட்டு மேடையில் பேச வந்தபோது மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

கிட்டு தனது பேச்சின்போது, கடைசிப் புலி இருக்கும்வரை போராடுவோம் என்று கூறினார். "தலைவர் இருக்கிறார். அவரை நம்புங்கள்" என்று தனது பேச்சை முடித்துக் கொண்டார்.

இறுதியாகப் பிரபாகரன் பேச வந்தார்.



சென்னை விமான நிலையத்தில் பிரபாகரன்—கிட்டு

## சுதுமலையில் பிரபா ஆற்றிய உரை

முதன் முதலாக பிரபாகரன் கலந்துகொள்ளும் பகிரங்கக் கூட்டம். பிரபாகரனை பார்த்துவிடவேண்டும் என்ற ஆர்வத்தில் கூட்டத்தினர் முண்டியடித்தனர்.

பிரபாகரன் பேச ஆரம்பித்ததும் அவர் முன்பாக இருபுறமும் வந்து நின்று கொண்டனர் இரண்டு மெய்க் காவலர்கள்.

இருவருமே மலைகள் போன்ற தோற்றத்தில் இருந்தனர். அதனால் பிரபாகரனைப் பார்க்க முடியாமல் மக்கள் அப்படியும் இப்படியுமாக அசைந்தும், எட்டி எட்டி துள்ளிக்கொண்டுமிருந்தனர்.

இது தொடர்பாக அமிர்தலிங்கம் ஒரு நண்பரிடம் சொன்ன கருத்தையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

"நாங்கள் பாதுகாப்புக்காக இந்தியாவுக்கு ஓடிவந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். சுதுமலையில் தம்பி பேசிய கூட்டத்தில் சனத்துக்கு தம்பியைச் சரியாகவே தெரியவில்லையாம். தம்பியைவிட உயரமான ரெண்டுபேர் குறுக்கே நின்றார்களாம். அவ்வளவு பாதுகாப்பு அவைக்கே தேவைப்படுகுது."

சுதுமலைக் கூட்டத்தில் பிரபாகரன் என்ன பேசுகிறார் என்பதை நேரடியாகக் கேட்பதற்கு இந்தியப் படை அதிகாரிகளும் வந்து அமர்ந்திருந்தனர்.

### பிரபா உரை

பிரபாகரன் தனது பேச்சில் குறிப்பிட்ட முக்கிய விடயங்கள் இதுதான்:

"எனது அன்புக்குரிய தமிழீழ மக்களே! இன்று எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் மாபெரும் திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. திடீரென்று எமக்கு அதிர்ச்சியூட்டுவது போல, எமது சக்திக்கு அப்பாற்பட்டதுபோல இந்தத் திருப்பம் ஏற்பட்டுள்ளது.

திடீரென மிகவும் அவசர அவசரமாக எமது மக்களையோ, எமது மக்களின் பிரதிநிதிகளாகிய எம்மையோ கலந்தாலோசிக்காமல் இந்தியாவும், இலங்கையும் செய்து கொண்ட ஒப்பந்தம் இப்பொழுது அமுலாக்கப்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள்.

இந்த ஒப்பந்தத்தில் பல சிக்கல்கள் இருந்தன. பல கேள்விக் குறிகள் இருந்தன. இந்த ஒப்பந்தத்தால் எமது மக்களின் பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத்தீர்வு ஏற்படுமா என்பது பற்றி எமக்குச் சந்தேகம் எழுந்தது.

ஆகவே, இந்த ஒப்பந்தத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை இந்திய அரசுக்கு தெள்ளத் தெளிவாக விளக்கினோம்.

ஆனால், நாம் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் இந்த ஒப்பந்தத்தை அமுலாக்கியே தீருவோமென இந்தியா கங்கணம்கட்டி நின்றது. இந்திய அரசின் நிலைபாடு குறித்து நாம் ஆச்சரியப்படவில்லை.

இந்த ஒப்பந்தம் தமிழர் பிரச்சனையை மட்டும் தொட்டு நிற்கவில்லை. இது பிரதானமாக இந்திய-இலங்கை உறவு பற்றியது. இந்திய வல்லரசின் வியூகத்தின் கீழ் சிறீலங்காவைக் கட்டுப்படுத்தும் விதிகளும் இதில் அடங்கியிருந்தன. ஆகவேதான் இந்திய அரசு இந்த ஒப்பந்தத்தை செய்து கொள்வதில் அதிக அக்கறை காட்டியது.

ஆனால் அதேசமயம் தமிழீழ மக்களின் அரசியல் தலைவிதியை நிர்ணயிப்பதாகவும் இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதை நாம் கடுமையாக ஆட்சேபித்தோம்.

ஆனால் நாம் ஆட்சேபித்ததில் பயன் இல்லை. எமது அரசியல் தலைவிதியை எமது வல்லமைக்கு அப்பாற்றப்பட்ட ஒரு மாபெரும் வல்லரசு நிச்சயிக்க முடிவு செய்திருக்கும் நிலையில் நாம் என்ன செய்வது?

15 வருடங்களாக இரத்தம் சிந்தி தியாகம் புரிந்து, சாதனைகள் செய்து எத்தனையோ உயிர்ப்பலி கொடுத்து கட்டி எழுப்பப்பட்ட போராட்ட வடிவம் ஒரு சில தினங்களில் கலைக்கப்படுவது என்றால் அதை நாம் ஜீரணிக்க முடியவில்லை."

பிரபாகரன் உரையாற்றிக் கொண்டிருந்தபோதே அவரது குரல் சற்றுக் கம்மியிருந்தது. விரும்பாத ஒரு காரியத்தை செய்வதற்காக நிர்ப்பந்திக்கப்பட்ட மனநிலையை பிரபாகரனின் குரல் பிரதிபலித்தது.

பிரபாகரன் தனது உரையை முன்கூட்டியே தயாரித்து வைத்திருந்தார். அந்த உரையின் ஆங்கில மொழி பெயர்ப்புக்களும் பத்திரிகையாளர்களுக்கும், இந்திய அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டன.

### தமிழீழமே தாகம்

பிரபாகரன் மேலும் தொடர்ந்து பேசியது இது:

"இந்தியாவின் மாண்புமிகு பிரதமர் ராஜீவ் காந்தி என்னைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்தார். நான் அவரிடம் மனந்திறந்து எமது மக்களின் நிலைப்பாட்டையும் எமது பிரச்சனைகளையும் எடுத்துரைத்தேன். இந்தியப் பிரதமரிடம் இனவாத சிங்கள அரசாங்கத்தின் மீது சிறிதளவேனும் எனக்கு நம்பிக்கையற்ற தன்மையினைச் சுட்டிக்காட்டியதுடன் இவ்வொப்பந்தத்தை அமுல் நடத்தப் போவதில்லை என்ற எனது அவநம்பிக்கையையும் எடுத்துரைத்தேன். எமது மக்களின் பாதுகாப்புக்குரிய உத்தரவாதத்தையிட்டும் அவரிடம் பேசினேன் இந்தியப் பிரதமர் எனக்கு சில உறுதிப்பாடுகளை வழங்கினார். எமது மக்களின் பாதுகாப்புக்கான உறுதியினை அவர் வழங்கினார்.

இந்தியப் பிரதமரின் ஒளிவு மறைவற்ற நேர்மையில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அவரளித்த உறுதியிலும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. பேரினவாத சிங்கள அரசாங்கம் மீண்டும் தமிழின ஒழிப்பினை தொடங்குவதற்கு இந்தியா அனுமதிக்கமாட்டாது என்று நாம் நம்புகிறோம். இந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே இந்திய அமைதிப்படையிடம் எமது ஆயுதங்களை ஒப்படைக்கத் தீர்மானித்துள்ளோம்.

எமது மக்களின் பாதுகாப்புக்காக எத்தகைய மாபெரும் தியாகங்களை நாம் செய்திருக்கிறோம்! இவற்றையெல்லாம் மேலும் விபரிக்க வேண்டியதில்லை.

### இந்தியாவை நேசிக்கிறோம்

பிரபாகரனின் உரையின் கடைசிப்பகுதி இது:

"ஆயுதங்களை நாம் ஒப்படைப்பது எம்மிடமிருந்த பொறுப்பினை கைமாற்றிக் கொடுப்பதையே காட்டுகிறது. ஆயுதங்களை நாம் ஒப்படைக்கவில்லையானால் நாம் இந்தியப் படைகளுடன் மோதுகின்ற சூழ்நிலையினையே உருவாக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தலாம். இது நமக்குத் தேவையில்லை.

நாம் இந்தியாவை நேசிக்கிறோம். இந்திய மக்களை நாம் நேசிக்கிறோம், இந்தியப் படையினருக்கு எதிராக நாம் எமது ஆயுதங்களை பயன்படுத்தும் கேள்விக்கே இடமில்லை.

எமது எதிரிகளிடமிருந்து எம்மைப் பாதுகாக்கும் பொறுப்பினை இந்தியப் படைகள் ஏற்கின்றன. எமது ஆயுதங்களை இந்தியப் படைகளிடம் ஒப்படைப்பதன் மூலம் இந்திய அரசாங்கம் ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவரினதும் உயிருக்கும் முழுப்பாதுகாப்பினை வழங்கும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுகிறது என்பதனை வலியுறுத்திக் கூறுகிறேன்.

### தொடர்ந்து போராடுவோம்

எனது பேரன்புக்குரிய மக்களே! இந்தியா எடுத்துக்கொண்ட முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதைத்தவிர எமக்கு வேறு வழியில்லை. இந்த வாய்ப்பினை அவர்களுக்கு வழங்குவோம். இருப்பினும் இந்த ஒப்பந்தத்தின் மூலமாக தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு நிரந்தரமானதொரு தீர்வு கிட்டும் என்று நான் கருதவில்லை.

சிங்களப் பேரினவாத வேதாளம் இவ்வொப்பந்தத்தை விழுங்கி ஏப்பமிடும் காலம் வெகு தூரத்தில் இல்லை. ஈழத்தமிழர்களின் பிரச்சனைகளுக்கான நிரந்தரத்தீர்வு, தனித் தமிழ் ஈழம் அமைப்பதிலேயே தங்கியிருக்கிறது என்பதே எனது மாறுபடாத நம்பிக்கையாகும்.

**ஒன்றை இங்கு, எத்தகைய சந்தேகத்துக்கும் இடமின்றி தெளிவு படுத்த விரும்புகிறேன். தமிழ் ஈழம் என்ற குறிக்கோளினை அடையும் வரை நான் தொடர்ந்து போராடிக் கொண்டே இருப்பேன்.**




ஒப்பந்தம் தொடர்பான காட்டூன்

எமது போராட்டத்தின் வடிவங்கள் மாற்றமடையலாம்; ஆனால் எமது குறிக்கோளினை அடைவதற்கான போராட்டங்கள் மாறப்போவதில்லை. எமது குறிக்கோளினை ஈடேற்றுவதற்கு எமது மக்களாகிய உங்கள் முழு மனதுடனான, முழுமையான ஒன்றிணைந்த ஆதரவு எப்போதும் எமக்கு இருக்க வேண்டும்.

தமிழ் ஈழ மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு இடைக்கால நிர்வாக அமைப்பில் இணையவோ தேர்தலில் நிற்கவோ தமிழ் ஈழ விடுதலைப்புலிகளுக்கு சூழ்நிலை உருவாகலாம்.

அதேவேளை நான் இங்கு உறுதியாகக் கூறவிரும்புகிறேன் எத்தகைய சூழ் நிலையிலும் நான் தேர்தலில் போட்டியிடவோ, முதன் மந்திரிப் பதவியை ஏற்கவோ மாட்டேன்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்."

என்றுகூறி தனது பேச்சை முடித்தார் பிரபாகரன்.

### பத்திரிகைப்பேட்டி

பிரபாகரன் பாதுகாப்பாக தங்கியிருப்பதற்காக யாழ்ப்பாணம் கொக்குவிலில் உள்ள பிரம்படியில் வீடுகளை தயார் செய்தனர் புலிகள் இயக்கித்தினர்.

இரண்டு மூன்று வீடுகளில் பிரபாகரன் எப்போது எந்த வீட்டில் தங்கியிருப்பார் என்று தெரியாதளவுக்கே பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

பிரபாகரனை பத்திரிகையாளர்கள் சந்திக்க விரும்பினார்கள். பிரபாகரனும் அவர்களைச் சந்தித்தார்.

பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பிரபாகரன் சொன்ன பதில்கள் இவை.

"சிறீலங்கா அரசு தனது சிறைகளில் உள்ள தமிழர்களை முதலில் விடுதலை செய்யவேண்டும். அவ்வாறு விடுதலை செய்யப்பட்ட பின்னரே எம்மிடமுள்ள இராணுவ வீரர்களை விடுதலை செய்வோம்.

விடுதலைப் புலிகள் தவிர்ந்த வேறு எந்த இயக்கமும் தமிழீழத்தில் செயற்பட விடமாட்டோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணிபற்றி நான் சொல்லத் தேவையில்லை. இங்கு தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட போது அதன் தலைவர்கள் நாட்டைவிட்டே ஓடிவிட்டார்கள். அதனைத் தமிழீழ மக்கள் மறக்கவும் மாட்டார்கள். மன்னிக்கவும் மாட்டார்கள்.

இலங்கையில் வடக்கு-கிழக்குப் பகுதிகளை நிபந்தனை எதுவும் இல்லாமல் இணைக்கவேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடு. இணைப்புக்கு வாக்கெடுப்பு நடத்தப்படுவதை நாங்கள் ஏற்கவில்லை. எங்கள் தமிழ் தாயகம் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

தமிழீழம் ஒன்றே எம் நம்பிக்கை. தமிழீழம் தவிர்ந்த இடைக்காலத் தீர்வைவிட நிரந்தரத்தீர்வே ஏற்றதாகும்.

சர்வதேசப் பார்வையில் நம்மை முரடர்கள் என்று காட்டிவரும் ஜனாதிபதி ஜெயவர்த்தனா என்ன செய்கிறார் என்பதை நாம் உலகுக்கு காட்டவேண்டும்."

என்று கேள்விகளுக்கு பதில் அளித்தார் பிரபாகரன்.

பிரபாகரனின் பேச்சு, பேட்டிகள் போன்றவற்றை கூர்ந்து அவதானித்தவர்களுக்கு ஒரு விடயம் புரிந்தது.

தமிழீழ போராட்டத்தை எக்காரணம் கொண்டும் கைவிட பிரபா தயாராக இல்லை.

இந்திய அரசின் நிர்ப்பந்தம் காரணமாக ஒப்பந்தத்தை ஏற்க வேண்டியிருந்தது.

அடுத்ததாக, இலங்கை அரசு ஒப்பந்தத்தை மீறும் நாளுக்காக காத்திருக்கவே முதலில் விரும்பினார் பிரபாகரன்.

அவ்வாறு இலங்கை அரசு ஒப்பந்தத்தை மீறுமானால் இலங்கை அரசுக்கும், இந்திய அரசுக்கும் இடையே முரண்பாடு தோன்றும். சர்வதேச அரங்கிலும் இலங்கை அரசு அம்பலமாகும். அத்தருணத்தில் மீண்டும் போராட்டத்தை ஆரம்பிக்கலாம் என்றே பிரபாகரன் நம்பியிருந்தார்.

ஆனால் ஜே.ஆர்.ஒரு ராஜதந்திரப் புலி. எப்படியாவது இந்தியாவுக்கும் புலிகளுக்கும் இடையில் முரண்பாட்டை உருவாக்கி விடவேண்டும் என்று ஜே.ஆரும் ஒரு கணக்குப் போடத் தொடங்கிவிட்டார்.

எனவே ஒப்பந்தத்தை துரிதமாக அமுல் நடத்தும் காரியப்புலியாக தன்னை காட்டிக் கொள்ள ஆரம்பித்தார் ஜே.ஆர்.

எனினும் புலிகளும் விட்டுக்கொடுக்கவில்லை. இருபுறமும் காய் நகர்த்தல்கள் நடந்துகொண்டிருந்தன.

திரைமறைவில் நடந்த காய் நகர்த்தல்களும் மாறி மாறி வைக்கப்பட்ட பொறிகளும் அடங்கிய வரலாற்று நாடகம் அது.

அதன் சுவாரசியமான கட்டங்களை அடுத்தவாரம் பார்க்கலாம்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

### அலசுவது- இராஜதந்திரி

# பிரபாகரனை குற்றவாளிக் கூண்டில் ஏற்ற முயற்சிக்கும் சந்திரிகா அரசு!

இலங்கை மத்திய வங்கிக் கட்டிடத்தை தகர்த்தது உட்பட உயிர் உடமைச் சேதங்களை உண்டுபண்ணியது தொடர்பாக எல்.ரி.ரி.ஈ. தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மீது குற்றஞ்சாட்டி வழக்குத் தாக்கலாகியுள்ளது.

எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தைச் சேர்ந்த வேறு ஒன்பது பேரும் மத்திய வங்கித்தகர்ப்பு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர். 712 குற்றச்சாட்டுகள் இவர்கள் அனைவர்மீதும் சுமத்தப்பட்டுள்ளன.

திரு.வே.பிரபாகரன் மீது தாக்கலான முதலாவது வழக்கு இதுவல்ல; சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் யாழ் மேயர் அல்பிரட் துரையப்பா கொலை வழக்கிலும்கூட அவர் ஒரு சந்தேக நபராகத் தேடப்பட்டார்.

இதனையடுத்து, முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை விவகாரத்திலும் திரு.பிரபாகரன் ஒரு



முக்கிய சந்தேக நபராக விசாரணைகளுக்காக இந்திய அரசினால் வேண்டப்படுகின்றார்.

ரஜீவ் காந்தி கொலை தொடர்பாக இலங்கை அரசு பிரபாகரனைக் கைது செய்து ஒப்படைக்க வேண்டுமென்று முன்னாள் இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவின் ஆட்சிக்காலத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது பி.வி.நரசிம்மராவ் மீதே இந்தியாவில் ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக வழக்குத்தாக்கலாகியுள்ளது.

அன்று இந்திய அரசு பிரபாகரனைக் கோரியபோது, இலங்கையின் சந்திரிகா ஆட்சியாளர்கள் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்துடன் தோழமை பாராட்டிவந்தனர்.

திரு.பிரபாகரனை இலங்கைச் சட்டங்களின் கீழ் விசாரணை செய்த பின்னரே இந்தியாவிடம் கையளிப்பது பற்றித் தீர்மானிக்கமுடியும் என்று சந்திரிகா ஆட்சியாளர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

அல்பிரட் துரையப்பா கொலை வழக்கில் தேடப்பட்ட வே.பிரபாகரன் வயதில் குறைந்தவராக 'தம்பி' என்ற பெயரில் அப்போது அழைக்கப்பட்டார். அவரிடம்- அன்று- தற்போது இருப்பது போல எண்ணிலடங்காத ஆயுதங்களும் ஆட்களும் இருக்கவில்லை.

தாம் கைது செய்யப்படுவதிலிருந்தும் தப்பும் விதத்தில் தென்னிந்தியாவிலும், யாழ்ப்பாணத்திலும் அவர் மறைந்து வாழ்ந்தார்.

அவ்வாறு மறைந்து வாழ்ந்த காலப்பகுதியிலேயே தமது போராட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் கட்டி எழுப்பி, ஒரு சக்தி மிக்க தலைவராகவும் அவர் வளர்ச்சிபெற்றார்.

இன்று திரு.பிரபாகரன் உலகிலேயே சிறந்த ஒரு கெரில்லாத் தலைவராக எடைபோடப்பட்டுள்ளார். அத்துடன் இலங்கை இராணுவத்தினால் மட்டுமல்ல; இந்திய இராணுவத்தினால்கூட கைது செய்யப்படமுடியாத ஒருவராகவே பிரபாகரன் இருந்துவருகின்றனர்.

இலங்கையில் கடந்த ஒரு தசாப்தகாலத்துக்கும் மேலாக இடம்பெற்று வரும் உள்நாட்டு யுத்தம் எல்.ரி.ரி.ஈ.யை அழிப்பதுடன், அவ்வியக்கத் தலைவர் பிரபாகரனை உயிருடன் அல்லது உயிரற்ற விதத்தில் கைப்பற்றுவதாகவுமே இருக்கின்றது.

இலங்கை அரசின் இம்முயற்சியென்பது காலத்துக்குக்காலம் தோல்வியைத் தழுவி வருவதுடன், பாரிய இழப்புக்களை எதிர் கொண்டதாகவுமே இருக்கின்றது.

அத்துடன் எல்.ரி.ரி.ஈ.யை அழிக்கும் இலங்கை அரசின் பிரயத்தனமே, பெருந்தொகைப் பணத்தையும், நாட்டின் மூல வளங்களையும் ஏப்பம் விடுவதாகவும் அமைந்துள்ளது.

இந்த ஆண்டு சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு- செலவுத்திட்டத்தில் 4 ஆயிரத்து 300 கோடி ரூபாவுக்கும் அதிகமானதொகை இராணுவச் செலவுகளுக்காகவே ஒதுக்கப்படவுள்ளது.

எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் அடிமட்ட உறுப்பினர்கள் மட்டுமல்ல, அதன் முக்கிய தலைவர்கள்கூட தாம் பிடிபடும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டபோது தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

1987ம் ஆண்டு பலாலி விமானத்தளத்தில் எல்.ரி.ரி.ஈ.யின் முக்கிய உறுப்பினர்கள் ஆறு பேர் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்துகொண்டனர். இவர்களில் எல்.ரி.ரி.ஈ.யின் ஆரம்பகால உறுப்பினர்களான குமரப்பா, புலேந்திரன் ஆகியோரும் அடங்குவர்.

இலங்கைப்படையினர், இந்த எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்களை கொழும்பு கொண்டுவர எத்தனித்தபோதே அவர்கள் தம்மை மாய்த்துக்கொண்டனர்.

இதுதவிர, மூன்று வருடங்களுக்கு முன்னர் இந்தியக் கடற்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டபோது, எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் முக்கிய தலைவரான கிட்டு என்றழைக்கப்படும் சதாசிவம் கிருஷ்ணகுமார், தாம் இருந்த கப்பலையே குண்டு வைத்துத் தகர்த்து தற்கொலை செய்துகொண்டார்.

எனவே எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் தலைவரான வே.பிரபாகரனோ அல்லது அவரோடு தேடப்படுகின்ற ஏனைய உறுப்பினர்களோ கைது செய்யப்படும் சந்தர்ப்பம் ஏற்படுமானால் தற்கொலை செய்யும் முடிவுக்கே வருவார்கள் என்று நம்பமுடியும்.

இந்நிலையில் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தலைவர் வே.பிரபாகரன்மீதும் அவரது இயக்கத்தின் ஏனைய உறுப்பினர்கள் 10 பேர்மீதும் மத்திய வங்கித் தகர்ப்புத் தொடர்பாகத் தாக்கலாகியுள்ள வழக்கு, பிரபாகரனோ அல்லது ஏனைய சந்தேக நபர்களோ நீதிமன்றம் வராத நிலையிலேயே நடத்தப்பட முடியும்.

எல்.ரி.ரி.ஈ. அமைப்புடன் பேசாதவிடத்து வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக்காண முடியாது என்று திடமாக நம்பிய இன்றைய

குற்றச்சாட்டுகள் மத்திய வங்கிச் சம்பவம் தொடர்பாக எல்.ரி.ரி.ஈ. மீது சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கு விசாரணை பூர்த்தியாகி எல்.ரி.ரி.ஈ. அமைப்பு குற்றவாளியாகக் காணப்படும் பட்சத்தில், அதனை இலங்கையில் தடைசெய்வதே ஆட்சியாளரின் நோக்கமாகவும் இருக்கமுடியும்.

இதன்பின்னர் எல்.ரி.ரி.ஈ.யுடன் பேச்சு நடத்த வேண்டிய நிலைப்பாட்டை முழுமையாக நிராகரித்து, தமது தீர்வுத்திட்டத்தை அமுலாக்குவதும் ஆட்சியாளரது திட்டமாக அமையமுடியும்.

இலங்கையின் இன்றைய அரசியல் நிலவரத்தை நோக்கும்போது பல்வேறு விசேட ஜனாதிபதி ஆணைக் குழுக்களும் இயங்கி வருவதையே அவதானிக்க முடிகின்றது.

இந்த விசாரணைக் கமிஷன்கள் மூலமாக ஆட்சியாளர்கள் எதிர்க்கட்சியினரைக் குற்றவாளிகளாகக் காண்பதிலேயே முனைப்பாக இருக்கின்றனர்.

ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் கொழும்பின் சுற்றுப் புறத்திலுள்ள பட்டலந்த என்ற இடத்தில் இன்றைய எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க சித்திரவதை முகாம் ஒன்றை நடத்தினார் என்ற வகையில் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

**எதிர்க்கட்சித் தலைவர் குற்றவாளியாகக் காணப்பட்டால், அவரைத் தண்டித்து அவர் தலைமை தாங்கும் ஐ.தே.க.வை இன்றைய ஆட்சியாளர்கள் ஒரு பயங்கரவாத அமைப்பாகத்தடை செய்வார்களா? என்ற கேள்வி எழும்பவே செய்கின்றது.**

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்ததும், யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் எரிக்கப்பட்டது தொடர்பாகவே முதலாவது ஆணைக்குழு விசாரணை நடத்தப்படுமென்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இன்றுவரை அது பற்றிய பேச்சு எதனையும் காணவில்லை.

யாழ்ப்பாணத்தில் பொதுசன நூலகம் மட்டுமல்ல- வேறுபல பெறுமதிமிக்க கட்டிடங்கள், உயிர், உடமைச் சேதங்களுக்கும் அன்றைய ஐ.தே.க.வினர் மட்டுமல்ல; இன்றைய ஆட்சியினர்கூட பொறுப்பாளிகளாகவே இருக்கின்றனர்.

எனவே வடக்கே இடம்பெற்ற எண்ணிலடங்காத உயிர்- உடமைச் சேதங்கள் குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்காத ஆட்சியாளர்கள், கொழும்பில் மத்திய வங்கிக்கட்டிடம் தகர்க்கப்பட்டது தொடர்பாக வழக்குத்தாக்கல் செய்ய முன்வந்துள்ளனர்.

இவ்வழக்கின் மூலம் வடக்கு-கிழக்கில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் அதேசமயம், எல்.ரி.ரி.ஈ. அமைப்புடனான பேச்சுக்களுக்கான கதவுகளையும் மூடிவிடவே

## யாழ் பொது சன நூலக எரிப்புப்பற்றிய விசாரணைகளை மறந்த நிலையில் மத்திய வங்கி விவகாரத்தைப் பெரிது படுத்த முஸ்தீபு!



எரிந்த யாழ் நூலகம்-கமிஷன் வருமா?

ஆனால் தற்சமயம் இலங்கை அரசு எல்.ரி.ரி.ஈ. தலைவர் வே.பிரபாகரனை குற்றவாளிக்கூண்டில் நிறுத்த முற்பட்டுள்ளது.

யாழ் மேயர் அல்பிரட் துரையப்பா சுடப்பட்டதையடுத்து எல்.ரி.ரி.ஈ. தலைவர் பிரபாகரன் ஒரு சந்தேக நபராக வேண்டப்பட்டதும், சந்திரிகாவின் தாயார் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அன்றைய ஸ்ரீ.ல.சு.க. ஆட்சியிலாகும்.

இந்த ஒதுக்கீடு, மறுபுறத்தே எல்.ரி.ரி.ஈ. ஒரு பலம் மிக்க அமைப்பாகத் தொடர்ந்து இருந்து வருவதையே வெளிப்படுத்துவதாகவுமிருக்கின்றது.

பிடிபடும் சூழ்நிலை ஏற்பட்டால் தற்கொலை செய்து கொள்வதே எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் தாரக மந்திரமாக இருக்கின்றது. அவ் வமைப்பின் தலைவர் முதற்கொண்டு ஏனைய உறுப்பினர்கள் அனைவருமே கழுத்தில் சயனைட் நச்சு வில்லையைத் தொங்கவிட்டுள்ளனர். அத்துடன் சுற்றிவளைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் தற்கொலை செய்துகொண்டுமுள்ளனர்.

ஆட்சியாளர்கள், எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தலைவரை குற்றவாளிக்கூண்டில் ஏற்றுவதற்கான திட்டங்களை வகுத்துள்ளனர்.

இதன்மூலம் ஆட்சியாளர்கள் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தை சர்வதேச ரீதியாக ஒரு பயங்கரவாத அமைப்பென்று சித்தரிக்க முன்வந்துள்ளதையே ஊகிக்கமுடிகின்றது.

மத்திய வங்கிக் குண்டு வெடிப்புத் தாக்குதல் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் பட்சத்தில், அதுவோர் நீண்ட விசாரணைக்காலத்தையே கொண்டிருக்கும். ஏனெனில் 712

இந்த முகாமில் சித்திரவதை செய்யப்பட்டோர், மற்றும் அங்கிருந்து தப்பிவந்தோர் வழங்கி வரும் சாட்சியங்களை அவதானிக்கையில், பல நூற்றுக்கணக்கானவர்கள் அம்முகாமில் கொல்லப்பட்டிருக்கலாமெனக் கருதமுடிகின்றது.

**எனவே பட்டலந்த சித்திரவதை முகாம் மீதான குற்றச்சாட்டுகள் முழு அளவில் நிரூபணமாகி அம்முகாமின் சூத்திரதாரியாகச் சந்தேகிக்கப்படும்**

ஆட்சியாளர்கள் எத்தனிப்பதை அவதானிக்க முடிகின்றது.

தன்னை ஒரு முழுமையான ஆயுதப் போராட்ட அமைப்பாக் அறிவித்துள்ள எல்.ரி.ரி.ஈ.யை அரசியல் அரங்கிற்கு கொண்டுவரும் முயற்சிகளையே ஆட்சியாளர்கள் மேற்கொள்ள வேண்டுமேதவிர, அந்த அமைப்பை ஓர் ஆயுதப்போராட்ட சக்தியாக தொடர்ந்து இருப்பதற்கான சூழ்நிலைகளை உருவாக்கலாகாது.

## —புலிகள்— வெளியிட்ட பட்டியல் ஓயாத அலைகள்

முல்லைத்தீவு முகாம் மீதான 'ஓயாத அலைகள்' தாக்குதலில் தம்மால் கைப்பற்றப் பட்ட ஆயுத தளபாடங்களின் பட்டியலை புலிகள் இயக்கத்தினர் வெளியிட்டுள்ளனர்.

122 எம்.எம்.ஹொவிட்ஸர் ஆட்டிலறி பீரங்கிகள் இரண்டும், பவள் கவசவாகனமும் புலிகளால் எடுத்துச்செல்லப்பட்டவற்றில் அடங்குகின்றன.

ஹொவிட்ஸர் ஆட்டிலறி பீரங்கிகள் மரபு யுத்தத்துக்கு ஏற்றவை. 15 கிலோமீட்டர்வரை சுடுதூரம் கொண்டவை. ஆட்லறி பீரங்கிகள் புலிகளிடம் சென்றுள்ளதால் வன்னியில் பெரும் நிலபரப்புக்களில் படையினர் நிலை கொள்ள முடியாமல் போகும்.

கிளிநொச்சியிலிருந்து படையினர் தொடர்ந்து முன்னேறுவதாயின் ஆட்டிலறிப் பீரங்கிகளையும் எதிர்கொண்டாக வேண்டும். அதனால் இழப்புக்கள் அதிகமாகும்.

வன்னியில் அடுத்த நடவடிக்கையை ஆரம்பிக்க முன்னர் புலிகளிடமுள்ள ஆட்டிலறி களை தாக்கி அழித்துவிட விமானப்படையினர் முயல்கின்றனர்.

எனினும் காடுகளுக்குள் உருமறைப்புச் செய்யப்பட்டுள்ள புலிகளின் தளங்களை வேவு விமானங்களால் கண்டறிவது முடியாத காரியம். சலனங்கள் எங்காவது தெரிந்தால் ஒரு குத்துமதிப்பாக தாக்குதல் நடத்த வேண்டியதுதான்.

படையினரின் வன்னி நடவடிக்கைத் திட்டத்துக்கு படையினரால் முல்லைத்தீவில் புலிகளிடம் இழக்கப்பட்ட ஆயுதங்களும் பெரும் சவாலாக மாறியுள்ளன.

ஆயிரக்கணக்கான மோட்டார் குண்டுகள் புலிகளிடம் சிக்கியுள்ளன. புலிகள் தாமே சொந்தமாகத் தயாரிக்கும் மோட்டார் குண்டு களைவிட அவை தரமானவை. உத்தரவாத மானவை. எனவே சரமாரியான மோட்டார் ஷெல் தாக்குதல்களை படையினர் எதிர் கொண்டாக வேண்டும்.

முல்லையில் தம்மால் கைப்பற்றப்பட்ட தாக புலிகள் இயக்கத்தினரால் வெளி யிடப்பட்டுள்ள பட்டியல் இது.

*120 எம்.எம்.ஹொவிட்ஸர் ஆட்டிலறி பீரங்கிகள்-2, *ஏ.கே ரக துப்பாக்கிகள்-1402, ஜி3 ஏ3-05, *எப்.என்.சி-01, *ஆர்.பி.டி.எல். எம்.ஜி-93, *ரி-81 ஏ1. எல்.எம்.ஜி-02, *பி.கே. ஜி.பி.எம்.ஜி-26, *எல்-300-04, *டபிள்யூ-85 ரக விமான எதிர்ப்பு இயந்திரத் துப்பாக்கி கள்-03, *45 கோல்ற் பிஸ்டல்-01, *பிரௌனிங் பிஸ்டல்கள்-04, *ரி.ரி.33 ரொக்க ரேவ்-02, சி.சற்.75-02, * .38 ரிவோல்வர்-01.



*40 எம்.எம்.கிரனைட் பிஸ்டல்-03, *40எம்.எம்.சிஸ் 40, கிரனைட் லோஞ்சர்-26 *106 எம்.எம்.ஆர்.சி. எல்.எம். 40 ஏ1-01, *ரி69-1 ஆர்.பி.ஜி. லோஞ்சர்-29 *120 எம்.எம். மோட் டார்-02, *81 எம்.எம். மோட்டார்-12 *60 எம்.எம்.மோட்டார்-30,

*40எம்.எம்.கிரனைட்-42 *ரைபிள் கிரனைட்-487, *40 எம்.எம்.ஆர்.பி.ஜி. எறிகணைகள்-821, *106 எம்.எம்.ஆர். சி.எல். எறிகணைகள்-59, *122 எம்.எம். ஹொவிட்ஸர் ஆட்டிலறிக் குண்டுகள்-903, *25 பௌண்டர் குண்டுகள்-672, *120 எம்.எம். மோட்டார் குண்டு கள்-2297, *81 எம்.எம். மோட்டார் குண்டுகள்-1350, *60 எம்.எம். மோட்டார் குண்டுகள்-1071, * 82 எம்.எம். மோட்டார் குண்டுகள்-30, *கைக்குண்டுகள்-2846, * புகைக் குண்டுகள்-138,

*கிளைமோர்-334 *ஜம்பிங் மைன்ஸ்-360, *அமுக்க வெடிகள்- 3222, *வாகன கண்ணி வெடிகள்-369, *கட்டுப்பாட்டு கண்ணி வெடிகள்-65 *ஹாண்ட் எலக்ரிக்கல் பயரிங் டிவைஸ்-227, மற்றும் பல இலட்சக்கணக்கான ரவைகள் ஆகியன கைப்பற்றப்பட்டதாக புலிகள் வெளியிட்ட பட்டியல் தெரிவிக் கிறது.

படையினர் தரப்பில் முல்லைத்தீவு முகா மில் இருந்த ஆயுத விபரங்கள் வெளியிடப் படாமையால் புலிகள் இயக்கத்தினர் வெளி யிட்ட பட்டியலுடன் ஒப்பிட்டுச் சரிபார்க்க முடியவில்லை.

புலிகள் இயக்கத்தினர் சிறிய ரக விமானங்களை பயன்படுத்தித் தாக்கலாம் என்பதால் முகாம்களில் விமான எதிர்ப்பு துப்பாக்கிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டி ருந்தன. முல்லை முகாமில் அவ்வாறு வைக் கப்பட்டிருந்த விமான எதிர்ப்பு துப்பாக்கிகள் மூன்று புலிகளிடம் சென்றுள்ளன.

இவற்றால் விமானத்தை குறிவைத்து தாக்க லாமே தவிர, சாம்-7 ரக ஏவுகணைகள்போல குறிப்பிட்ட தூரம் விமானத்தை மோப்பம் பிடித்து துரத்தித் தாக்கக்கூடியவை அல்ல. விமான எதிர்ப்பு இயந்திரத் துப்பாக்கிகளின் சுடுதூரம் ஐந்து கிலோமீட்டர்.

www.padippakam.com

# கொள்ளை ராணி
## பூலான்தேவி

அந்த இன்ஸ்பெக்டர் தனது வெறியைத் தீர்த்துக்கொண்டான்.

எஜமான் விருந்துண்ண வாய் ஊறியபடி பார்த்துக்கொண்டிருந்த நாய்கள் மாதிரி அந்த இரண்டு பொலிஸ்காரர்களும் அக் காட்சியைக் கண்ணாரக் கண்டு இரசித்தார்கள். தங்கள் சந்தர்ப்பத்துக்காக நாக்கைத் தொங்கப்போட்டுக் கொண்டு காத்திருந்தார்கள்.

என்னிடமிருந்து எழுந்து இன்ஸ்பெக்டர் விலகிப்போனதும் இரண்டு பொலிஸ்காரர்களில் ஒருவன் எழுந்து தன் உடைகளைக் களைந்தான்.

என்மீது அந்தக் கழிசடை பரவியது மட்டும்தான் எனக்குத் தெரியும். என் சக்தி முழுவதும் இழக்கப்பட்டு நான் மயக்கமாகிப்போனேன்.

அதன்பின்னர் நடந்தது எதுவும் எனக்குத் தெரியாது. நான் சுயநினைவை மீளப்பெற்றபோது பொழுது விடிந்தும் விடியாமலிருந்தது.

உடம்பெல்லாம் மரணவலியாக இருந்தது. பாறாங்கற்களை தூக்கி என் உடல் மீது வைத்ததுபோல பாரமாக இருந்தது. எழமுடியவில்லை.

அப்போதுதான் என் உடலைக் கவனித்தேன்: அவமானமும், ஆத்திரமும் ஒன்றுசேர்ந்த கலவையாகி எனக்குள் பீறிட்டது.

என் இடுப்புக்கு மேலே துணியே இருக்கவில்லை. வலது மார்பில் நகத்தால் பிறாண்டப்பட்டு இரத்தம் கசிந்திருந்தது. அதன்கீழே பற்களால் கடிக்கப்பட்ட அடையாளம் தெரிந்தது. பல்லொன்று ஆழப்பதிந்த அடையாளம் இருந்தது. பயங்கரமாக வலித்துக் கொண்டிருந்தது.

இரண்டுகைகளாலும் மார்புகளை மறைத்துக் கொண்டேன்.

'ஐயோ! நான் என்ன பாவம் செய்தேன்? நான் ஏன் இந்த நரகத்தில் இடப்பட்டேன்? பெண்ணாகப் பிறந்தது தான் பாவமா?' அழுகை, அழுகையாக வந்தது.

பற்களைக் கடித்து வலியைப் பொறுத்துக் கொண்டு உடலை அசைத்து எழுந்து உட்கார்ந்து முழங்கால்களுக்கிடையே முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதேன். கண்ணீர் வற்றும்வரை அழுதேன்.



கண்ணீர் என் மார்புகளை நனைத்து காயங்களைக் கழுவியது. எனக்கு இழைக்கப்பட்ட பாவங்களை யார் கழுவுவது?

'பூலான் அழாதே! நீ ஏன் அழ வேண்டும்? யாருக்கும் நீ ஒரு தீங்கும் செய்யவில்லையே. எல்லோரும், எல்லாமும் உனக்குத்தானே தீங்கு செய்கின்றன.' எனக்குள் வழக்கமாகக் கேட்கும் என் உள்ளுணர்வு என் கன்னத்தில் அறைவது போலக் கேட்டது.

சொன்னால் நம்பமாட்டீர்கள்; வாழ்க்கையில் நான் அடிபட்டபோதெல்லாம் என் உள்ளுணர்வுதான் எனக்குத் துணையாக இருந்து வழி சொல்லித் தந்தது.

என் கனவில் தோன்றும் வெள்ளை உடையும், கையொன்றில் துப்பாக்கியும் ஏந்திய தேவதைதான் எனக்குள்துணிவை ஏற்படுத்திக் கொண்டாள். ஒருவேளை நான் வணங்கும் துர்க்காதேவிதான் அப்படிக் கனவில் தோன்றுகிறாளோ என்றும் நான் நினைத்துக் கொள்வேன்.

என் உள்ளுணர்வும், அந்தக் கனவுத் தேவதையும் இல்லாவிட்டால் நீங்கள் இந்த பூலான்தேவியை அறிந்திருக்கவே முடியாது.

மிருகங்களுக்குப் பயந்து செத்து ஜமுனா ஆற்றில் பிணமாக மிதந்திருப்பாள். விரட்டி விரட்டி குதறிய ஈனப்பிறவிகளை, வேசிமக்களை திருப்பி துரத்தியடிக்கும் பூலான்தேவி உங்களுக்குக் கிடைத்திருக்கமாட்டாள்.

இப்போதும் அந்த உள்ளுணர்வுதான் என் கண்ணீரை நிறுத்தியது. 'அழாதே பூலான்' என்று உறுத்தியது.

எப்படி அந்த வேகம் வந்ததோ தெரியவில்லை. இதுவரை அனுபவித்த வலியெல்லாம் எங்கே போனதென்றும் தெரியவில்லை.

சட்டென்று எழுந்தேன். மார்புக்கு குறுக்காக கைகளைக்கட்டிக்கொண்டு சிறைக் கூண்டின் கம்பிகளுக்கு அருகே நின்று, என் பலத்தையெல்லாம் திரட்டிக் கத்தினேன்.

"டேய்! துப்புக்கெட்ட நாய்களே! வாங்களடா வாங்கள்! டேய்....தூ....! கழிசடைகள்! விடமாட்டேன்டா! உங்களை விடமாட்டேன். ஒழுங்காகப் பிறக்காத பரதேசி நாய்களே! உங்கள் அம்மாமாரை கூட்டிவந்து நிறுத்திவிட்டு என்னைத் தின்னுங்களடா. சேலையை உரிந்து போடுங்கடா. பேடிப் பயல்களே! தூ! டேய்...டேய்! எங்கேயடா போனீர்கள்?"

நான் போட்ட சத்தம் கேட்டு மூன்று நான்கு பொலிஸ்காரர்கள் ஓடிவந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் அந்த இன்ஸ்பெக்டரும் தூக்கக் கலக்கத்துடன் எழுந்து வந்தான்.

"என்னடா சத்தம்?" என்றான் இன்ஸ்பெக்டர்.

"இவள் எங்களையெல்லாம் கெட்ட வார்த்தைகளால் திட்டிக்கொண்டிருக்கிறாள்," என்றார்கள் பொலிஸ்காரர்கள்.

குடித்து சிவப்பேறிய கண்களை இடுக்கிக்கொண்டு இன்ஸ்பெக்டர் என்னை முறைத்துப் பார்த்தான்.

"ஏண்டி கழுதை! திறந்து போட்டுமா உன் திமிர் அடங்கவில்லை? சிறுக்கி!"

"யாரடா சிறுக்கி, நீதாண்டா சிறுக்கன்!" என்றேன். அவன் முகம் கோபத்தில் மேலும் அசிங்கமாகத் தெரிந்தது.

"என்னடி சொன்னாய்?.... என்னையாடி சொன்னாய்?"

"உன்னைத்தானடா சொன்னேன், உதவாக்கரை நாயே! உனக்கென்னடா மரியாதை!"

"திறவுங்களடா கூண்டை! இவளுக்கு கொழுப்பு கரைந்தால்தான் குனிவாள்!"

பொலிஸ்காரர்களில் ஒருவன் ஓடிப்போய் சாவிக்கொத்தை எடுத்துவந்து கூண்டைத் திறந்துவிட்டான்.

வெறிவந்தவன்போல உள்ளே பாய்ந்த இன்ஸ்பெக்டர், பாய்ந்த வேகத்திலேயே காலால் என் வயிற்றில் உதைத்தான்.

உயிர்போய் வந்தது. நான் மல்லாந்து விழுந்துபோனேன். அவன் என் குரல்வளையில் தன் குதிக்காலால் அழுக்கினான்.

எனக்கு மூச்சு முட்டியது.

நான் சாகப்போகிறேன். என்னைக் கொல்லப்போகிறான்.

சித்திரவதைப்படுவதைவிட சாவதேமேல் என்று நினைத்தேன்.

'பூலான் விடாதே! நீ சாகக்கூடாது! இவர்கள்தான் சாகவேண்டும்! நீ செத்துப் போனால் இவர்களை சாகடிக்கமுடியுமா?' உள்ளுணர்வு எச்சரித்தது.

மார்புக்கு குறுக்காக கட்டிக்கொண்டிருந்த என் கைகளை விலக்கினேன்.

என் குரல்வளையில் அழுத்திக்கொண்டிருந்த இன்ஸ்பெக்டரின் காலை இரண்டுகைகளாலும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன். அவனது கால் பெருவில் என் வாயருகே தெரிந்தது.

அப்படியே கௌவி ஒரே கடியாக கடித்தேன்.

அவன் அதை எதிர்பார்க்கவில்லை.

"ஐயோ கடிக்கிறாள்...... சி....சிறுக்கி" என்று வலியால் அலறினான்.

நான் விடவில்லை. என் பற்களுக்குள் அவன் பெருவிரல் வசமாக சிக்கிக் கொண்டது.

பொலிஸ்காரர்களில் ஒருவன் குனிந்து என் கன்னத்தில் அறைந்தான். கன்னத்தில் அறைந்தால் வாயைத் திறப்பேன் என்று நினைத்தான் போலும். நான் விடவில்லை.

"ஐயோ ஐயோ!....த்தா விடடி!" என்று கத்திக்கொண்டு கைகளை மேலும் கீழும் உதறிக்கொண்டு அவன் வலியால் துடிப்பதைக்காண எனக்கு ஏற்பட்ட சந்தோசம் இருக்கிறதே- அதைச் சொல்லிப் புரியவைக்க முடியாது.

என் மூக்கில் இடியை இறக்கியது போல குத்தினான் ஒரு பொலிஸ்காரன்.

என் மூக்கு உடைந்தது குபுக்கென்று இரத்தம் பாய்ந்தது.

என் உச்சந்தலைக்குள் ஏதோ சுழன்றது.

அதேநேரம் என் வயிற்றில் பூட்ஸ் காலால் ஒருவன் ஓங்கி ஓங்கி உதைத்துக் கொண்டிருந்தான்.

மெல்ல மெல்ல என் பிடி தளர அவன் தன் பெருவிரலை மீட்டுக்கொண்டான்.

அப்படியே தரையில் அமர்ந்துகொண்டு அவன் வலியால் துடித்துக்கொண்டிருக்க, என்னை அடிப்பதை நிறுத்திவிட்டு, அவனைச் சுற்றி நின்று அனுதாபப் பார்வை பார்த்தனர் பொலிஸ்காரர்கள்.

எனக்கு உயிர்போகும் வலியிலும் அவர்களைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது.

ஒரு பெண்ணை சமாளிக்க ஒருத்தனால் முடியவில்லை. பேடிகள்.

அப்போதே எனக்குள் முடிவு செய்து கொண்டேன்.

இவர்களை திருப்பியடிப்பது அப்படி ஒன்றும் பெரிய காரியமல்ல.

துணிந்தால் முடியும்.

துணியத்தான் போகிறேன்! அப்போது இவர்கள் உடலில் துணியும் இருக்காது; உயிரும் இருக்காது!

அந்த நினைப்பே என் வேதனைகளுக்கு ஆறுதல் ஒத்தடமாக இருந்தது.

ஒரு பொலிஸ்காரனின் தோளில் தொங்கியபடி நொண்டிக்கொண்டு கூண்டை விட்டு வெளியே போனான் இன்ஸ்பெக்டர்.

போகும்போது பொலிஸ்காரர்களில் ஒருவனிடம் காதோடு காதாக ஏதோ சொல்லி விட்டுப் போனான்.

அந்த பொலிஸ்காரன் என்னருகே வந்தான்.

"நல்ல வளர்த்தி" என்றான். மற்றவர்கள் சிரித்தார்கள். நான் கைகளை மார்புக்கு குறுக்காக கட்டிக்கொண்டேன்.

நாலு திட்டுத்திட்டலாம் என்றால் அதற்கு சக்தி இல்லாமல் இருந்தது.

"நாங்கள் ஐந்துபேர் இருக்கிறோம். இரவு நல்ல சாப்பாடு போடு. என்ன? நீ என்னடி போடுவது? நாங்களே சாப்பிட்டுக் கொள்கிறோம். இந்தா! அவள் சேலையை கொண்டுவந்து எறி! மூடிவைத்தால்தான் சாப்பாடு சூடாக இருக்கும்" இளித்தான் கழுதை.

அவனும் மற்றவர்களும் கூண்டைப் பூட்டிக்கொண்டு போனார்கள். கம்பிகள் வழியாக என் கிழிந்த சேலையையும், ரவிக்கையையும் ஒருத்தன் உள்ளே வீசினான்.

சேலையை எடுத்துப் பார்த்தேன். ஆசையாக தீபாவளிக்கு அப்பா வாங்கித்தந்த சேலை. என்னிடமிருந்ததே மூன்றே மூன்று சேலைகள்தான். அதிலும் கிழிசல் இல்லாமல் இருந்தது இது மட்டும்தான்.

என்னோடு சேர்த்து என் சேலையையும் கிழித்துவிட்டார்கள்.

கண்ணீர் வந்தது, கட்டுப்படுத்தினேன்.

'பரவாயில்லை, என்றோ ஒருநாள் பதில்சொல்லத்தானே போகிறார்கள்!'

அந்த நாள் நான் நினைத்ததைவிட வேகமாக நெருங்கி வரத் தொடங்கியதைத் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகள் சொல்லாமல் சொல்லின.

(தொடர்ந்து வரும்)



பூலான்

தருவது 15 ரசிகள்

கடந்தவாரம்

- பூலான்தேவி
- பொலிஸ் நிலையத்தில்
- சித்திரவதைக்கு உள்ளாகிறாள்.
- தனது ஆசைக்கு
- இடம்கொடுத்தால்
- அவளை விடுதலை செய்வதாக
- கூறுகிறார் இன்ஸ்பெக்டர்.
- பூலான் மறுக்கிறாள்.
- இறுதியில் அவளை
- பலாத்காரமாக சேதப்படுத்துகிறார்கள்.

இனி...

# தாடி இல்லாவிட்டால் தண்டனை
## 'டாலிபென்' இயக்கத்தின் கட்டுப்பாடு

டாலிபென்-தற்போது ஆப்கானிஸ்தானைக் கலக்கிக் கொண்டிருக்கும் இயக்கத்தின் பெயர் அதுதான்.

நீண்டகால உள்நாட்டுப் போரினால் புயலில் அகப்பட்ட படகுபோல மாறிவிட்டது ஆப்கானிஸ்தான்.

ஆப்கானிஸ்தானுக்குள்ளும் பல தீவிரவாத இயக்கங்கள் இருக்கின்றன. சகல குழுக்களிடமும் விதம் விதமான ஆயுதங்களும் இருக்கின்றன.

பக்கத்து நாடான பாகிஸ்தான் தனது ஆதரவுக் குழுக்களுக்கு ஆயுதங்களுக்கு பஞ்சமில்லாமல் வாரி வழங்குகிறது.

ஆப்கானிஸ்தானில் கம்யுனிஸ்ட் அரசு இருந்தபோது சோவியத் யூனியன் நாட்டுப் படைகள் அதற்குக் காவலாக இருந்தன.

அமெரிக்காவுக்கு அது பிடிக்கவில்லை. பாகிஸ்தான் ஊடாக ஆப்கான் கிளர்ச்சிக்காரர்களுக்கு நவீனரக ஆயுதங்களை வகை தொகையில்லாமல் வாரிக்கொடுத்தது அமெரிக்கா.

பின்னர் சோவியத் படைகள் ஆப்கானிஸ்தானிலிருந்து திரும்பிப்போய்விட்டன. கிளர்ச்சியாளரின் கிடுக்குப் பிடியால் கம்யூனிஸ்ட் அரசும் பொத்தென்று விழுந்துபோனது.

ஆப்கானிஸ்தான் தீவிரவாத இயக்கங்களும் நம்நாட்டு தமிழ் இயக்கங்களின் ஸ்டைலில் தங்களுக்குள் அடிபட்டுக் கொண்டன. பல குழுக்களாகப் பிரிந்து பலப் பரீட்சை நடத்திக் கொண்டிருக்கின்றன.

அக்குழுக்களில் டாலிபெனுக்கு பாகிஸ்தான் மட்டுமல்ல சவுதி அரேபியாவும் ஆதரவுக் கரம் நீட்டி தட்டிக் கொடுக்க, டாலிபென் கிடு கிடு வென்று வளர்ச்சி பெற்று விட்டது.



இன்று ஆப்கானிஸ்தானில் 'டாலிபென்' தனிக்காட்டு ராஜாவாக கொடிகட்டிப் பறக்கிறது.

டாலிபென் இயக்கக் கட்டுப்பாடுகளும், விதிமுறைகளும்தான் வயிற்றில் புளியைக் கரைக்கிறது. சற்று முகம் சுளிக்கவும் வைக்கிறது.

ஆப்கானிஸ்தான் பெண்கள் பாடசாலைக்கு செல்லத் தேவையில்லை. படிப்பு பெண்களுக்கு தேவையில்லாத ஒரு விடயம் என்கிறது 'டாலிபென்'.

ஆப்கான் பெண்களிடம் கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக ஒருபெண் தீக்குளித்திருக்கிறார். தங்கள் பெண் பிள்ளைகளுக்கு வீடுகளில்வைத்து இரகசியமாகப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள் பலர்.

அதுமட்டுமல்ல சாதாரண கேளிக்கைகள், பொழுதுபோக்குகள் என்பவற்றுக்கும் 'டாலிபென்' தடை விதித்திருக்கிறது.

தொலைக்காட்சி பார்க்கக்கூடாது. சீட்டாட்டம் கூடாது. செஸ் விளையாடக்கூடாது. சினிமா கூடாது. இன்னிசை தேவையில்லை என்று ஏகப்பட்ட கட்டுப்பாடுகள்.

வடக்கில் புலிகள் இயக்கத்தினரும் சினிமா, சினிமாப்பாடல்கள் மற்றும் கேளிக்கை நிகழ்ச்சிகளுக்கு ஒரு காலத்தில் தடைவிதித்திருந்தார்கள்.

டாலிபென் தனது நிதித் தேவைக்கு நம்பியிருப்பது கஞ்சா செடிகளைத்தான். ஆப்கானில் 75 சதவீதமான கஞ்சாச் செடி உற்பத்தி டாலிபென்னின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. கஞ்சாவை ஆப்கானுக்கு வெளியே விற்பனை செய்து பணத்தை திரட்டிக்கொள்கிறார்கள்.

ஆண்கள் கட்டாயம் தாடி வளர்க்க வேண்டும். தவறினால் தண்டிக்கப்படுவார்கள் என்று சட்டமே வைத்திருக்கிறது டாலிபென். சிலருக்கு சுட்டுப்போட்டாலும் தாடி வளராது. அவர்கள் பாடு என்னாகுமோ தெரியாது!

திருட்டுக் குற்றத்தில் மாட்டிக் கொண்டால் டாலிபென் சட்டப்படி கால்களையும், கைகளையும் சதக் சதக் என்று வெட்டி வீசிவிடவேண்டுமாம்.

'டாலிபென்' மேலும் என்னென்ன விதிகளைப் போட்டு மிரட்டப்போகிறதோ தெரியவில்லை.

# அசாருதீன்—சங்கீதா
## ஒப்பந்தம் முடிஞ்சாச்சு

'கப்டன்' பதவி என்னும் கிரீடம் தலையில் இருந்து இறக்கிவைக்கப்பட்டதும் அசாருதீனின் துடுப்பாட்டத்தில் நிமிர்வு தெரிகிறது.



அசார்-சங்கீதா

மீண்டும் பழைய அசாருதீனைப் பார்க்க முடிகிறது என்று அவரது நண்பர்களும், இந்தியக் கிரிக்கெட் அபிமானிகளும் பாராட்டுகிறார்கள்.

'அப்பாடா...' என்று பெருமூச்சு விடுகிறார் அசார். பெருமூச்சுக்கு காரணம் இல்லாமல் இல்லை.

அசாரின் விளையாட்டுத் திறமை மங்கிப்போனதுக்கு காதல் விவகாரம்தான் காரணம் என்று முணுமுணுப்புக்கள் கிளம்பியிருந்தன. இல்லையில்லை, கப்டன் பொறுப்பின் சுமைதான் அவரது தோளை அழுத்துகிறது என்று வாதிட்டனர் அசாருதீனின் அபிமானிகள்.

பின்னதுதான் உண்மை என்று இப்போது நிரூபித்துக் கொண்டிருக்கிறார் அசார்.

காதல் ஒரு மனிதனை உற்சாகப்படுத்துமே தவிர, ஆற்றலை முறித்து மூலையில் போட்டுவிடாது. காதல் ஒரு உற்சாக மாத்திரை மாதிரியானது. அது ஒருபோதும் உபத்திரவமாக இருக்காது என்கிறார்கள் மனோதத்துவ நிபுணர்கள்.

எல்லாம் இருக்கட்டும் அசார்-சங்கீதா காதல் எந்தக் கட்டத்தில் இருக்கிறது என்று கேட்கிறீர்களா?

காதும் காதும் வைத்த மாதிரி இருவரும் திருமண ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். சாட்சிக் கையெழுத்துப் போட்டு காதலை வாழவைத்திருப்பவர் யார் தெரியுமா? முன்னாள் கிரிக்கெட் வீரர் ரவிசாஸ்திரி.

இந்த விபரங்களை மும்பாயின் பிரபல ஆங்கில இதழ் ஒன்று வெளியிட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மூவரும் அதனை மறுக்கவில்லை. மௌனமாக இருக்கிறார்கள்.

மௌனம் சம்மதத்தின் அறிகுறிதானே!

இதற்கிடையே சங்கீதா ஒரு தொலைக்காட்சித் தொடரிலும் நடித்துவருகிறார். 'சாந்தினி' என்ற பெயரில் தயாராகியுள்ள தொலைக்காட்சித் தொடரில் கொஞ்சம் கவர்ச்சியும் காட்டியிருக்கிறார் சங்கீதா. தொடரில் சங்கீதாவின் காதலராக வருபவர் சத்யஜித்.



தொலைக்காட்சித் தொடரில்



படிப்பகம்

www.padippakam.com

# கொம்பு வேட்டை..!



அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருப்பவை எல்லாமே காண்டாமிருகக் கொம்புகள். சீனாவில் இந்தக் கொம்புகளுக்கு அமோக வரவேற்பு. இவற்றை இடித்துப் பொடியாக்கி மருத்துவத் தேவைக்குப் பயன்படுத்துகிறார்கள். அதனால் விலையும் பயங்கரம்.

இலண்டனில் இருந்து சீனாவுக்கு நைசாகக் கடத்தப்படவிருந்த காண்டாமிருகக் கொம்புகள்தான் இங்கு காணப்படுகின்றன. இரகசிய தகவல் ஒன்றை அடுத்து மேற்கு இலண்டன் பொலிசார் நடத்திய வேட்டையில் இவை சிக்கிக்கொண்டன. இதன் மூலம் உலகில் மிகப்பெரிய கடத்தல் ஒன்றை தடுத்த பெருமை பொலிசாருக்குக் கிடைத்துள்ளது.

மொத்தம் 105 கொம்புகள் சிக்கின. ஆக, அவ்வளவுதானா என்கிறீர்களா? பொறுங்கள். இவற்றின் பெறுமதி என்ன தெரியுமா? 3 மில்லியன் அமெரிக்க டொலர்கள். நம்மூர் பெறுமதியில் 16 கோடியே 80 இலட்சம் ரூபாய்கள்.

# என்ன செய்தி அண்ணே?




பகிரங்க இடத்தில் முரசை விரித்துப் படிக்கத் தொடங்கிவிட்டால், "அண்ணே என்ன செய்தியண்ணே?" என்று கழுத்துக்குப் பின்னால் குரல் கேட்கும். ஓசியில பார்க்க வந்திட்டாங்கப்பா நிம்மதியாகப் படிக்க முடியல்லை என்று நினைப்பீங்களா இல்லையா. (நினைக்காவிட்டால் உங்களுக்கு ரொம்ப ரொம்ப பெரிய மனசப்பா.)

இங்கு பத்திரிகை படிப்பவரைப் பாருங்கள். அவருக்கு பின்னால் நின்று ஓசிப் பத்திரிகை படிப்பவர் ஒட்டகச்சிவிங்கியார். ஓசிப்பத்திரிகை படிப்பவர்களுக்கு கழுத்துக் கொஞ்சம் நீளமாக இருந்தால் உபயோகம் என்று காட்டத்தான் இந்தப் படப்பிடிப்போ? இது கிளிக் செய்யப்பட்டது கோலாலம்பூர் மிருகக் காட்சிச் சாலையில்.

# மனம் கவர் மயானம்

மயானம் என்றாலே மனதில் ஒரு பயம்தான். மயானத்தைப் பார்த்ததும் மனதுக்குள் ஒரு சோகம் ஓடி வந்து குந்திக்கொள்ளும். ஏனெனில் பசுமையே கண்ணில் படாது. எல்லாமே வெறுமைபோலத் தெரியும்.

ஆனால் இந்தியாவில் ஜாம் நகரில் உள்ள மயானம் அதற்கெல்லாம் விதிவிலக்கு. நாமும் இங்கேயே இருந்துவிடலாமா (?) என்று தோன்றும். அத்தளவுக்கு அழகான பூங்காபோல காட்சியளிக்கிறது. மலர்செடிகளும், அழகிய மரங்களும் நிரந்தரத் தூக்கத்தில் இருப்போருக்கு இதமாக சாமரம் வீசுகின்றன. நாளை நமக்கும் இப்படி சாமரம் வீசப்படும் என்பதால் சற்று நிம்மதியாகவும் இருக்கும்.



மேலும் இந்த மயானத்தில் உள்ள விசேஷ வசதிகள் பின்வருமாறு:

கடவுள் சிலைகள், தேசியத் தலைவர்களின் சிலைகள் ஆங்காங்கு காணப்படுகின்றன. மனிதனின் பல்வேறு பருவங்களைக் குறிக்கும் சிற்பங்களும் வைக்கப்பட்டுள்ளன. பிரார்த்தனைக்கூடம் ஒன்றும் உள்ளது. மயானம் செல்வோர் குளிப்பதற்கும் இளைப்பாறவும் இடம் இருக்கிறது. மயானமா? மனம் கவர் பூமியா? என்று பிரமிப்பாக உள்ளதல்லவா. மயானத்தின் ஒரு பகுதிதான் படத்தில் காணப்படுகிறது.

# விண்ணில் ஒரு தேடுதல்

நம்நாட்டில் தேடுதல் வேட்டைச் செய்திகளுக்கு குறைவே இல்லை. கேட்டும், பார்த்தும், அனுபவித்தும் புளித்துப் போனவர்களுக்கு ஒரு வித்தியாசமான தேடுதல் வேட்டைச் செய்தி.

அண்டவெளியில் ஆராய்ச்சி நடத்த 1957இல் ஒரு விண்கலத்தை (சற்றலைற்) அனுப்பியது சோவியத் ரசியா. 'ஸ்புட்னிக் 1' என்பது அதன் பெயர்.

அதன் ஆயுள் 92 நாட்கள் மட்டும்தான். ஆயுள் முடிவதற்கிடையில் மீண்டும் அதனை பூமிக்கு எடுத்துவிடவேண்டும். ஆனால ஏதோ திடீர் கோளாறு காரணமாக திருப்பி எடுக்க முடியாமல் விண்கலம் காணாமல் போய்விட்டது.

உடனே என்ன செய்தார்கள் தெரியுமா? ஒரு கமிஷன் போட்டார்களாக்கும் என்று நீங்கள் பதில் சொன்னால் தப்பு. அல்லது பழக்க தோஷ வாடை.

ஸ்புட்னிக் 1ஐ தேடிக் கண்டுபிடிக்க ஒரு அமைப்பை நிறுவினார்கள். அதன் உறுப்பினரான டேல் கார்ட்னெர் என்பவர் வெஸ்ற்றார் 4 என்னும் விண்கலத்தின் உதவியுடன் விண்ணில் தேடுதல் நடத்தச் சென்றார். முயற்சி பயனளித்தது. உண்மையில் காணாமல் போனால் கண்டுபிடிக்கலாம்தானே. எனவே கண்டுபிடித்து பத்திரமாக பூமிக்கு கொண்டுவந்துவிட்டார்.

விண்வெளியில் தொலைந்த விண்கலத்தை இழுத்துவரும் காட்சியைத்தான் படத்தில் காண்கிறீர்கள். விண்ணில் வைத்தே நவீன தொழில் நுட்ப முறையில் எடுக்கப்பட்ட படம் இது.

விண்கலம் ஒன்றை தேடிப் பிடித்து பூமிக்கு கொண்டுவந்தது ஒரு உலக சாதனையாக பதியப்பட்டுள்ளது.

நம்நாட்டில் பழுதான வாகனங்களைக் கட்டி இழுப்பதைத்தானே பார்த்திருக்கிறோம். விண்கலத்தையே இழுத்து வருகிறார் பாருங்கள். சாதனைதானே.

பூமியில் காணாமல் போனோரைக் கண்டுபிடிக்ககூட நம்நாட்டில் முடியவில்லை. விண்வெளியில் காணாமல் போனதைக் கண்டு பிடிக்க என்னமாய் கஷ்டப்படுகிறார்கள் பாருங்கள்.





# அபாரமான ஆடை மாற்றம்

திரைப்படங்களில் காட்சிக்கு காட்சி விதம் விதமான உடைகளில் நடிகைகள் தோன்றுவதை விழிவிரியப் பார்த்து ரசிக்கிறோம் அல்லவா. கொடுத்து வைத்தவர்களப்பா என்று பெருமூச்சு விடுபவர்களும் இல்லாமலில்லை.

ஆனால் நடிகைகளே ஒரு நடிகையைப் பார்த்து 1963 முதல் இன்றுவரை பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த நடிகையின் பெயர்: எலிசபெத் டெய்லர். 'கிளியோபாத்ரா' படத்தில் உடைகள், அலங்காரம் என்பவற்றை அதிக தடவை மாற்றி நடித்து உலக சாதனை படைத்தவர் இவர்தான். உடைமாற்ற ஏற்பட்ட செலவுகளும் உலக சாதனைதான். மொத்தம் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் செலவானது. அதுவும் அந்தக் காலத்தில்! நம்மூர் பெறுமதி 72 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய்கள்.

இரண்டு தடவை ஒஸ்கார் விருதையும் பெற்றவர் எலிசபெத் டெய்லர்.

உடைமாற்றுவதில் சாதனை படைத்தது போல அடிக்கடி தனது ஆண் நண்பர்களையும் மாற்றிக்கொள்பவர் எலிசபெத் டெய்லர். ஆயினும் அதனை உலக சாதனையாக கின்னஸில் இடம்பெறச் செய்ய முடியவில்லை. இவர் இன்னமும் உயிரோடும் வளமோடும் உள்ளார்.

# நிமிர்ந்து நில்!



→ 'நிமிர்ந்து நில், எழுந்து செல்' என்று யாரும் கட்டளையிடாமலேயே என்ன ஒரு கம்பீரமாகப் போஸ்கொடுக்கின்றன.

இப் பிராணிகள் கீரி இனத்தைச் சேர்ந்தவை. ஆனால் சாதாரண கீரிகளில் இருந்து வித்தியாசமானவை. அதனால் இவை 'சரிகேட்ஸ்' என்று அழைக்கப்படுகின்றன.

கீரிகளால் இப்படி இரண்டு கால்களில் எழுந்து நிற்க முடியாது. எனவே இவற்றைக் கண்டால் சாதாரண கீரிகளுக்குச் சற்றுப் பொறாமை.

அதெல்லாம் இருக்க இவ்வாறான விசித்திரமான பிராணிகள் குடும்பம், குழந்தை குட்டிகள் என்று சுதந்திரமாக உலவித்திரியும் ஒரு இடம் இருக்கிறது. நீங்களும் நேரில் செல்ல முடிந்தால் சந்திக்கலாம். அந்த இடத்தின் பெயர்; நேஷனல் பார்க். அது இருப்பது தென் ஆபிரிக்காவில். 74 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நேஷனல் பார்க் வனவிலங்குப் பூங்கா அமைந்துள்ளது.

# வரலாற்றுப் பானை



படத்தில் இருப்பது பானை என்பது சொல்லாமல் தெரியும். சொல்லித் தெரிய வேண்டிய விஷயமும் இதில் உண்டு. இப் பானைக்குப் பின்னால் ஒரு வரலாறு இருக்கிறது. ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்களில் மிக வசதியானவர்கள் பாவித்த பானை இது. 1980ம் ஆண்டில் செப்பேபின் நாட்டில் அகழ்வாராய்ச்சியாளர்களால் இப் பானை கண்டு பிடிக்கப்பட்டதாம்.

பானைக்குள் என்ன இருந்தது தெரியுமா? சாக்லெட் போன்ற பொருள் இருந்ததாம். பானை நன்றாக மூடப்பட்டு இருந்தமையால் சாக்லெட் பானமாக இருந்ததாம்.

# நாணயக் கோலம்



உலக சாதனை படைப்பதற்கு எத்தனை விதம்விதமான முயற்சிகள் செய்யப்படுகின்றன.

படத்தில் மிகச் சிரத்தையாக அமர்ந்திருந்து என்ன பண்ணுகிறார்கள் சொல்லுங்கள் பார்ப்போம்? நாணயங்களை வரிசைப்படுத்தி அடுக்குகிறார்கள்.

55 கிலோமீட்டர் (34 மைல்கள்) நீளத்திற்கு நாணயங்களை அடுக்கி முடித்துவிட்டு, என்ன சொல்கிறீர்கள்? என்று கேட்டார்கள். "இதுதான் உலகில் மிக நீளமான நாணயத் தொடர்" என்று அங்கீகரித்தது கின்னஸ் நிறுவனம். பலரது கூட்டு முயற்சி இது. அடுக்கி சாதனை படைத்துவிட்டு பின்னர் பொறுக்கி எடுத்து நாணயங்களை கொடுத்து உதவியவர்களிடம் நாணயங்களை நாணயமாகத் திருப்பிக் கொடுத்துவிட்டார்களாம். மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் இச்சாதனை படைக்கப்பட்டது.


படிப்பகம்

www.padippakam.com

# குஷ்புவுக்கு மீண்டும் மவுசு

குஷ்பு எப்போதுமே பிஸியாகத்தான் இருக்கிறார். படவாய்ப்புக்களும் பழுதில்லாமல் கிடைத்துவிடுகின்றன. இடையில் சில காலம் மட்டுமே வீழ்ச்சி நிலை. இப்போது கைவசம் பல படங்கள்.

பாண்டியராஜன்-குஷ்பு ஜோடியாக நடித்த 'கோபாலா கோபாலா' படப்பிடிப்பு 25 நாட்களில் முடிந்திருக்கிறது. இரண்டே இரண்டு பாடல் காட்சிகள் மட்டுமே பாக்கியுள்ளன.

குஷ்புவின் மார்க்கெட் இடைநடுவில் சரிந்திருந்தபோது வருத்தப்பட்டவர்களில் குஷ்பு இட்லி தயாரிப்பாளர்களும் முக்கியமானவர்கள். மீண்டும் குஷ்புவின் மார்க்கெட் உயர்ந்துவிட்டதால் குஷ்பு இட்லிக்கும் மவுசோ மவுசு.

குஷ்பு இட்லியின் விசேஷ குணங்கள் பின்வருமாறு. (கவனமாக குறிப்பெடுக்கவும்)

ஏனைய இட்லிகளைவிட பெரிசாக இருக்கும். பூப்போல மென்மையாக இருக்கும். சாம்பார் இன்றியே சாப்பிட முடியும். தமிழ்நாட்டில் சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் பகுதிகளில் சுடச் சுட குஷ்பு இட்லி கிடைக்கிறது.

# விஜய்–சுவலட்சுமி–லவ் டுடே

தயாரித்த 'நாட்டாமை', 'பூவே உனக்காக', 'சுந்தர புருஷன்' போன்ற வெற்றிப்படங்களை ... நிறுவனம் 'சூப்பர் குட் பிலிம்ஸ்'. சூப்பர் குட் பிலிம்ஸ் தயாரிக்கும் புதிய படத்திற்கு 'லவ் டுடே' என்று பெயர் சூட்டியுள்ளனர். கதாநாயகனாக விஜய் நடிக்கிறார். 'ஆசை' படத்தில் சுவலட்சுமி கதாநாயகியாக நடிக்கிறார். முக்கிய பாத்திரம் ஒன்றில் தோன்றப்போகிறார். ராஜன் பி.தேவ், விவேக், தியாகு, தாமு, ஆகியோரும் நடிக்கின்றனர். புதிய இயக்குநர் ஒருவர் அறிமுகமாகிறார். பெயர்; பாலசேகரன். படத்தின் திரைக்கதை, வசனமும் அவர்தான்.

# கோபுர தீபம்

ராமராஜன் புதிதாக நடிக்கும் படம் 'கோபுர தீபம்'. கதாநாயகி இன்னும் முடிவாகவில்லை. செந்தில், ஆர்.சுந்தர்ராஜன், மணிவண்ணன் ஆகியோருடன் முக்கிய பாத்திரத்தில் தோன்றுகிறார். மணிவண்ணன் இல்லாத படம் அரிது. பாடல்கள்; வைரமுத்து. இசை-சவுந்தர்யன். திரைக்கதை, வசனம் இயக்கம் ராமராஜன்.

# கவிஞர் மகள் கைதா? மறுக்கிறார் விசாலி

'வானமே எல்லை' படத்தின் மூலம் அறிமுகமானவர் கவிஞர் கண்ணதாசனின் மகள் விசாலி. பாடல்கள் எழுதுவதிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிப்பதிலும் ஈடுபட்டுள்ளார். தமிழ்ச் சஞ்சிகை ஒன்றில் தொடர்கதையும் எழுதினார்.

விசாலியும் ஒரு முக்கிய புள்ளியும் நட்சத்திர விடுதி அறை ஒன்றில் ஒன்றாக இருந்தபோது போலிசாரால் கைதுசெய்யப்பட்டனர். பின்னர் குறிப்பிட்ட புள்ளியின் செல்வாக்கால் விஷயம் அமுக்கப்பட்டுவிட்டது.

இச்செய்தி வெளியானதும் டென்ஷனாகி விட்டார் விசாலி. என் அப்பாவுக்கு மூன்று மனைவிகள். எனக்கு பதினான்கு சகோதர சகோதரிகள். எல்லோருமே மாற்றாந்தாய் பிள்ளைகள். அவர்கள் கட்டிவிட்ட கதைதான் இது. அச்செய்தியில் உண்மை இல்லவே இல்லை. என்மீது பழிசொன்னவர்களுக்கு நிச்சயம் தண்டனை கிடைக்கும். பொய்களை எல்லாம் பரப்புகிறார்கள் என்று புலம்பியுள்ளார் விசாலி.

* பிரபு-ரேவதி-ஜெயராம் நடித்த 'பிரியங்கா' தற்போது தெலுங்கில் மொழிமாற்றப்பட்டுக்கொண்டிருக்கிறது. 'ஸ்ரீமதி பிரியங்கா' என்ற பெயரில் இது வெளியாகிறது.

* ரஜினியின் 'முத்து' படத்தில் 'கொக்கு சைவ கொக்கு...' பாடலுக்கு நடனமாடிய ஜோதிலட்சுமி, 'நிலா','சந்திரலேகா' படங்களை இயக்கிய நம்பிராஜ் இயக்கும் 'ருக்மணி' படத்தில் நடிக்கிறார்.

* கே. பாக்யராஜ் இயக்கி நடித்த 'எங்க சின்னராசா' தெலுங்கில் வெங்கடேஷ்-மீனா நடிக்க 'அபாய்தரா' என்ற பெயரில் தயாராகி வெற்றி பெற்றது. இப்போது 'அபாய்தரா' தமிழில் 'சின்ன எஜமான்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகிறது.

* 'கல்யாணராமன்' படத்தில் கமல் பெரிய பல்லுடன் வித்தியாச தோற்... நடித்திருந்தார். தற்போது இதே போன்றதொரு கெட்-அப்பில் 'மை இ... படத்தில் ஆனந்தராஜ் நடித்து வருகிறார்.

* தமிழில் 'இளங்காதலர்கள்','இரட்டை ஜடை வயசு' ஆகிய படங்களில் வருகிறார் மந்த்ரா. அத்துடன் சில தெலுங்குப் படங்களிலும் நடிக்... தெலுங்கில் இவரது பெயர்-ராசி.

* கமலின் 'தேவர் மகன்' இந்தியில் தயாராகி வருவது தெரிந்ததே. தமிழில் ரேவதி, கௌதமி நடித்த வேடங்களில் முறையே இந்தியில் அனில் கபூர், த... பட்ரா நடிக்கிறார்கள்.

* அர்ஜுனின் 'ஜெய்ஹிந்த்' படத்தில் இருந்து 'கர்ணா', 'செங்கோட்டை', 'ஆயு... 'சுபாஷ்' ஆகிய படங்களுக்கு இசையமைத்தவர் வித்யாசாகர். ஆனால் அ... புதிதாக நடிக்கும் 'தெனாலிராஜா' படத்திற்கு இசையமைப்பவர்- பாலபா...

* விஜய்-சங்கீதா நடித்த 'பூவே உனக்காக' படத்தில் இரண்டாவது கதாநாய... நடித்த சக்திகுமார், 'வசந்தம் வந்தாச்சு' படம் மூலம் கதாநாயகனாகிறார். இவருக்கு ஜோடியாக நடிப்பவர்- சங்கீதா.

*'கிழக்கு வாசல்', 'இதயம்' போன்ற பல படங்களைத் தயாரித்த சத்யஜோதி நிறுவனம் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் புதிய படமொன்றைத் தயாரிக்கவிருக்கிறது. இப்படத்தில் கதாநாயகனாக அரவிந்தசாமி நடிக்கிறார்.

* கே.டி.குஞ்சுமோன் தயாரிக்கும் 'கோடீஸ்வரன்' படத்தை இயக்கும் நந்தகுமார், கமல் நடித்த 'சட்டம் என் கையில்', 'சங்கர்லால்' போன்ற படங்களை இயக்கிய மறைந்த இயக்குநர் டி.என். பாலுவின் மகன்.



ராம்கி-சங்கவி
படம்:-தினமும் என்னைக் கவனி



அடுத்தாத்து அம்புஜத்தைப் பார்த்தேளோ?-அவ
ஆத்துக்காரர் கொஞ்சுறதைக் கேட்டேளா?
அடிச்சாலும் புடிச்சாலும்-அவா
ஒண்ணா சேந்துக்கறா;
அடிச்சதுக் கொண்ணு
பொடவையா வாங்கிக்கிறா;
புடிச்சதுக் கொண்ணு
பொடவையா பட்டு
வாங்கிக்கிறா.
-வாலி-

கமல்
படம்:-அவ்வை சண்முகி

# தடுமாறுகிறார் அஜித்

எந்தப் படத்தில் நடித்தாலும் ஜோடியாக நடிக்கும் நடிகையுடன் கிசுகிசுக்கப்படும் பட்டியலில் கார்த்திக்கிற்கு அடுத்த இடத்தில் இருப்பவர் அஜித்குமார்.

'ராசி' படத்தில் ரம்பாவுடன் நடிக்கிறார். ஏனைய ஹீரோக்களுடன் இணைந்து நடித்தபோது காட்டிய தாராளத்தைவிட 'ராசி' படத்தில் ரம்பா மிக மிக ஒத்துழைத்திருக்கிறாராம். ஒத்துழைப்புக்கு காரணம் ஹீரோ அஜித்குமார்மீது ரம்பாவுக்கு ஏற்பட்டுள்ள திடீர் பாசம் என்று படப்பிடிப்பு வட்டாரத்தில் தகவல்.

இது ஒருபுறமிருக்க 'ஹீராவை காதலிக்கவில்லை' என்று தமிழ்நாட்டில் பத்திரிகைகளுக்கு அஜித்குமார் திடீர் அறிக்கை ஒன்று விடுத்திருந்தார். அந்த அறிக்கையின் மை ஈரம் காய்வதற்கு முன்னரே மும்பாய் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வேறுவிதமாகப் பேட்டி கொடுத்திருக்கிறார். "ஹீரா நல்ல பெண். நான் அவளைக் காதலிக்கிறேன்" என்று பேட்டி கொடுத்திருக்கிறார் அஜித்.

அஜித்குமார் மீது பெண் ரசிகைகள் பலர் பைத்தியமாக இருப்பது உண்மைதான். அதற்காக இப்படியா குழப்புவது? சுவாதி, ஹீரா, ரம்பா, தேவயானி என்று அஜித்குமாரின் காதல் பட்டியல் முற்றுப்புள்ளியில்லாமல் தொடர்கிறது.

எக்கச்சக்கமான புதிய படங்களில் அஜித்குமார் ஒப்பந்தமாகியுள்ளார். எனினும் சகல படங்களும் பாதிப் படப்பிடிப்புக்கூட முடியாத நிலையில் உள்ளன.

ஒரே நேரத்தில் பல படங்களை ஒப்புக்கொண்டுவிட்டு தடுமாறுகிறார் அஜித். அது போதாது என்று படத்துக்குப் படம் ஒவ்வொரு நடிகையுடன் சுற்றுகிறார். வளரும் நடிகருக்கு இது தேவைதானா?



அஜித்குமார்-ரம்பா
படம்:-ராசி

# படமும் நடிக்கும்

இந்தியாவிலேயே அதிக சம்பளம் வாங்கும் நகைச்சுவை நடிகர் கவுண்டமணிதான். 'ஜீன்ஸ்' படத்தில் பிரசாந்தின் தந்தையாக நடிக்க கவுண்டமணியை அணுகினார்களாம். பெரிய தொகை ஒன்றைக் கேட்டிருக்கிறார். தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார் தயாரிப்பாளர்.

கவுண்டமணி கேட்கும் சம்பளத்தைக் கொடுக்க முடியாது என்பதால் அவரது படத்தை காண்பித்து, அதற்கு முன் நின்று செந்தில் வசனம் பேசுவது போல ஒரு படம் எடுத்து வெளியிட்டுவிட்டனர். படத்தின் பெயர்: 'எனக்கொரு மகன் பிறப்பான்'.

என் பிழைப்பில் மண்போடப்பார்க்கிறார்கள். நான் ஒருத்தன் குத்துக்கல்லாட்டம் இருக்கும்போதே என் படத்தை வைத்து படமெடுக்க என்ன துணிச்சல். இனிமேல் யாராவது இப்படிச் செய்தால் வழக்குப் போடுவேன்" என்று அறிக்கை விட்டிருக்கிறார் கவுண்டமணி.

# பாட்டென்றால் பாட்டு

தமிழ்த் திரையுலகில் தற்போது பிரபலமாகிவரும் பாடலாசிரியர் பழநிபாரதி. சமீபத்தில்தான் திருமணம் செய்துகொண்டு படு உற்சாகமாக இருக்கிறார்.

அதே உற்சாகத்தோடு 'பெரிய இடத்து மாப்பிள்ளை' படத்திற்கு அவர் எழுதியுள்ள பாடலின் சிலவரிகளைக் காண்பீராக.

"பார்க்க பார்க்க உன் முகம்
ஒவ்வொரு நாளும் புதுசு.
ரீவைண்ட் பண்ணிப் பார்த்தாலும்
ஃபார்வர்ட் ஆகுது மனசு
யூஸ் அண்டு த்ரோ காலத்திலும்
காதல்தானே அழகு.
கம்ப்யூட்டர் வெண்ணிலவே
கையோடு வந்து பழகு."



நாகார்ஜுன்-பூஜா பட்...
படம்:-சட்டிக்குழந்தை...

# டாட்ட...

கதை என்னவென்று தேடினால் ...மாக ஏமாந்து போவீர்கள். நம்பக்கூடி... இருக்கிறது என்று மூளையைக் கசக்... எதைப் பற்றியுமே யோசிக்காமல் ... பார்க்கலாம் டாட்டா-பிர்லா.

பார்த்திபன், கவுண்டமணி இருவ... தளவென்று ரக்ஷனா. அலட்டல் இல்ல... மணிவண்ணன்.

பீச் எல்லாம் பெட்ருமா மாறிபோ... பொலிஸ்காரனாக வருகிறார் கவுண்டம... பணம் பறிக்கிறார். கவுண்டமணியை ... பின்னர் இருவரும் பேச்சுவார்த்தை மு... அதன்பின்னர் வங்கியில் கொள்ளை, ... மாட்டிக்கொண்டு முழிப்பது என்று தெ... கவுண்டமணி இப்போதெல்லாம் டு... கேட்கிறார். இதில் டூயட் பாடுவதுடன் சீ... காதல், மோதல், பாடல் மூன்றிலு... வித்யாசாகர். சீசனுக்கு ஏற்ற இசைபோட்... பொழுது போகவில்லையா? வீடியோவ...

# ஹீரா கொ...

நடிகைகள் எங்கு போனாலும் ரசிகர்களின் ... தங்கள் அபிமான நடிகைகளை கிள்ளிப்பார்க்க ... தப்பிப்பிழைக்க பாதுகாப்புக்கு தனியான ஆட்... நடிகை ஹீராவுக்கு சமீபத்தில் ஒரு ரசிகர் ... அதனைச் சொல்லியிருக்கிறார்.

திருவனந்தபுரத்துக்கு (கேரளா) ஒரு படப்பிடிப்புக்காகப் போயிரு... ஒரு ரசிகர் வந்தார். ஏங்கிட்ட ஒரு ஓட்டோ கிராப்பை நீட்டினார். ... போட்டுத் தரலாம்னு வாங்கிப் பார்த்தா; "நான் உன்னைக் காதலிக்கிறே... ஆங்கிலத்தில எழுதி இருந்துச்சு.

ஒரு நிமிஷம் எனக்கு என்ன பண்றதுன்னே புரியலை. எரிச்சல்னா ... ஒரு வார்த்தையை எழுதிட்டு நேரிலேயே நிப்பான்?

சரி, இவனுக்கு முகத்தில அடிக்கிறமாதிரி புத்திவர வைக்கணும்... "இல்லை. நான் உன் அப்பாவைக் காதலிக்கிறேன்"னு ஆங்க... கொடுத்தேன்" என்று தனது துணிச்சலைப் பற்றி சொல்லிப் பெரும...

www.padippakam.com

மி
னி
சி
னி

றத்தில்
ந்தியா'

நடித்து
கிறார்.

கமல்,
. பூஜா

பூஜை',
ர்ஜுன்
ரதி.

கனாக
இதில்

## பெயரால் பெரும் குழப்பம்

ஹிந்தித் திரையுலகில் பரபரப்பான செய்திச் சுரங்கங்களில் ஒருவர் பூஜாபத்ரா. 'சுட்டிக் குழந்தை' படத்தில் தூள் கிளப்பியவரும் அவர்தான்.

பூஜாபட், பூஜாபத்ரா இருவரும் ஒருவர் என்று சிலர் நினைத்து விடுவதால் சமயங்களில் பெரும் குழப்பம் ஏற்பட்டுவிடுகிறதாம்.

பூஜாபட் எங்காவது இரவு விருந்துகளில் கும்மாளமடித்தால் பூஜாபத்ராவின் தலையில் பழி விழுகிறதாம். பூஜாபத்ரா தன் நண்பர்களுடன் எங்காவது கண்ணில் பட்டால் பெயர் குழப்பத்தில் பூஜாபட் என்று எழுதிவிடுகிறார்களாம் நிருபர்கள். இருவருமே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்தக் குழப்பம் போதாது என்று பூஜாபேடி என்னும் பெயரில் இன்னொரு நடிகையும் இருக்கிறார்.

கருத்தடை விளம்பரங்களுக்கு கண்ணைப் பறிக்கும் போஸ் கொடுத்துப் பிரபலமானவர் பூஜாபேடி. ஆனால் பூஜாபத்ரா இலண்டன் சென்றிருந்தபோது "நீங்கள்தானே கருத்தடை சாதனங்களுக்கு விளம்பர மொடலாக நடித்தீர்கள். மார்க்கெட் சரிந்துவிட்டதால் விளம்பரப்படங்களில் நடிக்கத் தொடங்கிவிட்டீர்களா?" என்று ரசிகர்கள் குடைந்தார்களாம். பதில் சொல்வதற்குள் போதும் போதும் என்றாகி விட்டதாம்.

இன்னொரு சமாச்சாரம்தான் பிசகாகிவிட்டது. பூஜாபத்ராவும் ஒரு இயக்குநரும் ஹோட்டல் ஒன்றில் தனிமையில் பொழுதைக் கழித்தார்களாம். இது எப்படியோ வெளியே கசிய மீண்டும் பெயர் குழப்பம். பூஜாபட்டின் லேட்டஸ்ட் காதலருக்கு சந்தேகம் வந்துவிட்டதாம். கடுப்பில் இருக்கிறார் பூஜாபட். சபாஷ் சரியான குழப்பம்.

## நடிக்க மறுத்தார் ஊர்வசி

தமிழில் பிஸியாக நடித்துக்கொண்டிருக்கிறார் ஊர்வசி. மலையாளப்படவுலகையும் மறக்காமல் இருக்கிறார்.

சிபி மலையில் என்பவரது இயக்கத்தில் மலையாளத்தில் நடித்துவருகிறார் ஊர்வசி. அந்தப் படப்பிடிப்பில் ஊர்வசி தகராறு பண்ணியதாகச்செய்தி வெளியாகியது. செய்தியின் பின்னணி விவகாரத்தை கிளறியபோது கிடைத்த விபரங்கள்.

ஊர்வசியும் ஜெயராமும்தான் அப்படத்தில் ஜோடியாக நடித்தார்கள். நகைச்சுவை நடிகர் ஜெகதீசம் படத்தில் நடித்தார்.

ஜெகதீசம், ஊர்வசியும் முன்னர் நெருங்கிப் பழகியவர்கள். இடையில் நடைபெற்ற ஒரு சம்பவம் காரணமாக இருவருக்கும் இடையே 'நட்பு' முறிந்துபோனது.

ஜெகதீசை பழிவாங்க சந்தர்ப்பம் பார்த்திருந்தார் ஊர்வசி. தான் நடிக்கும் படத்திலிருந்து ஜெகதீசை நீக்கினால்தான் தொடர்ந்து நடிப்பேன் என்று நிபந்தனை போட்டாராம் ஊர்வசி.

இயக்குநருக்கு வந்ததே கோபம் படத்திலிருந்து ஊர்வசியை தூக்கிவிட்டு வேறு நடிகையை ஒப்பந்தம் செய்துவிட்டார்.

### முகப்பில்

பார்த்திபன்
படம்:-பாரதி கண்ணம்மா

குஷ்பு
படம்:-கோபாலா-கோபாலா

பிரசாந்த்
படம்:-மன்னவா

## "நான் பின்வாங்குவதாய் இல்லை" 'சில்க்' சுமிதாவின் கடைசிப் பேட்டி

சில்க் சுமிதாவை தமிழக சஞ்சிகை ஒன்று பேட்டி கண்டிருந்தது. அப்பேட்டிதான் சில்க் சுமிதாவின் கடைசிப் பேட்டியாகவும் அமைந்தது. பேட்டி இதுதான்:

**கேள்வி:- கதாநாயகிகளே கவர்ச்சி காட்ட ஆரம்பித்த பிறகுதான் உங்களைப் போன்ற கவர்ச்சி நடிகைகளுக்கு வாய்ப்பு குறைந்துவிட்டது என்பதை ஒப்புக்கொள்வீர்களா?**

**சில்க்:-** ஒருபோதும் ஒப்புக்கொள்ளமாட்டேன். சினிமா வாய்ப்பு என்பது தற்காலிகமானது. நானும் ஒரு காலத்தில் பிரபலமாக இருந்தேன். எப்போதுமே நாமே முன்னிலையில் இருப்பது சரியல்ல. அப்படி நினைப்பதும் தவறு. புதிதாக வருபவர்களும் முன்னேற வேண்டாமா?

எனக்கு எப்போதும் படங்கள் இருந்துகொண்டுதான் இருக்கிறது. நான் எப்போதும் வீட்டில் சும்மா இருப்பதில்லை. அப்படியிருக்கும்போது மற்றவர்கள்மீது வருத்தப்பட விரும்பவில்லை.

**கேள்வி:- நடிகையாக அறிமுகமாகி தயாரிப்பாளராய் உயர்ந்திருக்கிறீர்கள். சினிமாவில் உங்கள் அடுத்த இலக்கு என்ன?**

**சில்க்:-** நடிகையாக இருந்து வெற்றி பெற்றேன். புகழ் அடைந்தேன். தயாரிப்பாளரான பின்பு எனக்கு தோல்வியும் நஷ்டமும்தான் மிச்சம். இருந்தாலும் நான் பின்வாங்குவதாய் இல்லை. பெண்கள் பிரச்சனையை மையமாக வைத்து ஒரு ஆர்ட் பிலிம் தயாரிக்க வேண்டும் என்பது தான் என் இலட்சியம்.

**கேள்வி:- உங்கள் திருமணம் எப்போது?**

**சில்க்:-** திருமணம் செய்துகொள்ள எனக்கும் ஆசைதான். ஆனால் எல்லாவற்றுக்கும் ஒரு நேரம் இருக்கிறது. வெகுவிரைவிலேயே அந்த ஆசை நிறைவேறும் என்று நம்புகிறேன்.

**கேள்வி:- உங்களின் நிறைவேறாத நீண்டநாள் ஆசை என்ன?**

**சில்க்:-** தேசிய அளவில் விருதுவாங்க வேண்டும் என்பது என் நீண்டநாள் ஆசை. அதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறேன்.





## சிந்திய முத்துக்கள்

நான் தமிழ், தெலுங்கு, ஹிந்தி அப்படின்னு எப்பவுமே பாகுபாடு பார்த்ததில்லை. அதேமாதிரி அநாவசியமாகவும் கவர்ச்சி காட்டினதில்லை. ரசிகர்கள் எதை விரும்பறாங்களோ அதை தரணுங்கறதுதான் என்னோட ஆசை.

-நக்மா-

ஒவ்வொருத்தருக்கும் 'செக்ஸ்' ரொம்பவும் முக்கியம். ஆனால் அதைப் பத்துப்பேர் நடுவில் நின்று பேசுவது அநாகரிகம்.

-ஊர்மிளா-

எப்போதாவது வைன் குடிப்பேன். அடிக்கடி பிடிப்பது சிகரெட் மட்டும்தான். இதையெல்லாம் தப்பு என்று சொல்லிவிடாதீர்கள். இந்த வயதில் அனுபவிக்காமல் வேறு எந்த வயதில் அனுபவிப்பது?

-சுஷ்மிதா சென்-

நான் என்ன நினைக்கிறேனோ அதைத்தான் செய்வேன். யாரும் தடுக்க முடியாது. குட்டையான கவர்ச்சியான ஆடைகளை உடுத்த விரும்பினால் அதை உடுத்திக் கொள்வேன். இதில் தயக்கம் என்பதற்கு இடமே இல்லை. நான் ரொம்ப வித்தியாசமானவள்.

-மதுபாலா-

பூலான்தேவி வேஷத்தில் சீமா பிஸ்வாஸ் நடித்ததுபோல நடிக்க வேண்டும் என்பது என் ஆசை. ம்.. வாய்ப்பு வரவேண்டுமே.

-கஸ்தூரி-

## சிக்கனமான அருணாச்சலம்

அருணாச்சலம் படத்தின் மூலம் வரும் லாபத்தை எட்டுப் பேருக்கு பிரித்துக் கொடுக்கப் போகிறார் அல்லவா ரஜினி. படத் தயாரிப்பு விடயத்திலும் ரொம்ப சிக்கனமாக இருக்கிறாராம்.

ரம்பா பல லட்சம் ரூபாய்களை கட்டுக் கட்டாக வாங்கும் நடிகை. ஆனால் ரஜினி ரம்பாவுக்கு ஊதியமாகக் கொடுத்தது குறைச்சல் தானாம். மூச்சே காட்டாமல் வாங்கிக் கொண்டார் ரம்பா.

'அருணாச்சலம்' படம் மூலம் குறைந்தது இரண்டு கோடி ரூபாயாவது இலாபமாக வரவேண்டும். அப்போதுதான் மனம் குளிரப் பகிர்ந்து கொடுக்கலாம் என்று திட்டமிட்டுள்ளார் ரஜினி.

## ...டா-பிர்லா

சினிமா விமர்சனம்

...யங்கர
...தாகவா

...னாலும் உங்கள் நிலை பரிதாபம்தான்.
...ரிக்க ஒரு படம் தேவையா? தாராளமாக

...ம்தான் ஹீரோக்கள். கவர்ச்சிக்கு தள
...த நகைச்சுவை கலந்த வில்லத்தனத்திற்கு

...சு என்ற ஆரம்ப வசனத்துடன் போலிப்
...னி. பீச்சில் காதல் ஜோடிகளை மிரட்டிப்
...மாற்றி பணம் பறிக்கிறார் பார்த்திபன்.
...ம் ஒரு இணக்கத்துக்கு வருகிறார்கள்.
...ய்யாத கொலைக்காக மணிவண்ணனிடம்
...டர்கிறது நகைச்சுவை அமர்க்களம்.
...ட் பாட தனக்கும் ஒரு சந்தர்ப்பம்
...யசாக சண்டையும் போடுகிறார்.
... பார்த்திபனும் ஜமாய்க்கிறார். இசை:
...ருக்கிறார்.
...ம் பார்க்கலாம் டாட்டா-பிர்லா.

## ...த்த பதிலடி

...தொல்லைகளும் தொடரும். சில ரசிகர்கள்
...ம் ஆசைப்படுவார்கள். அவர்களிடமிருந்து
...ளையே சில நடிகைகள் நியமித்துள்ளனர்.
...டுத்த அதிர்ச்சி ருசிகரமானது. ஹீராவே
...ந்தேன். நான் தங்கியிருந்த ஹோட்டலுக்கு
...ரி ஓட்டோ கிராப்தானே, கையெழுத்துப்
...ா. நீயும் என்னைக் காதலிக்கிறாயா" என்று
...ிச்சல். என்ன துணிச்சல் இருந்தா இப்படி
... நெனச்சேன்.
...த்துல எழுதி கையெழுத்துப் போட்டுக்
...ப்பட்டார் ஹீரா.

## "நான் ஒரு விலை உயர்ந்த யானை" மணிரத்னம் சொன்ன சம்பளம் போதாது

'அவ்வை சண்முகி' படத்தில் கமல் பெண் வேஷம் போடுகிறார். அதிலும் இரண்டுவிதமான கெட்-அப்.

முதல் கெட்-அப் முன்னரே 'சினிவிசிட்'டில் பிரசுரமாகியிருந்தது. இரண்டாவது கெட்-அப் இங்கு பிரசுரமாகியுள்ளது. படம் தீபாவளிக்கு வந்துவிடும். மிகுதியை வெண்திரையில் காண்க.

கமலின் சமீபத்திய பேட்டியை இப்போது காண்க.

**இந்தியன் பட வெற்றியைப் பற்றி?**

**கமல்:-** மிக மிக சந்தோசம். பிரமாண்டமாக எடுக்கப்பட்ட படம். சாதாரண மக்களையும் கவர்ந்திருக்கிறது. என்னை நடிகனாக உருவாக்கிய மலையாளத் திரையிலும் 'இந்தியன்' வெற்றி பெற்றிருப்பது இன்னும் மகிழ்ச்சி.

**'இந்தியன்' படத்திற்கு பிறகு யாராவது மனம்மாறியதாகச் செய்தி வந்ததா?**

**கமல்:-** இல்லை. என்னைப் பொறுத்தவரை சினிமாவைப் பார்த்து யாரும் கெட்டதுமில்லை. நல்லவர் ஆனதும் இல்லை. வெறும் சினிமாவால் மட்டும் எந்த நாடாவது முன்னேறி இருக்கிறதா? எல்லா விஷயங்களுக்கும் சினிமாதான் காரணம் என்று சொல்வது முட்டாள் தனமான வாதம்.

**ஹொலிவுட் படங்களில் நடிக்கப்போவதாகச் சொல்கிறார்களே?**

**கமல்:-** எனக்கும் ஆசைதான். யாரும் அழைக்காமல் நான் எப்படி நடிப்பது?

**பிரபல மலையாள நாவல் ஆசிரியர் எம்.டி.வாசுதேவன் நாயரின் 'உஜ்ஜயினி' படத்தில் நீங்கள் நடிக்கப்போவதாகச் செய்தி வந்ததே?**

**கமல்:-** பத்திரிகைகளில்தானே செய்தி வந்தது. எனக்குத்தேவை- பத்திரிகைச் செய்தியல்ல, அக்ரிமெண்ட். நான் எந்த மலையாளப்படத்தில் நடிக்கவும் இதுவரை ஒப்புதல் கொடுக்கவில்லை. நான் கேட்கும் சம்பளத்தை மலையாளப் படத்தயாரிப்பாளர்கள் தரமுடியாத நிலையில் இருக்கிறார்கள்.

**"இந்த நிலை மலையாளப் படங்களுக்கு மட்டும்தானா? தமிழ்ப் படங்களுக்கும்தானா?**

**கமல்:-** எல்லா மொழிப்படங்களுக்கும்தான். என்னுடைய உறவுக்காரர் மணிரத்னம். தன்னுடைய 'ஆனந்தம்' படத்தில் நடிக்க என்னை அழைத்தார். நான் கேட்ட சம்பளத்தை அவரால் தரமுடியவில்லை. நானாகவே விலகிக்கொண்டேன்.

என்னைப் பொறுத்தவரை நான் ஒரு விலை உயர்ந்த யானை.

**"உங்களை ஒஸ்கார் நாயகன் என்கிறார்களே, ஏன்? ஒஸ்கார் பரிசுபெற முயற்சி செய்வதாலா?**

**கமல்:-** ஒஸ்கார்விருது அமெரிக்க படங்களுக்கு மட்டுமே உள்ள விருது என்று நான் நினைக்கிறேன். எனக்கு இந்திய விருதுகளே போதும்.

ஜெயராகினி
படம்:-நல்லமனசுக்காரன்



படிப்பகம்

www.padippakam.com

# மனதில் என்ன கஷ்டம்?

## வெற்றி கொள்ள யோசனை



நமக்கு ஏற்படும் பெரும்பாலான கஷ்டங்களுக்கு நமது அதீத- வேண்டாத கற்பனைகளே காரணம் என்றால் மிகை இல்லை.

மனிதனுக்குச் சாதாரணமாக இருவித கஷ்டங்கள் உருவாகின்றன. ஒன்று இயற்கையானது. மற்றொன்று கற்பனையானது. இரண்டாவதை சம்மந்தப்பட்டவரே உருவாக்கிக் கொள்கிறார். உணவு, உடை, உறைவிடம் பற்றிய பிரச்சனைகள் இயற்கையானவை. வாழ்க்கைப் பிரச்சனையும் இயற்கையானது தான்.

ஆனால் வாழ்க்கைப் பிரச்சனையைச் சமாளிக்க நாம் மேற்கொள்ளும் வழிகளில் தான் கற்பனைக் கஷ்டங்கள் உருவாகின்றன.

உதாரணத்திற்கு- ஒருவர் அலுவலகம் செல்ல பேருந்துக்காகக் காத்திருக்கிறார். ஆனால் வழக்கமான நேரத்திற்கு வர வேண்டிய பேருந்து அன்று வரவில்லை. இதனால் அவர் கண்டிப்பாக அன்று அலுவலகத்திற்கு தாமதமாகத்தான் செல்ல வேண்டும். தாமதமாகச் சென்றால் மேலதிகாரி திட்டுவாரே! என்ன செய்வது? என்ன காரணம் சொல்வது? என்று நாம் கற்பனை கஷ்டங்களை உருவாக்கிக் கொள்கிறோம்.

இந்த நினைப்பிலேயே அடுத்து வரும் பேருந்து பிடித்து அலுவலகம் போவதற்குள் நாம் களைத்துப் போகிறோம். அப்போது நம்மை மேலதிகாரி திட்ட வேண்டும் என்ற அவசியமே இல்லை. நாமே கற்பனையை உருவாக்கி அனுபவித்து விட்டோம்.

இந்த வீண் கஷ்டங்கள் தேவையற்றவை. ஒருமுறை அலெக்ஸாண்டரின் ஆசிரியர் அரிஸ்ரோட்டில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது அவர், "கஷ்டம் வரும்போது என்ன செய்வீர்கள்?" என்று மாணவர்களைப் பார்த்துக் கேட்டார். ஒரு மாணவன், "கஷ்டத்தைப் பற்றிக் கவலைப்படாமல் அதை வெற்றிகரமாகச் சமாளிப்பேன்," என்றான். மற்ற மாணவர்களும் ஒவ்வொரு கருத்தைச் சொன்னார்கள். அலெக்ஸாண்டர், "கஷ்டம் வரட்டும் அப்பொழுது சூழ்நிலைக்கு ஏற்ப நடந்து கொள்வேன்," என்றான். அதை நாம் மனதில் பதித்துக் கொண்டால் கற்பனைக் கஷ்டங்களை நம்மை விட்டு விரட்டி விடலாம்.

நாம் கணக்கிட்டுப் பார்த்தால், நமக்கு ஏற்படும் கஷ்டங்களில் கற்பனைப் பிரச்சனையால் ஏற்படும் துன்பங்களே அதிகம் என்பது தெரியவரும். இந்தக் கஷ்டங்களுக்குத் தீர்வு- உழைப்பில் ஈடுபாடு, ஆக்க பூர்வமான உழைப்பு. ஆனால் மனிதன் ஆக்கபூர்வமான உழைப்பில் குறைவான கவனமே செலுத்துகிறான். ஆண் வீண் வேலைகளில் மிகுந்த உற்சாகம் காட்டிச் செயற்படுகிறான்.

நமது கஷ்டங்களுக்கு நமது அவசரங்களும் ஒரு காரணம். பதறிய காரியம் சிதறி விடும். எனவே எதிலும் நிதானம் தேவை. நடப்பது தான் நடக்கும். நின்று நிதானித்து எதையும் மேற்கொண்டால் வாழ்க்கையில் வெற்றிக்கனிகளை எளிதில் பறித்து விடலாம்.

எந்தவொரு செயலிலும் வாழ்க்கை ஒரு முகப்படுத்தாமல் வளர்ச்சி என்பதைக் காணமுடியாது.

# நட்பால் முடியும்!



உடல் ஆரோக்கியத்திற்கும் நட்பிற்கும் ஏதேனும் தொடர்பு இருக்க முடியுமா? 'முடியும்' என்கின்றனர் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள்.

மனதிற்குப்பிடித்த நெருங்கிய தோழியோ, நண்பரோ வாழ்க்கைத் துணையோ வாய்க்கப் பெறாதவர்களது இதயம் மிகப் பலவீனமாக இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நெருங்கிய நட்போ, உறவோ உடையவர்களைவிட, இவர்கள் பல ஆண்டுகள் முன்னதாகவே இறந்து விடுவதாகவும் தெரிகிறது. உண்மையான நட்பையோ, உறவையோ பெற்றவர்களது உடலில், மற்றவர்களது உடலைவிட நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாக இருப்பதாகவும், உடலுக்குத் தீங்கிழைக்கும் கொலஸ்ட்ரோலின் (கொழுப்பு) அளவு குறைவாக இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

"நட்பு அல்லது உறவு என்ற பெயரில் எப்போதும் நம்மைச் சுற்றி ஒரு கூட்டம் இருக்க வேண்டும் என்று அவசியமில்லை; நமது உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு நபர் இருந்தால் கூடப்போதும். அது மனதிற்கு மட்டுமன்றி, உடலுக்கும் ஆரோக்கியத்தைக் கொடுக்கும்" என்கிறார் அமெரிக்க உளவியல் நிபுணர் ஒருவர்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## கர்ப்பம் தரியாமைக்குக் காரணம்?

பெண்கள் வேலைக்குச் செல்வதற்கும், கர்ப்பம் தரிப்பதற்கும் மிக நெருங்கிய தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள் நோர்வேயைச் சேர்ந்த விஞ்ஞானிகள்.

வேலைக்குப் போகும் பெண்களது கர்ப்பம் தடைப்பட அவர்களது வேலையும் மிக முக்கிய காரணம் என்கின்றனர். வேலைக்குச் செல்லுமிடத்தில் ஏற்படும் மன உளைச்சல்கள், அதன் காரணமாக உடலில் ஏற்படும் ஹோர்மோன்களது மாற்றங்கள், சிகரெட் புகை, அடிக்கடி தேனீர், கோப்பி அருந்துவதால் காஃபைனின் பாதிப்பு ஆகிய காரணங்களினாலேயே அவர்கள் கர்ப்பம் தரிப்பதில் தடையோ, தாமதோ ஏற்படுகிறதாம்.

# மதுவில் விழும் நட்சத்திரங்கள்



"திரையுலகிலும் ஆண் ஆதிக்கம்தான் ஆட்சி செலுத்துகிறது. பெண்கள் திரையுலகில் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பதை விபரிக்க வேண்டுமானால் மன்னர் காலத்து அந்தப்புரங்களில் பெண்கள் எப்படி வைக்கப்பட்டிருந்தார்களோ அதனைத்தான் நினைவூட்ட வேண்டியிருக்கும்." இப்படிக் குமுறியிருக்கிறார் ஒரு முன்னணி நடிகை.

தமிழ் திரையுலகில் மட்டுமல்ல பொதுவாக திரையுலகமே பெண் நடிகைகளை மிகக் கேவலமாகவே நடத்துகிறது. ஹொலிவூட் திரையுலகமும் அதற்கு விதிவிலக்கல்ல.

ஒரு நடிகை முன்னேறும்போது மேக்-அப் மேனில் இருந்து உதவி இயக்குநர் வரை அவளை தங்கள் ஆசைக்கும், இச்சைக்கும் இரையாக்கிவிட்டுத்தான் வெள்ளித்திரையில் முகம் காட்ட அனுமதிக்கிறார்கள்.

படம் எடுத்துக் கொண்டிருக்கும்போது பட்ஜெட் தொகையில் இடிக்கிறதா? உடனே நடிகையைத்தான் தயாரிப்பாளரிடமோ, அல்லது நிதி உதவி செய்பவரிடமோ தூதாக அனுப்புகிறார்கள். அவர்களுக்கு தோதாக நடத்துகொண்டால்தான் இயக்குநரிடம் நல்ல பெயர் எடுக்க முடியும்.

படத்தில் நடிக்கும் கதாநாயகனுக்கு குறிப்பிட்ட நடிகையைப் பிடித்தால்தான் ஜோடியாக நடிக்க சம்மதிப்பார்.

குறிப்பிட்ட கதாநாயகனின் அன்பைப் பெறுவதற்காகவும் தனது உடலை காணிக்கையாகக் கொடுத்தாக வேண்டும். இதற்கு விதிவிலக்கான கதாநாயகர்களும் இல்லாமல் இல்லை. ஆனாலும் பொதுவிதி அதுதான்.

குறிப்பிட்ட நடிகை நல்ல நிலைக்கு வந்து தனக்கென ஒரு இடத்தைப் பிடித்து விட்டால் சில தொல்லைகள் குறையும். மேக்-அப் மேன், உதவி இக்குநர், கதாசிரியர் போன்ற சின்னச் சின்னமீன்கள் இவளை நெருங்கப் பயப்படுவார்கள்.

தயாரிப்பாளர், இயக்குநர், கதாநாயகர்கள் போன்ற திமிங்கிலங்களுக்கு மட்டும் அவ்வப்போது தீனியாகவேண்டியிருக்கும்.

பின்பலம், செல்வாக்கான குடும்பப் பின்னணி கொண்ட ஒரு சில நடிகைகள் மட்டும் திரையுலக- திமிங்கிலங்களின் அந்தப்புரங்களை அலங்கரிக்காமல் தப்பிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

தமிழ் திரையுலகில் பழம்தின்று கொட்டை போட்ட அனுபவசாலி சிவகுமார். நடிகைகளுடன் கௌரவமாக நடந்துகொள்ளும் விரல்விட்டு எண்ணத்தக்க நடிகர்களில் அவரும் ஒருவர்.

நடிகைகளின் வாழ்க்கையை வருத்தத்துடன் விபரிக்கிறார் சிவகுமார்.

"பணக்கார வீட்டுப் பெண்கள், படித்துப் பெற்றோரின் பாதுகாப்பில் உள்ள பெண்கள் வேண்டுமானால் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

மற்றப் பெண்கள் புனிதமாக சினிமாத் துறையில் புகழ்பெறுவது- என் அனுபவ அறிவைக்கொண்டு சொல்கிறேன்-சாத்தியமே இல்லை.

தனிமை....குடி.....மயக்கம்....தெளிந்தால் மீண்டும் குடிப்பது... துயரை மறக்க முயல்வது- இதுதான் பெரும்பாலும் அப்பாவி நடிகைகளின் நிலை." என்று சொல்கிறார் சிவகுமார்.

திரையில் தோன்றி மகிழ்விக்கும் பெண் நட்சத்திரங்களின் சொந்த வாழ்க்கை சோகமானது. திரையில் வண்ண வண்ண உடைகளில் அவர்கள் தோன்றும்போது நமக்கு அந்த சோகங்கள் தெரிவதில்லை.

பெண் கவிஞரான அருள்மொழி எழுதியுள்ள கவிதை ஒன்று நடிகைகளை கேள்வி கேட்கிறது:

"சகோதரி!
உன் கண்ணிமை பொய்
கை நகம் பொய்
உன் புன்னகை பொய்
பூக்களும் பொய்
நீ வாழ்வதுதான் மெய்யா?
எங்கிருந்து வந்தார்கள்- இன்றுமட்டும்
உன் ஒன்றுவிட்ட சித்தப்பாவும்....?
தூரத்து மாமாவும்
இந்த உறவுக்கூட்டம்
உண்டு கொழுக்கவா
நீ உண்ணாதிருந்து
உடல் இளைக்கிறாய்?
முட்டாள் பெண்ணே....!"

# உள்ளங்கையில் உள்ளம் தெரியுமா?



விரல்களின் அகலம், நீளத்துடன் ஒப்பிடும்போது உள்ளங்கையின் அகல விகிதம் அதிகமாக இருந்தால் நிதானமான இயல்பு உடையவர்களாகவும், அதிக கோபம் அடையாதவராகவும் இவர் இருப்பார். தன் உரிமைகளை விட்டுக்கொடுக்கமாட்டார். உடல்பலம் கொண்டதாக இருக்கும். கடுமையான நோய்களினாலும் பாதிக்கப்படமாட்டார்.

குறுகிய உள்ளங்கை கொண்டவர்கள் கற்பனை வளம் இல்லாதவர்கள். சிரிப்பு என்றாலே இவர்களுக்கு வெறுப்பு. அழுது வடிந்து கொண்டிருக்கும் இவர்கள் நாள் பூராவும் ஒரே வேலையைச் செய்வதில் திருப்தி அடைபவர்கள். அதில் யாராவது குறுக்கிட்டால் வருத்தமடைந்த போதிலும், எதிர்த்து எந்த நடவடிக்கையையும் எடுக்க மாட்டார்கள்.

உள்ளங்கை சதுரவடிவமாக அமைந்திருந்தால் ஓயாமல் உழைப்பவராக இருப்பார். விளையாட்டுக்களில் விருப்பம் கொண்டு அவற்றில் அதிகம் ஈடுபடுவார். வேலையிலும் கூட ஒவ்வொரு இடமாகப் போய்விடுவது தான் இவருக்குப் பிடிக்கும். ஒரே இடத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பது இவருக்குப் பிடிக்காது.

உள்ளங்கை சருமம் மஞ்சள் நிறத்தில் இருந்தால் சோகத்தைக் கட்டி அழுபவர்களாக அவர்கள் இருப்பார்கள். இவர்களைச் சிரிக்க வைப்பதே சிரமமான காரியம்.

உள்ளங்கை சருமம் ஊதா நிறத்தில் இருந்தால் உற்சாகமும், நம்பிக்கையும் உள்ளவர்களாக அவர்கள் இருப்பார்கள். அவர்களுடைய உடல் நலமும் நன்றாக இருக்கும். பிறருடன் அன்பு பராட்டும் அவர் வலியச் சென்று உற்சாகம் ஊட்டுவார்.

சிலருக்கு உள்ளங்கை சருமம் சிவந்த நிறத்தில் இருக்கும். சட்டென்று கோபம் கொண்டவர்களாக இவர்கள் இருப்பார்கள். அதிக நேரத்திற்கு அது நிற்காது. இவர்களைச் சுலபமாகச் சமாதானப்படுத்தி சகஜ நிலைக்குக் கொண்டு வந்து விடலாம்.

# வாரம் ஒரு இயற்கை மருத்துவம்

## நீர் மருத்துவம்



தினசரி அதிகாலையில் எழுந்தவுடன் வாய் கொப்பளித்து விட்டு (பல்துலக்கும் முன்) சுமார் ஆறு டம்ளர் (1 1/4 லீட்டர்) சுத்தமான மண்பானைத் தண்ணீரை (குளோரின் முதலிய எந்த இரசாயன சுத்திகரிப்புப் பொருளும் கலக்காத இயல்பான நீர் மிக நல்லது) ஒரே தடவையில் குடித்தபின் பல் துலக்கி முகம் கழுவலாம்.

தொடக்கத்தில், முதல் சில நாட்கள் சற்றுச் சிரமமாக இருக்கலாம். குமட்டல், வாந்தி போன்றவை ஏற்படலாம். ஆரம்பத்தில் எவ்வளவு தண்ணீர் குடிக்க இயலுமோ அவ்வளவு குடித்து விட்டு சிறிது நேரம் வேகமாக உலாவி, பின் மீண்டும் எஞ்சியுள்ள நீரைப்பருகலாம்.

இவ்விதம் குடித்த நீர் குடலுக்குச் சென்று பழைய இரத்தம் சுத்தம் செய்யவும், புதிய சுத்த இரத்தம் உற்பத்தி செய்யவும் உதவுகிறது. நீர் குடித்த சில மணிநேரத்திற்குள் இரண்டு, மூன்று தடவைகள் சிறுநீர் கழியும்.

மூட்டுவாதம், வாய்வுப்பிடி நோயுள்ளவர்கள் முதல் ஒரு வாரத்திற்குத் தினமும் மூன்று வேளைகள்- அதாவது காலை, மதிய, இரவு உணவுகள் உண்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு மேற்கூறியவாறு நீர் அருந்தி நீர் மருத்துவம் செய்ய வேண்டும். ஒருவாரம் கழித்து, தினம் காலையில் ஒருநேரம் மட்டும் மேற்கூறியவாறு எழுந்ததும் நீர் அருந்தினால் போதும். ஒவ்வொரு வேளை உணவு உண்டபின், இரண்டு மணிநேரம் கழித்துத் தான் நீர் அருந்த வேண்டும்.

இவ்வித நீர் மருத்துவத்தால், தலைவலி, இரத்த அழுத்தம், இரத்தச் சோகை, கீல் வாதம், பக்கவாதம், உடற் பருமன் (ஊளைச்சதை), மூட்டு வலி, காது இரைச்சல், மயக்கம், இருமல், ஆஸ்துமா, சளி, காசநோய், மூளைக் காய்ச்சல், கல்லீரல் நோய், சிறுநீரக நோய், பித்தம், வயிற்றுப் பொருமல், இரத்தக் கடுப்பு, மூலநோய், மலச்சிக்கல், உதிரப் போக்கு, நீரிழிவு, கண்நோய், மாதவிடாய் நோய், கருப்பைப் புற்றுநோய், மார்பகப்புற்றுநோய், தொண்டைநோய் முதலிய அனைத்து நோய்களும் படிப்படியாகக் குணமடைகின்றன.

இயற்கையுணவிற்கு அதிகபட்சம் மாற இயலாதவர்களும், சமையலுணவை சிறிது கூடத் தவிர்க்க முடியாது தவிப்பவர்களும் மேற்கூறிய இயற்கை மருத்துவ முறைகளை யாவது மேற்கொண்டு நோய் நீங்கி ஆரோக்கிய வாழ்வு வாழ முயற்சிக்கலாம்.

அசைவ உணவுகளைப் படிப்படியாகத் தவிர்த்து, சைவ உணவிற்கு முழுவதுமாக மாற முயற்சி செய்யலாம். உப்பைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தவிர்த்து மிளகு சேர்த்துத் தேவையான அளவு குறைந்த காரச் சுவை சேர்த்துக் கொள்ளலாம். எண்ணெய் உணவுகளைத் தவிர்க்கலாம். சுடச்சுடச் சாப்பிடுவதையும் தவிர்க்கலாம். உணவில் கீரைகள், காய்கறிகள் அதிகம் சேர்க்கலாம்.

கோப்பி, தேனீருக்குப் பதிலாக சுக்குக் கோப்பி, மல்லிக் கோப்பி, ஆகியவற்றை அருந்தலாம். பால் தேவை யெனில் பச்சைப் பால் கறந்த சூட்டுடன் அருந்தலாம். தேங்காய்ப்பால், வேர்க்கடலைப் பால் ஆகிய தாவரப்பாலை அருந்துவது ஆரோக்கியத்திற்குச் சிறந்ததாக அமையும்.

சமைப்போம் — சுவைப்போம்

(தொகுத்துத் தருவது சுகந்தினி)

## ரவை போண்டா

தேவையானவை:
ரவை-1/4 கிலோ
உப்புத்தூள்-2 தேக்கரண்டி
புளித்த கெட்டித்தயிர்-1 கோப்பை
முந்திரிப் பருப்பு-10
பச்சை மிளகாய்-8
இஞ்சி- சிறுதுண்டு
கறிவேப்பிலை-1 பிடி
பெருங்காயம்-சிறிதளவு.

செய்முறை:

ரவையில் உப்பு, தயிர், கரைத்த பெருங்காயம் இவற்றைப் போட்டுக் கெட்டியாக (தேவையானால் கொஞ்சம் தண்ணீர் ஊற்றலாம்) கரைத்துக் கொள்ளவும். அதில் பொடியாக நறுக்கிய இஞ்சி, கறிவேப்பிலை, பச்சைமிளகாய் இவைகளுடன் முந்திரியையும் சிறு துண்டுகளாக ஒடித்துப் போட்டுக் கலந்து அரை மணித்தியாலம் ஊறவிடவும். எண்ணெயைக் கொதிக்க வைத்து ஊறிய ரவைக் கலவையைச் சிறு சிறு துண்டுகளாக உருட்டிப்போட்டு சிவக்க வெந்ததும் எடுத்து எண்ணெய் வடிய விடவும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை AN

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 02-11-1996

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? புத்தளம் வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான். **திருமதி மேரி ஹெலிந்தா வெனி**
4ம் கட்டை, வேப்பமடு, புத்தளம்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக-வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



படிப்பகம்

www.padippakam.com

## ....வேரை வெட்டிவிடு!

வாழ்வில்
வைத்த நெருப்பு
இன்னுமா
எரியவேண்டும்?
••
மனம்
குருதியாக வடிகிறது;
உயிர் தீயாகி எரிகிறது;
கனவுகள்கூட
அழுகின்றன.
••
உணர்வுகள்
விதையாகாமல்
கருகும்
போர்யுகம்!
••
மனிதம்
கல்லறைகளுக்குள்!
••
எங்கள்
கவிதைகள்கூட
கைகோர்த்துக் கொண்டு
அழுகின்றன.
••
இதயம் எரிவதால்
எழுத்துக்களும்
தீப்பிடிக்கின்றன.
••
குயிலிசை
குழலிசை
மனமில்லை பருக!
••
போரிடி....
பேரிடி....
இந்த வாழ்வின்
இரண்டு பக்கங்கள்!
••
வாழ்க்கை
கைதியானது யாரால்?
••
விடுதலை
மூழ்கிய தேசத்தில்
உயிர்கள் மட்டுமல்ல,
உணர்வுகளும்
கண்ணீர் சிநேகம்
கொள்கின்றன.
••
தீ,
தீமை–
இரண்டும்
சக்கரங்களாக
உருளும் போது
போரின் பயணம்
தொடர்கின்றது.
••
'உயிர்கள்
மலிவு விலையில் பெறலாம்:
இங்கே
வாருங்கள்!'
••
இன்னுமா
இந்த
போர்விளக்கு
நெய் கேட்கிறது?
••
இன்னும்
எரிந்து போக
என்ன
எங்களிடம் இருக்கிறது?
••
மொத்தமாக
சத்தம் போடுங்கள்!
••
'உலகமே
அழிந்து போ!
இல்லையென்றால்
போரின் வேரை
வெட்டிவிடு!'

கரிமா றாஹில்.

## சின்ன சின்ன கவிதைகள்

வாழ்க்கை
சிவதுக்கு
ஆலிங்கனச் சுகம்;
பலதுக்கு
அசோகவனச்
சோகம்.
***
பிள்ளைகள்
தாம்
வாழ்ந்ததைச்
சொல்கின்ற
வரவுக் கணக்குகள்!
***
மரணம்
இது கணக்கை
முடிப்பதற்கு
கடவுள் போடும்
கடைசிப் புள்ளி.

த. தருமலிங்கம்–
நீர்கொழும்பு.

## தேன் கிண்ணம்



## நான் எங்கே..?

குப்பைச் சவங்களும்
குருதிச் சாக்கடையுமாக
என்
தேசத்துத் தெருக்கள்!
**
பழுத்த விலைவாசியிலும்
கொழுத்தலையும் நாய்கள்!
எங்கோ ஒரு மூலையில்
துப்பாக்கி விசையும்
சுண்டு விரலும்
முத்தமிடும் வரையென
வாழ்க்கை வரையறுக்கப்பட்டதனால்
முருக்க மரத்து
வேதாளமாகிப் போனது
சமாதானம்!
**
கண்ணி வெடித்தொரு
கால் மணி நேரத்துள்
களம் கடந்து
நான் மட்டும்
கடைக்கெல்லாம் போவதுண்டு.....
**
அம்மா அலறுவார்;
அப்பா பதறுவார்;
பார்ப்பவர் பைத்தியமென்பர்;
பாவம் அவர்கள்!
**
குஞ்சப்புறாவே!
நெஞ்சுக்குள் நீ என்னைத்
தஞ்சமாய் வைத்து
அஞ்சாறு புத்தகத்தால்
அடைகாத்துத் திரிவதை
இவர்கள்
எங்கே அறியப் போகிறார்கள்.....?
**

த.தயாபரன்–ஆரையம்பதி.

## எதிர்பார்க்கும் எச்சங்களாய்..!

கண நேர
மூச்சிழுப்பில் என் தேச
சுவாசமே
மணம் சொரியும்.
***
பூக்களின் வாசனையை
விடவும்
என் தேசம்
சுகந்தமானது.
***
அடி நாசியின்
கூர்முனையின்
இருப்பில்
தினம் தினம்
நினைவை அள்ளும்
மலர் வனமாய்
என் தேசத்து
ஸ்பரிசங்கள்.
***
அழியாத சுவடுகளின்
ஒற்றைச்
சுமைகள்,
பிரிவை அள்ளி எடுத்து
ஞாபகப்படுத்தும்!
***
துளிர்க்கும்
ஒரு துளி கண்ணீரும்
என் தாய் மண்ணின்
நினைவுகளோடு
கரையும்.
***
மீண்டும்– அந்த
ஒட்டுசுட்டான்
தான் தோன்றி ஈசுவரர்
கொடிமரம் பூக்கும்?
***
மாங்குளமும்
முல்லைத்தீவும் கைகுலுக்க
என் தேசத்து
மண்ணில்
என் கால்கள்
பதியும்?
***
மருதியின் வாங்கோசை
என் காதுகளில்
நிறைய
நான் சுபஹுத்
தொழுகைக்காய்
எழுந்து அங்கே
உழுச் செய்வேன்?
***
மகா
வித்தியாலயத்தில்
வாத்தியார்
அடிக்கும் சத்தம்
றோட்டோர எனக்கும்
கேட்கும்?
***
எந்த நினைவுகளை
வேண்டாமென்பது?
எல்லாம்
நிஜங்களாக....
இன்னும் எத்தனை
நாட்கள்தான்
வழி மேல் விழி
வைத்து....
விம்மி வெடிப்பதும்
ஏங்கி அழுவதும்....?
***

"முல்லைக்கவி"

## காத்திரு காதலியே...!

கல்யாணச் குழல்
கருக் கொள்ளும்வரை
காதலியே காத்திரு!
•••
இந்த–
சின்னத் தீவின்
'ஆயுத வேலி'களுக்குள்
'அடையாள அட்டை'களை
காட்டிக் கொண்டே
சுகச் சொர்க்கம்
காண்பதெங்ஙனம்?
•••
குண்டுகள்
விதைத்த பூமியிலே..
நீயும், நானும்–
நிச்சயித்து
தடம் பதிப்பதெங்கே..?
•••
வெடிச் சத்தங்களும்
மரண ஓலங்களும்
மலிந்துவிட்ட தேசத்தில்
புன்னகையுடன்–
கை கோர்த்து
உடல் வேர்க்க...
உறவாடுவ தெங்ஙனம்..?
•••
காத்திரு–
காதலியே...!
இங்கே 'அடையாள அட்டை'யில்
இனம் பார்க்கும்
காலம்
இல்லாது போகும்வரை...!
•••

கோவுஸ்ஸ ராம்ஜீ–எல்ல.

## சோகம் வாழ்க்கையாகிறது...

அவளின் பார்வை
எனது
பேனாவுக்கு
புதிய குறியீடு...!
0–0
வார்த்தைகள்
வரண்டு கிடக்கிறது;
வாலிபம்
வற்றிக்கிடக்கிறது!
0–0
சிலர்
தூற்றினார்கள்,
சிலர்
போற்றினார்கள்,
இன்னும் சிலர்
வாழ்த்தினார்கள்!
0–0
அவளின் வார்த்தையால்
உணர்ச்சியற்றவனாய்
மல்லாந்து
கிடக்கிறேன்...
நான்
வாழ்த்துக்களினால்
வாழ்க்கை வாழவில்லை;
வாழ்க்கையே
வார்த்தையாக மாறியதனால்...
0–0
சந்தர்ப்பத்தினால்
சத்தியம்
செய்தவர்கள்,
சந்தர்ப்பத்தினாலேயே...
செத்து விட்டார்கள்!
0–0
இந்த
வாழ்க்கையானது
புண் பட்ட இதயத்தில்
புயல் காற்று
வீசுவது போல...
0–0
காதல் என்பது
இப்படித்தான்
கால வெள்ளத்தில்
கரைந்து போகும்–
மண் வீடுகளைப் போல...
0–0



எம்.பெஸ்.நியாஸ்–
பொத்துவில்–03.

## அந்த நாள் ஞாபகம்

'காதல் மன்னன்' என்று அந்தக்காலத்தில் அழைக்கப்பட்டவர் நடிகர் ஜெமினிகணேசன். காதல் மன்னனின் மூன்று பருவத்தோற்றங்களும் மூக்கில் விரல்வைக்கச் செய்கின்றன அல்லவா?







இந்தக் குறு குறுப்பான குட்டிப்பையன் யார் தெரிகிறதா? நகைச்சுவை மன்னன் நாகேஷின் வாரிசு. ஆம். ஆனந்த்பாபுதான். அட... இன்னமும் அந்தக் குழந்தைமுகம் மாறவேயில்லையே!







## இந்த வாரம் உங்கள் பலன்

(27.10.96 தொடக்கம் 02.11.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| துலாம் | - சூரியன், புதன். |
| தனு | - வியாழன். |
| கும்பம் | - சனி. (வக்கரம்) |
| மீனம் | - கேது. |
| சிம்மம் | - செவ்வாய். |
| கன்னி | - வெள்ளி, இராகு. |

சுபநேரம் புதிய நேரப்படி கணிக்கப்படுகிறது

★ சந்திரன்- மேடம், இடபம், மிதுனம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 3 | மணி |
| திங்கள்- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 7 | மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், தொழில் சிறப்பு. | பி.ப. 1 | மணி |
| புதன்- பொருள் நஷ்டம், மனக் கலக்கம். | மு.ப. 9 | மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, உறவினர் பகை. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- மன மகிழ்ச்சி, வீண் பகை. | மு.ப. 9 | மணி |
| சனி- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 1 | மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருட் செலவு, கடன் படல். | மு.ப. 9 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |
| செவ்வாய்- வீண் கலக்கம், பிரயாண மிகுதி. | பி.ப. 1 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, காரியானுகூலம். | பி.ப. 4 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | மு.ப. 10 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 | மணி |
| சனி- முயற்சி பலிதம், பலவித பேறு. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-1

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பிரயாணக் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. 1 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் சகவாசம். | மு.ப. 10 | மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், கடன் படல். | பி.ப. 2 | மணி |
| புதன்- துயர் நீங்கும், உயர்ந்த எண்ணம். | மு.ப. 9 | மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 | மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, அரச உதவி. | பகல் 12 | மணி |
| சனி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | மு.ப. 10 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், உறவினர் உதவி. | பகல் 12 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், காரியத்தடை. | பி.ப. 2 | மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | மு.ப. 9 | மணி |
| புதன்- பயனுள்ள செயல், பொருள் வரவு. | மு.ப. 10 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- மன மகிழ்ச்சி, அந்நியர் உதவி. | பகல் 12 | மணி |
| சனி- தொழில் விருத்தி, இனசன நன்மை. | பி.ப. 3 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | பகல் 12 | மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, பொருள் வரவு. | பி.ப. 3 | மணி |
| புதன்- உயர்ந்த நிலை, பெரியோர் நட்பு. | பி.ப. 2 | மணி |
| வியாழன்- காரியானுகூலம், துயர் நீங்கும். | பி.ப. 1 | மணி |
| வெள்ளி- பொருள் வரவு, வெளியிடப் பயணம். | மு.ப. 10 | மணி |
| சனி- துயர் நீங்கும், காரியசித்தி. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-2

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, காரியசித்தி. | பி.ப. 2 | மணி |
| திங்கள்- வீண் கலக்கம், செலவு மிகுதி. | பி.ப. 1 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, மனக் கஷ்டம். | காலை 7 | மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், கௌரவம். | பகல் 11 | மணி |
| வியாழன்- தொழில் நஷ்டம், பயண மிகுதி. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | காலை 7 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, பண வரவு. | மு.ப. 10 | மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, கடன் படல். | பி.ப. 2 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, இனசன நன்மை. | பகல் 12 | மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், கௌரவம். | பி.ப. 3 | மணி |
| புதன் - உறவினர் உதவி, பண வரவு. | மு.ப. 10 | மணி |
| வியாழன்- பலவித பேறு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | மு.ப. 10 | மணி |
| சனி- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | பி.ப. 3 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் 12 | மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், உறவினர் உதவி. | பி.ப. 2 | மணி |
| புதன்- மனக் கலக்கம், கடன் தொல்லை. | பி.ப. 3 | மணி |
| வியாழன்- தொழில்நிலைக் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- பண வரவு, காரியானுகூலம். | பி.ப. 3 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | மு.ப. 9 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், காரியானுகூலம். | பி.ப. 2 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, பெரியோர் உதவி. | பகல் 12 | மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, அந்நியர் பகை. | பி.ப. 3 | மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | மு.ப. 9 | மணி |
| வியாழன்- உறவினர் உதவி, பலவித பேறு. | பி.ப. 1 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, கௌரவம். | மு.ப. 10 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பணக் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. 1 | மணி |
| திங்கள்- மனக் கலக்கம், அந்நியர் உதவி. | பி.ப. 3 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், காரியசித்தி. | மு.ப. 10 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, உறவினர் உதவி. | மு.ப. 9 | மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 2 | மணி |
| சனி- தொழில் மந்தம், பணவரவு குன்றல். | காலை 7 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 3 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | மு.ப. 10 | மணி |
| செவ்வாய்- காரியசித்தி, பொருள் வரவு. | பி.ப. 2 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. 4 | மணி |
| வியாழன்- துயர் நீங்கும், புதிய முயற்சி. | மு.ப. 9 | மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, மனக் கலக்கம். | பி.ப. 3 | மணி |
| சனி- பொருள் வரவு, காரியானுகூலம். | மு.ப. 10 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### கன்னி: சுப நேரம்


(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. 2 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | மு.ப. 10 | மணி |
| செவ்வாய்- வீண் தொல்லை, மறைமுக எதிர்ப்பு. | பி.ப. 1 | மணி |
| புதன்- காரியசித்தி, பொருள் வரவு. | மு.ப. 10 | மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், கௌரவக் கேடு. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- காரியக் கேடு, மனக் கவலை. | மு.ப. 10 | மணி |
| சனி- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பி.ப. 3 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1


படிப்பகம்





## வாருங்கள்! கேளுங்கள்!

சின்னத் தம்பி சின்னத் தங்கை
இங்கே வாருங்கள்!- நான்
சொல்லப் போகும் வார்த்தை தன்னை
நன்றாய்க் கேளுங்கள்!

உண்மை என்றும் உயர்வைத் தருமே
என்பதை நம்புங்கள்!- பிறர்
பொருட்கள்மீது ஆசை கொள்வதை
விட்டுத் தள்ளுங்கள்!

பொறாமை என்ற தீய குணத்தை
இன்றே மறவுங்கள்!- மனம்
நோகும் படியே வையும் குணத்தை
உடனே ஒழியுங்கள்!

காலை எழுந்து கடன்கள் முடித்து
கடவுளை வணங்குங்கள்-தினம்
நான் தவறாமல் பாடம் படிக்க
பள்ளி செல்லுங்கள்!

மிருதுபாஷினி-பதுளை.

கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்திக்
காட்சி கெடுத்திடலாமோ?
பெண்களறிவை வளர்த்தால்-வையம்
பேதமை யற்றிடுங் காணீர்!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை




ஓர் ஊரில் இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். மூத்தவன் பெயர் பொன்னன். இளையவன் பெயர் சின்னன். பொன்னன் திருட்டுப்புத்தி உள்ளவன். பிறரை ஏமாற்றி வாழ்பவன். ஆனால் சின்னனோ ஒரு அப்பாவி. மிகவும் நல்லவன்.

அவர்களுடைய பெற்றோர் இறந்ததும் சொத்துக்களை ஒரு புதிய முறையில் பங்கிட்டுக் கொள்ளலாம் என்று தம்பியிடம் அண்ணன் சொன்னான்.

"நம் வீட்டில் உள்ள கம்பளி இருக்கிறதே, அது பகலெல்லாம் உனக்குச் சொந்தமாக இருக்கட்டும். இரவெல்லாம் எனக்குச் சொந்தமாக இருக்கட்டும். தோட்டத்தில் உள்ள மரங்களின் அடிப்பாகம் எல்லாம் உனக்குச் சொந்தம். மேல்பாகம் எனக்குச் சொந்தம். வீட்டில் இருக்கும் பசுமாடுகள் இருக்கின்றனவே, அதன் முன்பகுதி உனக்குச் சொந்தம், பின்பகுதி எனக்குச் சொந்தம்," என்றான் பொன்னன். இளையவனான சின்னன் சரியென்று ஒப்புக்கொண்டான்.

அதன்படி பகல் முழுவதும் கம்பளியை சின்னன் தான் வைத்துக் கொள்வான். ஆனால் பகலில் போர்த்திக் கொள்ள முடியாதே. ஆனால் பொன்னனோ இரவில் கம்பளியால் போர்த்திக் கொண்டு தூங்குவான். இளையவன் குளிரால் நடுங்குவான்.

தோட்டத்தில் மரங்களின் அடிப்பாகம் சின்னனுக்குச் சொந்தமாக இருப்பதால் தண்ணீர் ஊற்றுவது அவன் வேலை. ஆனால் பொன்னனோ மரங்களின் மேற்பாகத்தில் இருந்த பழங்களைப் பறித்து உண்பான்.

பசுமாடுகளுக்குத் தீனி வைப்பது சின்னனின் வேலை. ஆனால் பாலைக் கறந்து குடிப்பதோ பொன்னன்.

இது இளையவனுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. அண்ணனிடம் எவ்வளவோ சொல்லிப்பார்த்தான். ஆனால் அவனோ, "நாம் இருவரும் இப்படித்தானே பங்கிட்டுக் கொள்வோம் என்று பேசினோம். சம்மதித்தோம். ஆகவே நீ குறைப்படுவதற்கு என்ன இருக்கிறது? இனி மாற்ற முடியாது." என்று கூறிவிட்டான்.

சின்னன் வருத்தத்துடன் போய் ஒரு மரத்தின் கீழ் உட்கார்ந்தான். அவன் கவலையாக இருப்பதை அவ்வழியே சென்ற ஒரு கிழவி கண்டாள். அவனிடம் என்ன காரணம் என்று விசாரித்தாள். அவன் தனக்கும், அண்ணனுக்கும் இடையே உள்ள பிரச்சனையைக் கூறினான்.

உடனே கிழவி,

"எப்படி உன் அண்ணன் உன்னை ஏமாற்றத் தொடங்கினானோ, அப்படி அவனை நீ ஏமாற்ற வேண்டும். அதற்கு ஒரு வழி சொல்கிறேன். பகல் பொழுதில் கம்பளி உனக்குச் சொந்தமானபடியால், அதைப் பகல் முழுவதும் தண்ணீரில் நனைத்து வை. இரவானதும் அதை அண்ணனிடம் கொடு. மரத்தின் அடிப்பாகம் உனக்குச் சொந்தமானபடியால், உன் அண்ணன் மரத்தின் மீதேறிப் பழங்களைப் பறிக்கும்போது நீ மரத்தின் அடிப்பாகத்தை கோடாலியால் வெட்டப்பார். பசுமாட்டின் முன் பகுதி உனக்குச் சொந்தமானபடியால், அவன் பால் கறக்கும்போதெல்லாம், மாட்டை நீ நன்றாக அடி. பிறகு என்ன நடக்கிறதென்று பார்" என்று கூறி விட்டுச் சென்றாள்.

கிழவி சொன்னபடியே சின்னன் செய்தான். கம்பளி ஈரமாக இருக்கவே அதைப் போர்த்திக் கொள்ளமுடியாது பொன்னன் குளிரில் நடுங்கினான். பழம் பறிக்க மரத்தில் ஏறியபோது, மரத்தை வெட்ட ஆரம்பிக்கவே, பயந்து கொண்டு பழம் பறிக்காமலே இறங்கினான். பொன்னன் பால் கறக்கப் போனபோது, சின்னன் மாட்டை அடிக்கவே, மாடு பால் கறக்க மறுத்து உதைத்தது.

தான் ஏமாற்றியதற்குச் சின்னனும் தன்னை ஏமாற்றுவது பொன்னனுக்குப் புரிந்தது. அவன் சின்னனைப் பார்த்து,

"நான் இனி உன்னை ஏமாற்ற மாட்டேன். நீயும் என்னை ஏமாற்றாதே. இனி நாம் இருவரும் ஒற்றுமையாக இருப்போம்," என்றான்.

## வாரம் ஒரு நாடு

### ருவாண்டா



| | |
|---|---|
| தலைநகர் | - கிகாலி |
| பரப்பு | - 26,338 சதுரகிலோ மீட்டர் |
| மக்கள் தொகை | - 80 லட்சம் |
| மொழி | - ஃபிரெஞ்சு, கினியார் வான்டா, சுவாகிலி |
| எழுத்தறிவு | - 50% |
| சமயம் | - பழங்குடி, இஸ்லாம், கிறிஸ்தவம். |
| நாணயம் | - ருவாண்டா ஃபிராங் |
| தனிநபர் வருமானம் | - 200 டொலர். |

அமைவிடம்:

மத்தியகிழக்கு ஆபிரிக்காவில் நிலநடுக்கோட்டிற்குச் சற்றுக் கீழே அமைந்துள்ளது.

வரலாறு:

1919 முதல் ருவாண்டா பெல்ஜியத்தின் ஆதிக்கத்தில் இருந்தது. 1959ல் ருவாண்டாவில் டுட்சி வர்க்கத்தினரின் ஆட்சிக்கெதிராக ஹூடு இனத்தவர் கலகங்களை உருவாக்கினர். 1961ல் ஹூடு இனத்தவர் புருண்டி என்ற பெயரிலும், டுட்சி இனத்தவர் 1962ல் ருவாண்டா என்னும் பெயரிலும் சுதந்திர நாடுகளை உருவாக்கினர்.

ருவாண்டாவில், டுட்சி, ஹூடு இனச் சண்டை பல காலமாக நடைபெற்று வருகிறது. இனக் கலவரத்தைத் தொடர்ந்து 1993 ஒகஸ்ட்டில் அரசுக்கும், டுட்சி இனத்தினருக்குமிடையே ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது. 1994 இல் ருவாண்டா மற்றும் புருண்டி அதிபர்கள் விமான வெடிவிபத்தில் கொல்லப்பட்டனர். தொடர்ந்து பரவிய கலவரத்தில் இலட்சக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். ஏராளமானோர் அகதிகளாயினர். 1994 ஜூலையில் டுட்சி பெரும்பான்மை யான ருவாண்டன் பேட்ரியாடிக் கட்சி, ஹூடு இனத்தைச் சேர்ந்த பிஸிமுங்குவை அதிபராக்கியது.

பொருளாதாரம்:

நாட்டின் பொருளாதாரம் விவசாயம் சார்ந்தது. தொழில்துறை வளர்ச்சி அடையவில்லை. கால்நடை வளர்ப்பு பரவலாக வளர்ந்துள்ளது. கோப்பி, பருத்தி முக்கிய விளைபொருட்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 02.11.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 164
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 162

பரிசுக்குரியவர்:
வி. கௌரிசங்கர்,
வவுனியா மத்திய மகாவித்தியாலயம், வவுனியா.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எல். ரஜீவ், இ/பரி யோவான் த.ம.வி., இறக்குவானை. | செல்வன் இப்திகார் இஸ்மாயில், மடவளை மதீனா தேசிய பாடசாலை, மடவளை பஸார். |
| அ.அ. முஹம்மத் அஸாம், சாஹிரா தேசிய பாடசாலை, புத்தளம். | எஸ். சுதர்சினி, அல் அக்ஸா மகா வித்தியாலயம், கல்பிட்டி. |
| இ. ஜெனிட்டா, இந்து மகா வித்தியாலயம், பாண்டிருப்பு, கல்முனை. | பி. விவேக், விவேகாநந்தா கல்லூரி, கொழும்பு. |
| செல்வி எஸ்.எம். சியாதா, பதுளுபிட்டிய, பதுளை. | எம்.என். பாத்திமா நிஷ்ரா, அறபா தேசிய கல்லூரி, கல்பொக்கை, வெலிகாமம். |
| செல்வி எஸ். சத்திய கலா, நு/டயகம சிங்கள பாடசாலை, டயகம. | செல்வி கோ. சாந்தப்பிரியா, விபுலாநந்தா மத்திய கல்லூரி, காரைதீவு-04. |

## டைட்டானியம்

* **டைட்டானியம் என்றால் என்ன?**
டைட்டானியம் என்றால் ஒருவகை உலோகம். இது 18ம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த உலோகத்திற்கு டைட்டானியம் என்று பெயர் வைத்தவர் விஞ்ஞானி மார்ட்டின் கிளேபோர்த்.
* **இதன் முக்கிய தன்மை என்ன?**
இது மிகவும் இலேசானது. அதே சமயம் உறுதியாக இருக்கும். நீண்டநாள் கெடாமல் இருக்கும். துருப் பிடிக்காது. எந்தப் பொருளாலும் அரிக்க முடியாது.



மார்ட்டின் கிளேபோர்த்

* **இது எதற்குப் பயன்படுகிறது?**
சில கருவிகள் செய்வதற்கும், விமானம், கப்பலின் சிலபகுதிகள் செய்வதற்கும் பயன்படுகிறது. விண்வெளி ஓடங்கள் செய்யவும் இது பயன்படுகிறது.
* **கத்திகள், கரண்டிகள் செய்ய இதை ஏன் பயன்படுத்துவதில்லை?**
இந்த உலோகத்தை அதன் தாதுக்களில் இருந்து பிரித்து எடுப்பது அவ்வளவு எளிதல்ல. அதற்கு மிகவும் செலவாகும். அதனால் இது குறைந்த அளவே தயாரிக்கப்படுகிறது. இது மிகவும் விலையுயர்ந்த உலோகம்.
* **நிக்கல் உலோகமும், டைட்டானியமும் சேர்ந்த நின்டால் உலோகக்கலவையால் என்ன பயன்?**
நின்டாலை ஒரு உருவமாக்கி அதனை உருக்கி விட்டால்கூட அது குளிர்ந்ததும் பழைய உருவத்தைப் பெற்றுவிடும். அதனால் சில இயந்திரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் இது பயன் படுத்தப்படுகிறது.

## பாரதீசுப் பறவைகள்

அழகிய மயிலைப் பார்த்திருப்பீர்கள். மயில்களைப் போல அழகான பறவைகள் இன்னும் பல உண்டு. அவற்றில் பாரதீசுப் பறவைகள் என்பனவும் அடங்கும்.

இப்பறவைகளின் உடலில் ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு நிறம் பெற்று மிகப் பகட்டமாக இருக்கும். அதனால் இவற்றை 'விண்ணுலகப் பறவை' என்றும் அழைப்பார்கள். இப்பறவையினங்கள் பெரும்பாலும் நியூகினித்தீவில் வாழ்கின்றன. அவுஸ்திரேலியாவிலும் சில இனங்கள் உண்டு. இப்பறவைகளின் உடல் சிறியதாக இருக்கும். ஆனால் இவற்றின் இறகுகள் இவற்றைப் பெரிய பறவைகள் போலத் தோன்றச் செய்யும். சில பறவைகளின் வால் இறகுகள் ஒரு மீட்டர் நீளமிருக்கும்.

இப்பறவை இனங்களில் ஆண்பறவைகளே அழகானவை. ஆண்பறவைகளின் இறகுகள் பச்சை, நீலம், மஞ்சள், சிவப்பு, ஊதா, செம்மஞ்சள் முதலிய பல நிறங்களில் இருக்கும். கம்பி போல அழகிய நீண்ட வால்களும், செண்டு போன்ற முடியும் இவற்றுக்கு உண்டு. மகிழ்ச்சி அடையும் போது இவை தம் வால் இறகுகளை விரித்து நடனமாடுகின்றன. பெண் பறவைகளுக்கு இத்தகைய அழகிய இறகுகள் இல்லை.



இப்பறவைகளின் அழகிய இறகுகளுக்காக இவை கொல்லப்பட்டு வருகின்றன. இவற்றைப் பிடித்துக் கூட்டில் அடைத்து வளர்த்தால் இவை இரை தின்ன மறுத்து விடும். இதனால் சில நாட்களின் பின் இறந்து போகும்.

## ஏஷியாட்

ஆசியாக் கண்டத்தில் மட்டும் ஆசிய நாடுகளுக்கிடையே நடைபெறும் மிகப் பெரிய விளையாட்டு 'ஏஷியாட்' என அழைக்கப்படுகிறது. ஒலிம்பிக் போட்டிகளைப் போன்று இதுவும் நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுகிறது. ஏஷியாட் போட்டிகள் இதுவரை நடைபெற்ற ஆண்டுகளும், இடங்களும்:

| ஆண்டு | இடம் | நாடு |
|---|---|---|
| 1 1951 | புதுடில்லி | இந்தியா |
| 2 1954 | மணிலா | பிலிப்பைன்ஸ் |
| 3. 1958 | டோக்கியோ | ஜப்பான் |
| 4. 1962 | ஜகார்த்தா | இந்தோனேசியா |
| 5. 1966 | பாங்கொக் | தாய்லாந்து |
| 6. 1970 | பாங்கொக் | தாய்லாந்து |
| 7. 1974 | டெஹ்ரான் | ஈரான் |
| 8. 1978 | பாங்கொக் | தாய்லாந்து |
| 9. 1982 | புதுடில்லி | இந்தியா |
| 10.1986 | சியோல் | தென்கொரியா |
| 11.1990 | பெய்ஜிங் | சீனா |
| 12.1994 | ஹிரோஷிமா | ஜப்பான் |

13வது 'ஏஷியாட்' போட்டிகள் தாய்லாந்து நாட்டின் தலைநகரான பாங்கொக்கில் 1998ம் ஆண்டு நடைபெற இருக்கிறது.

தொகுப்பு:- எஸ்.பாண்டியன்.

## விடுகதைகளும் விடைகளும்

1. கால்களோ நான்கு, கண்ணில்லை, வாலில்லை. அது என்ன?
2. பச்சை இலை ஆடப் பாம்பு நெளிந்து ஓடுது. அது என்ன?
3. ஓடுவான், சாடுவான் ஒற்றைக் காலில் நிற்பான். அவன் யார்?
4. பளிங்கு நீர் மான்களுக்கு பச்சை ஒட்டடை தீவனம். அது என்ன?
5. நடக்க முடியாதவன் நாலு பேருக்கு வழி சொல்கிறான். அவன் யார்?
6. தலை எல்லாம் நரைத்தவள் தாவி ஓடுகிறாள். அவள் யார்?
7. பட்ட மரத்திலே பச்சை; பச்சை நுனியிலே சிவப்பு. அது என்ன?
8. காலில்லாப் பாப்பா கடகடன்னு ஓடுது. அது என்ன?

### விடைகள்

| | |
|---|---|
| 1. நாற்காலி | 2. ரயில் |
| 3. கதவு | 4. பாசி |
| 5. கைகாட்டி மரம் | 6. புகை |
| 7. கிளி | 8. பாம்பு. |

தொகுப்பு:- ஜி.சுஜீவா, வத்தளை.

www.padippakam.com

# தூ! மறுபடி

அசத்தல் 7



“மரியகீதாவோட ரூமிலே அவ்வளவு நேரம் இருந்தியே, என்ன செஞ்சே சுசி?.”

“ஒன் மினிட். யாரோ கொள்ளையடிச்சிட்டுப் போயிடற மாதிரி எதுக்காக டெலிவிஷனைப் பூட்டி வைக்கிறிங்க? குட் ஈவினிங் மிஸஸ் ஷோபனா. ம். வாசிங்க.”

“தஞ்சாவூருக்கருகே கருந்தட்டான் குடியில் ஏற்பட்ட கலவரத்தையடுத்து அங்கு பதட்ட நிலை நிலவி வருகிறது. ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்துவதை போலிஸ் தடை செய்திருக்கிறது.”

“ஹேய்.. லுக், எனக்கு பதில் சொல்லு.”

“கமான். என் பனியனைத் தூக்குங்க.”

“ஏய்... என்னாச்சு... அந்த மூட்ல இருக்கியா? ஐயாம் நாட் ரெடி.”

“ஆசைதான். இங்கே பாருங்க.

**இதுவரை**

மதன்–கீதா காதலர்கள். கடற்கரையில் சந்திக்கின்றனர். அதே நாளில் கடற்கரையில் மரியகீதா என்னும் பெண் கொலை செய்யப்பட்டு பிணமாகக் கிடக்கிறாள். கொலைப்பழி மதன் மீது விழுகிறது.

காதலி கீதா சாட்சி சொன்னால் மதன் விடுதலையாகிவிடலாம். கீதாவோ தந்தைக்குப் பயந்து காதலை மறைக்கிறாள்.

சட்டத்தரணியின் திறமையால் மதன் விடுதலையாகிறான். அதே கடற்கரையில் காதலி கீதாவை அழைத்து கொலைசெய்கிறான். பொலிஸில் சரணடைகிறான்.

நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறது. சட்டத்தரணியின் புத்திசாலித்தனமான வாதங்கள் மூலமாக மதன் விடுதலையாகிறான்.

மதனுக்கு மனச்சாட்சி உறுத்துகிறது. காதலி கீதா கொலைக்கு மரியகீதாவின் கொலைதான் மூலகாரணம். அந்தக் கொலைகாரனைக் கண்டுபிடித்தால் மட்டுமே மன நிம்மதி கிடைக்கும் எனக்கூறும் மதன் துப்பறியும் நிறுவனம் ஒன்றின் உதவியுடன் முயற்சியில் இறங்குகிறான்.

இனி....

பனியனுக்குள்ளே என்ன இருக்கு?”

“என்ன, தொப்புள்!”

“ச்சீ! முத்தான மூன்று புத்தகங்கள். டண்டடைங்!”

“மறுபடியும் திருட்டுப் புத்தியா? என்ன புஸ்த்தகமது?”

“கட்டிலுக்கு வா கண்ணா!”

“என்ன நீ இன்னிக்கு அசிங்க அசிங்கமா பேசறே?”

“புஸ்த்தகத் தலைப்பு பரத். துடிக்கும் பருவம். காமத்தின் எல்லை.”

“அடக் கருமமே... எதாச்சும் துப்பறியச் சொன்னா... இப்படி கண்ட புஸ்த்தகத்தையும் திருடிட்டு வர்றியே... நல்லாருக்கா?”

“இன்னும் படிக்கலையே... எப்படி சொல்றது?”

“வெவஸ்த்தை கெட்ட ஜென்மம்ப்பா. இங்கே கொண்டா. மொதல்ல நெருப்பு வச்சி எரிக்கணும்.”

“வெய்ட், படிச்சிட்டு எரிச்சுடலாம். என் பெயர் மாலா. நான் என் தோழியை தேடி சென்னைக்கு தனியாய் வந்தேன். பஸ்சுக்காக காத்திருந்த போது பக்கத்தில் நின்றவனின் பார்வை என்னுடைய...”

“இப்பக் கொடுக்கப் போறியா, இல்லையா....?”

“இருங்க... இழுக்காதிங்க... கிழிஞ்சிடும்.”

“இரு. இந்த காகிதம் புஸ்த்தகத்துக்குள்ளேர்ந்து தானே விழுந்திச்சி?”

“என்ன காகிதம் இது?”

“ஒரு மெடிக்கல் ஸ்டோர்ஸ் பில்லு! ரெண்டு மாசத்துக்கு முந்திய பில்லு. இதென்ன பாரு... ஒரு அயிட்டம்தான் எழுதிருக்கு. மாத்திரை பேரு புரியுதா?”

“கொண்டாங்க... அட! இது நம்ம ஈ.பி. ஃபோர்டு!”

“என்னது?”

“மாத்திரைங்க பரத். ஈ.பி. ஃபோர்ட்ன்னு பேரு.”

“அப்படின்னா? இது எதுக்கு சாப்பிடறது?”

“தலைவலியா? ஜலதோஷமா? ஜுரமா? கூடவே வயிற்றில் கர்ப்பமா? இதை சாப்பிடுங்கள். எல்லாம் சுத்தமாகி விடும். டொடைங்! வாஷிங் பவுடர் நிர்மா.....”

“ஹே....ஸ்டாப்! இதைப் பத்தி எல்லாம் எப்படி நீ தெரிஞ்சு வச்சிருக்கே?”

“கூடாதா? நாலெட்ஜ் மேன். உடனே சந்தேகப்புத்தி வந்துடுமே.... எய்ட்சுக்கு எக்ஸ்பான்ஷன் என்ன பரத்?”

“அக்கொயர்ட் இம்மியுனோ டெஃபிஷியன்சி சிண்ட்ரோம்!”

“இதை ஏன் தெரிஞ்சு வச்சிருக்கிங்க? உங்களுக்கு எய்ட்ஸா?”

“ச்சீ!”

“அது மாதிரி.... நமக்கும் கர்ப்பம் கிடையாதுசார். பொது அறிவு! என்னடா ஒரு க்ளு கொண்டாந்தாளேன்னு பாராட்டறதை விட்டுட்டு....”

“சுசி, மரியகீதாவோட பி.எம்.ரிப்போர்ட்ல அவ வயித்திலே நாப்பது நாள் கரு இருக்கிறதா செய்தி இருக்கு. அவ ரூமிலே கர்ப்பம் கலைக்கிற மாத்திரை பில்! யார் வாங்கிக் கொடுத்தா! இல்லை சொந்தமா வாங்கினாளா?”

“மெடிக்கல் ஸ்டோர்சிலே விசாரிங்க.”

“கஷ்டம். இது ரெண்டு மாசத்துக்கு முந்தின பில். சுசி ராஜசேகரை நான் சந்தேகப்படறேன். கல்யாணமாகி ஆறு வருஷமாச்சி. குழந்தை எதுவும் இல்லை. அழகான, ஆம்பளைங்க கிட்டே அப்படி இப்படி பழகற ஒரு கொழுந்தியா நாலு வருஷமா சொந்த வீட்டுக்குள்ளேயே இருக்கான்னா.....”

“உடனே கள்ளத் தொடர்புன்னுடுவிங்களே....”

“இந்த வார்த்தை எல்லாம் எங்கே படிக்கிறே சுசி.....? மாம்பலத்திலே ஒரு வீடு பிடிச்சிருக்கார் ஆறு மாசம் முன்னாடி.. சொந்த வீடு இருக்கிறப்போ எதுக்கு வாடகை வீடு? இன்னும் குடி போகலை. எதுக்காக அந்த வீடு? மரியகீதாவைப் பத்தி சொன்னப்போ சச் எ சார்மிங் ஃபிகர்ன்னு சொன்னார். வீடு புரோக்கரை ஃபிரெண்டுன்னு சொன்னார். போய் விரட்டப் பார்த்தார்.”

“அவர் கும்பகோணத்திலே இருந்ததுக்கு ஸ்ட்ராங்கான அலிபி இருக்கறதா டிபார்ட்மெண்ட்ல சொன்னாங்களே பரத்.”

“அதான் குழப்பமா இருக்கு. இதைத் தவிர.....மரியகீதா யாரையோ காதலிச்சிருக்கா. யார் அது?”

“எனக்குத் தெரியும். அவன் பேர்கூட தெரியும்.”

“உளறாதே....”

“சொல்லட்டுமா? அவன் பேரு பாபு.”

“எப்படி சொல்றே?”

“ஒரு யூகம் தான். ஒரு வேளை சரியா இருக்கலாம். நீங்க புறப்படலாம்னு கூப்பிட்டப்போ ரெண்டு நிமிஷத்திலே வர்றேன்னு சொன்னேனே.... டாய்லட் போயிருந்தேன். ஃப்ளஷ்–அவுட் பக்கத்திலே சுவத்து சுண்ணாம்புல சின்ன எழுத்திலே ஹேர்ப் பின்னால பாபுன்னு ரெண்டு இடத்தில கீறியிருந்திச்சி.”

“அதெப்படி போலிஸ் கண்ல படாம போகும்?”

“படவே படாது. உங்க கண்ல கூடத்தான் படலை. கரியாலயோ, பென்சிலாலேயோ எழுதியிருந்தா பளிச்சுன்னு படிக்கலாம். இது....நகத்தாலோ, இல்லைன்னா, ஹேர்ப் பின்னால கீறப்பட்டிருந்திச்சி. ஃப்ளஷ் அவுட்ல உட்கார்ந்த நிலையிலே பார்த்தா தான் எழுத்து புரியும்.”

“மைகாட்! அது மரியகீதாவோட தனி ரூம். தனி டாய்லெட். அங்கே பேர் வெட்டப்பட்டிருக்குன்னா.... நிச்சயமா அதை அந்த காதலனோட பேராவே எடுத்துக்கலாம் சுசி.”

“எடுத்துக்கங்க. நானா வேணாங்கறேன். இன்னிக்கு புது சீரியல் ஆரம்பமாகுது. தொணதொணக்காம என்னைப் பார்க்க விடுங்க.”

“நான் டென்ஷனாகி நிக்கிறேன். உனக்கு டி.வி. புரோக்ராம்தான் முக்கியமாப் படுதா? உன்னை..... கவனிச்சுக்கறேன். இரு.... ஹலோ....இஸ் இட் கமிஷனர் ஆஃபிஸ்? எக்ஸ்டென்ஷன் செவன்டீன் ப்ளீஸ்..... ஹலோ, இன்ஸ்பெக்டர் அசோகன் இருக்காரா? பரத்ன்னு சொல்லுங்க. வெய்ட் பண்றேன்.”

“வாடா பாலு எப்ப வந்தே?”

“பஸ்ஸைவிட்டு கீழே இறங்கறதை பார்த்துட்டு தானே இருந்தே. அப்புறம் என்ன எப்ப வந்தேன்னு ஒரு கேள்வி?”

“சுசி, இதெல்லாம் ஒரு ஜோக்குன்னு சிரிக்கிறியா? வால்யூமையாவது குறையேன்.”

“ஊர்ல எல்லாரும் சௌக்கியமாடா?”

“எல்லாரும் சௌக்கியம்.”

“அப்பா சௌக்கியமா இருக்காரா?”

“அதான் எல்லோரும் சௌக்கியமா இருக்காங்கன்னு சொல்றேனே..... அப்புறம் என்ன அப்பா, அம்மான்னு தனித்தனியா கேக்கறே....வேற கேளேன்.”

“ஊர்ல மழை உண்டா?”

“இதை ஒன்னை கேட்டுடுங்க தப்பாம. இல்லைன்னு சொன்னா வந்து பஞ்ச நிவாரண நிதியா தரப்போறே?”

**மர்மக்கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்**

“ஹலோ, இன்ஸ்பெக்டர் அசோகன், நான்தான் பரத் பேசறேன். ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி சந்திச்சோம்.”

“யெஸ். சொல்லுங்க.”

“மரியகீதா கேஸ்ல ரோஸ்லின், ராஜசேகர் விசாரணையில அவ பழகின ஆண்கள்ன்னு குறிப்பிட்ட நபர்கள்ல பாபுன்னு யாரையாச்சும் சொன்னாங்களா?”

“பாபுவா? இல்லை சார். அவங்க குறிப்பிட்டது மூணே பேரைதான். மனோகர், கருணாகரன், சுபாஷ் மூணு பேரையும் துப்புரவா விசாரிச்சுட்டோம். அவங்களை சந்தேகப்பட வேண்டியதே இல்லை.”

“அவங்க மூணு பேர் அட்ரசும் வேணுமே.”

“சொல்றேனே.... குறிச்சுக்கறிங்களா?”

“சரி....சரி....சரி. குறிச்சுக்கிட்டாச்சு. தாங்க்ஸ். அப்புறம் ஒரு சின்ன கேள்வி. இந்த கேஸ் எப்போ உங்க கைக்கு வந்திச்சி?”

“மதன் மேல போட்ட வழக்கு தோத்ததும் நம்ம பிராஞ்ச்சுக்கு கேசை மாத்திட்டாங்க. ரோஸ்லின் வீட்டுக்குப் போனிங்களா?”

“போனேன். ரெண்டு நாள்ல உங்களை சந்திக்கிறேன். தாங்க்ஸ், சுசி, புறப்படு.”

“எங்கே?”

“இப்ப வாங்கின மூணு அட்ரசுக்கும் போகணும். மூணு அட்ரசுமே அடையாறு தான். பத்து மணிக்குள்ளே வந்துடலாம், வா.”

“நீங்க போய்ட்டு வாங்களேன். எனக்கு இங்கே கொஞ்சம் வேலை இருக்கு.”

“என்ன வேலை?”

“இந்த மூணு புஸ்த்தகத்தையும் படிக்க வேணாமா?”

“அடுத்த ஜென்மத்திலயாவது உருப்படற யோசனை இருக்கா? சரி, நான் மட்டும் போய்க்கிறேன். அப்போ எனக்காக ஒரே ஒரு காரியம் செய். இந்தா, இது வீட்டு புரோக்கர் அட்ரஸ். ஒரு ஆட்டோ பிடிச்சிக்கிட்டு இவரைப் போய் பாரு.”

“பார்த்து....?”

“ராஜசேகர் மாம்பலத்திலே பிடிச்சிருக்கிற வீட்டோட விலாசம் கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டு வா. நான் கேக்க மறந்துட்டேன்.”

“நீங்க மறந்ததுக்கு நான் அலையணுமா? ராத்திரி நேரத்திலே ஒரு கன்னிப் பொண்ணை இப்படி தனியாய் போகச் சொல்றது நியாயமா?”

“போகப் போறியா, இல்லை இப்பவே இந்த புஸ்த்தகத்தை எல்லாம் கொளுத்தட்டுமா?”

“போறேன்ப்பா. அதை மட்டும் செஞ்சுடாதிங்க. இந்தத் தமிழே தனி. எந்த யூனிவர்சிட்டிலயும் கிடைக்காது. எந்த லைப்ரரியிலேயும் கிடைக்காது.”

“எப்படியோ ஒழி! நான் போறேன்.”

* * *

“மிஸ்டர் மனோகர், என் கேள்விகளுக்கெல்லாம் ரொம்பப் பொறுமையா பதில் சொன்னிங்க. ரொம்ப தாங்க்ஸ். அப்போ... நீங்க நூறு சதவீதம் உறுதியா சொல்றிங்க. மரியகீதாவுக்கு பாபுன்னு யாரையும் தெரியாது?”

“தெரியாது சார். என் ட்ரூப்ல கூட மொத்தம் இருபத்தி ஆறு பேர் இருக்காங்க. அவங்கள்லயும் யாரும் பாபுன்னு இல்லை. ஐ யாம் ஷ்யூர்.”

“ரைட். நான் வர்றேன். உங்க ரிகர்சலை கெடுத்துட்டேன். ஸாரி.”

▫ ▫ ▫ ▫ ▫

“இந்த ரூம்ல நீங்க மட்டும்தான் தங்கியிருக்கிங்களா மிஸ்டர் சுபாஷ்?”

“இன்னொரு ஃபிரெண்டும் இருக்கான். வெளில போயிருக்கான்.”

“அப்போ பாபுன்னு யாரையும் நீங்க மரியகீதாவுக்கு அறிமுகப்படுத்தி வைக்கலை?”

“டெஃபனெட்லி நோ!”

“நீங்க டைரக்ஷன் கோர்ஸ் படிக்கிறிங்களா?”

“ஆமாம்.”

“எத்தனாவது வருஷம்?”

“செகண்ட் இயர்.”

“நீங்க எப்படி மரியகீதாவுக்கு ஃபிரெண்ட் ஆனிங்க?”

“மரியகீதா நடிச்ச ஒரு நாடகத்தைப் பார்த்தேன். சின்ன ரோல்தான். ஆனா வொண்டர்ஃபுல் பெர்ஃபார்மன்ஸ்! கிரீன் ரூம் போய் பாராட்டினேன். இங்கே நான் ஒரு ஷார்ட் ஃபிலிம் எடுக்கறேன். அதிலே ஒரு கேரக்டர் ரோல் நடிக்கச் சொன்னேன். ஒத்துக்கிட்டாங்க. கதை டிஸ்கஷன்லயும் கலந்து கிட்டாங்க. ஷூட்டிங் ஆரம்பிக்க இருந்தப்போ கொலையாய்ட்டாங்க.”

“யார் கொன்னுருக்கலாம்னு நினைக்கிறிங்க?”

“கர்ப்பம் கொடுத்தவனாத்தான் இருக்கணும்.”

“அது யாரா இருக்கலாம்?”

“அந்த காதலன் தான்.”

“அதான் யாரு?”

“எனக்கெப்படி சார் தெரியும்? பட் ஒன்திங். என்னைப் பொறுத்தவரைக்கும்.....மரியகீதா அவ்வளவு நல்ல கேரக்டர் உள்ள பொண்ணு கிடையாது.”

“எப்படி சொல்றிங்க?”

“கஞ்சா வேணுமான்னு கேட்டா சார்.”

“அதை வச்சி சொல்லிட முடியுமா?”

“என்ன ரேப் பண்ற மாதிரி பார்க்கிறேம்பா சார்.”

“அந்த அளவுக்கு சோஷியல்னு எடுத்துக்கக் கூடாதா?”

“ஒரு லிமிட்தான் சார். மூணு மாடி ஏறி வந்தது, மூச்சு படபடங்குது. தொட்டுப் பாரேன்னு கையை எடுத்து வச்சிக்குவா சார்.”

“இது யோசிக்க வேண்டிய விஷயம். வேற?”

“அவ்வளவு தான். இதையெல்லாம் வச்சி கேரக்டரை புரிஞ்சுக்க முடியாதா?”

“புரிஞ்சுக்கிட்டும் ஏன் ஃபிரெண்ட்ஷிப் வச்சிருந்திங்க?”

“புரிஞ்சுக்க ஆரம்பிச்சதும் குறைச்சுக்கிட்டேன்.”

“ஹாய் பாபு! யாரு கெஸ்ட்டு?”

“வெய்ட்! என்ன சொல்லிக் கூப்பிட்டிங்க இவரை?”

“ஏன்? பாபுன்னு கூப்பிட்டேன்.”

“என் பேரு சுபாஷ்தான். கூப்புடறது பாபுன்னு. இவன்தான் என் ரூம்மேட் பிரபாகர்.”

“மிஸ்டர் பாபு! என்கிட்டே நீங்க சொன்னதெல்லாம் பொய்.”

“இல்லையே....”

“உங்களுக்கும், மரியகீதாவுக்கும் இருந்தது நட்பு இல்லை காதல்.”

“அட! இல்லை சார்.”

“பின்னே ஏன் சார் உங்க பேரை மரியகீதா தன் பாத்ரூம்ல கூட கிறுக்கி வச்சிருக்கா? சொல்லுங்க?”

“.........”

“என்ன சார் மௌனமாய்ட்டிங்க?”

“ஆமாம். நாங்க ரெண்டு பேரும் காதலிச்சதும் உண்மை. இப்போ நான் உங்ககிட்டே சொன்னதும் உண்மை.”

“புரியலை”

“ரொம்ப நல்ல பொண்ணுன்னு நினைச்சி, அழகைப் பார்த்துட்டு நான் கொஞ்சம் தடுமாறிட்டேன். சேர்ந்து சுத்தினோம். பழகினோம். ஆனா பழக....பழக அவளோட ஒவ்வொரு குணமா வெளிப்பட்டுச்சி. எனக்குப் பிடிக்கலை. நான் கொஞ்சம் கொஞ்சமா விலகிட்டேன்.”

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: என். சாந்தகுமார்.
வயது: 22
முகவரி: 21, கலேவத்தை வீதி, கட்டுகஸ்தோட்டை.
பொழுது போக்கு: கிரிக்கெட்.



பெயர்: ஏ. சியாட் அஹமட்.
வயது: 19
முகவரி: 10, என்.எச்.எஸ். கெத்தாராம, மாளிகாவத்தை, கொழும்பு-10
பொழுதுபோக்கு: வானொலி.



பெயர்: கே. அரவிந்தன்.
வயது: 21
முகவரி: 49, MORDEN COURT MORDEN SURREY SM4-5 HN ENGLAND.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: ஆர். அனந்தா.
வயது: 17
முகவரி: பழுகாமம்-2, பெரிய போரதீவு, மட்டக்களப்பு.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: எம். நியாஸ்.
வயது: 17
முகவரி: 3, புதிய நகர், வெலிகந்த.
பொழுது போக்கு: பத்திரிகை.



பெயர்: அஹமட் ரபீ.
வயது: 22
முகவரி: P.O.BOX-456 K.F,I.A. DHA:31932, K.S.A.
பொழுதுபோக்கு: பேனா நட்பு, ரீ.வி.

பெயர்: ஏ. சதீஸ்.
வயது: 24
முகவரி: SCHULSTR-29, 5621 ZUFIKON, SWITZERLAND.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எஸ். நிசாந்தன்.
வயது: 16
முகவரி: 171, கந்தசுவாமி கோவில் வீதி, இறம்பைக்குளம், வவுனியா.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எஸ். பாபு.
வயது: 18
முகவரி: ஹியூகோலன்ட் தோட்டம், லூனுவத்தை.
பொழுது போக்கு: கிரிக்கெட், பத்திரிகை.

பெயர்: சி. மொஹிடீன்.
வயது: 19
முகவரி: 89, புத்தளம் வீதி, சிலாபம்.
பொழுது போக்கு: கிரிக்கெட், வானொலி.

பெயர்: ஆர். முபாரக்.
வயது: 20
முகவரி: அரை ஏக்கர், 7ம் வட்டாரம், கிண்ணியா.
பொழுது போக்கு: ரீ.வி., பத்திரிகை.

பெயர்: எச். முகம்மது யாஸீர்.
வயது: 18
முகவரி: 145, நியூ பஸார், பிரதான வீதி, கல்முனை.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.

www.padippakam.com

> "வறுமை, பசி, பிணி—தங்களது உழைப்புக்குப் பிரதியாக, மக்களுக்கு இவை தான் கிடைக்கின்றன. சகல விஷயங்களுமே நமக்கு எதிராக இயங்குகின்றன. நாம் பெறவேண்டிய இன்பத்தையும், நலன்களையும் மற்றவர்கள் அறுவடை செய்து அனுபவிக்கிறார்கள். ஒவ்வொன்றுக்கும் பயப்படுகிறோம். நமது வாழ்க்கையே விடியாத இருள் நிறைந்த இரவாகப் போய்விட்டது."
>
> —தாய்—

# தாய்

99

## மக்சீம் கார்க்கி

'அகப்பட்டு விட்டேனா?' என்று அவள் தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். ஒரு நிமிஷம் கழித்து அவள் தன்னுள் நடுங்கிக் கொண்டே அதற்குப் பதிலும் கூறிக் கொண்டாள்:

'இன்னும் அகப்படவில்லை.'

ஆனால் உடனேயே அவள் பெரு முயற்சி செய்து மீண்டும் தனக்குள் உறுதியோடு சொல்லிக் கொண்டாள்:

'அகப்பட்டு விட்டேன்!'

அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள்; ஆனால் எதுவும் அவள் கண்ணில் படவில்லை. அவள் மனத்தில் எத்தனையோ எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் பளிச்சிட்டுத் தோன்றின.

'இந்தத் தோல் பெட்டியை விட்டு விட்டு நழுவி விடலாமா?'

இந்த எண்ணத்தை மீறி இன்னொரு எண்ணம் பளிச்சிட்டது:

'என்னது? என் மகனது வாசகங்களை நிராகரித்து விட்டுச் செல்வதா? இவர்கள் போன்றவர்களிடம் விட்டு விட்டுச் செல்வதா?'

அவள் பெட்டியை இறுகப் பிடித்தாள்.

'இதையும் தூக்கிக் கொண்டே போய் விடலாமா? ஓடிவிடலாமா?'

இந்த எண்ணங்கள் எல்லாம் அவளுக்கு அன்னியமாய்த் தோன்றின. யாரோ வேண்டுமென்றே இந்த எண்ணங்களைத் தன் மனத்தில் திணிப்பது போல இருந்தது. அவை அவளது மனக் குகையிலே எரிந்து கனன்றன; ஊசி முனைகளைப் போல் அவளது நெஞ்சைத் துளைத்தன. அந்த வேதனையுணர்ச்சியால் அவள் தன்னை மறந்தாள்; தனக்கு அருமையான சகலவற்றையும், பாவெலையும் கூட மறந்தாள். ஏதோ ஒரு பகைச் சக்தி அவளது தோள்களையும் நெஞ்சையும் அழுத்திக் கொண்டு அவளை மரண பயத்துக்கு ஆளாக்குவது போலிருந்தது. அவளது நெற்றிப் பொருத்திலுள்ள இரத்தக் குழாய்கள் படபடத்துத் துடித்தன; அவளது மயிர்க்கால்களில் உஷ்ணம் பரவுவது மாதிரி இருந்தது. திடீரென்று அவள் பெருமுயற்சி செய்து தன் எண்ணங்களையெல்லாம் கேவலமானதாக, வலுவற்றதாகக் கருதி அவற்றை மிதித்து ஒதுக்கினாள். தனக்குத்தானே கம்பீரமாகச் சொல்லிக்கொண்டாள்;

'உனக்கு வெட்கமாயில்லை?'

இந்த எண்ணம் தோன்றியவுடனேயே அவள் தெளிவடைந்தாள். அவள் மனத்தில் தைரியம் குடிபுகுந்தது. தனக்குள் பேசிக்கொண்டாள்:

'உன் மகனை இழிவுபடுத்தாதே. இதற்குப் போய் யாராவது பயப்படுவார்களா?'

அவளது கண்களில் யாரோ ஒருவனின் சோகமான மங்கிய பார்வை பட்டது. அவளது மனத்தில் ரீபினின் முகம் தோன்றியது. சில கணநேரத் தயக்கத்துக்குப் பின்னர் அவளது உள்ளமும் உடலும் நிதானத்துக்கு வந்தன; இதயத்துடிப்பு சமனப்பட்டது.

'இப்போது என்ன நடக்கும்?' என்று அவள் சுற்று முற்றும் பார்த்தவாறே எண்ணிக் கொண்டாள்.

அந்த உளவாளி ஸ்டேஷன் காவல்காரனைக் கூப்பிட்டு அவனிடம் அவளைக் கண்ணால் சுட்டிக்காட்டி ஏதோ இரகசியமாகக் கேட்டான். அந்தக் காவலாளி அவளை ஏறிட்டுப் பார்த்துவிட்டுத் திரும்பிப்போனான்; இன்னொரு காவலாளி வந்தான். அவனிடமும் அவன் இரகசியம் பேசினான்; அதைக் கேட்ட அவன் முகத்தைச் சுழித்தான். அவன் ஒரு கிழவன். நரைத்த தலையும் கசவரம் செய்யாத முகமும் கொண்டவனாகத் தோன்றினான். அவன் அந்த உளவாளியை நோக்கித் தலையை ஆட்டிவிட்டு, தாய் அமர்ந்திருந்த பெஞ்சை நோக்கி வந்தான். அந்த உளவாளி அதற்குள் மறைந்து போய்விட்டான்.

அந்தக் காவலாளி நிதானமாக அவளிடம் வந்து அதிருப்தியுணர்ச்சியோடு தாயைப் பார்த்தான். அவள் பெஞ்சிலிருந்தவாறே குன்றிக் குறுகினாள்.

'இவர்கள் என்னை மட்டும் அடிக்காமலிருந்தால்!' என்று எண்ணினாள்.

அவன் அவள் முன் நின்றான். ஒரு நிமிஷம் பேசாது நின்றான்; கடுமையாகச் சொன்னான்:

"நீ என்ன பார்க்கிறாய்?"

"ஒன்றுமில்லை."

"அப்படியா? திருடி! இந்த வயசிலுமா திருட்டுப்புத்தி?"



அந்த வார்த்தைகள் அவளது முகத்தில் ஓங்கியறைந்தன. ஒரு முறை-இரு முறை! அந்தக் குரோதத் தாக்குதல் அவளது தாடையையே பெயர்த்து, கண்களைப் பிதுங்கச் செய்வது மாதிரி வேதனையளித்தது.

"நானா? நான் ஒன்றும் திருடியில்லை. பொய் சொல்கிறாய்!" என்று தன்னால் ஆனமட்டும் உரத்த குரலில் கத்தினாள் அவள். அவமானத்தின் கசப்பாலும், கோப வெறியின் சூறாவளியாலும் அவளது சர்வ நாடியுமே கதிகலங்கிப் போயின. அவள் தோல் பெட்டியை உலுக்கித் திறந்தாள்.

"பாருங்கள்! எல்லோரும் பாருங்கள்!" என்று கத்திக்கொண்டே அவள் துள்ளியெழுந்தாள். அவளது கைகளில் ஒரு கத்தைப் பிரதிகளை எடுத்துக்கொண்டு தலைக்கு மேலே உயர்த்தி ஆட்டிக் காட்டினாள். அவளை நோக்கி நாலாதிசைகளிலிருந்தும் ஓடிவரும் ஜனங்களின் பேச்சுக் குரல் அவளது காதின் இரைச்சலையும் மீறிக் கேட்டது.

"என்ன நடந்தது?"

"அதோ அங்கே-ஓர் உளவாளி."

"என்ன அது?"

"இவளை அவர்கள் திருடியென்கிறார்கள்."

"பார்த்தாலே கண்ணியமானவளாய்த் தெரிகிறதே. இவளையா? ச்சூ! ச்சூ!"

"நான் திருடியல்ல" என்று உரத்த குரலில் சத்தமிட்டாள் தாய்; தன்னைச் சுற்றிச் சூழ்ந்த சனக்கூட்டத்தைக் கண்டு அவளுக்கு ஓரளவு அமைதி ஏற்பட்டது.

"நேற்று அரசியல் குற்றவாளிகள் சிலரை விசாரணை செய்தார்கள். அந்தக் குற்றவாளிகளில் என் மகனும் ஒருவன். அவன் பெயர் விலாசவ். அவன் அங்கு ஒரு பிரசங்கம் செய்தான். இது தான் அந்தப் பேச்சு! அதை நான் மக்களிடம் வழங்கப் போகிறேன். அவர்கள் இதைப் படிக்கட்டும். உண்மையைத் தெரிந்து கொள்ளட்டும்..."

யாரோ மிகுந்த ஜாக்கிரதையோடு அவள் கையிலிருந்து ஒரு பிரதியை உருவிப் பிடுங்கினார்கள். அவள் அவற்றை மேலே உயர்த்தி ஆட்டிக் கொண்டே, ஜனக் கூட்டத்தில் விட்டெறிந்தாள்.

"இதற்கு உனக்குச் சரியான தண்டனை கிடைக்கும்" என்று யாரோ, கூட்டத்திலிருந்து பயந்த குரலில் சத்தமிட்டார்கள்.

ஜனங்கள் அந்தப் பிரதிகளைப் பாய்ந்து பாய்ந்து பிடித்துத் தமது கோட்டுகளுக்குள்ளும் பாக்கெட்டுகளுக்குள்ளும் மறைத்துக் கொள்வதைக் கண்டாள். இதைக் கண்டவுடன் அவளுக்கு மீண்டும் உறுதி பிறந்தது; அசையாமல் நின்றாள். அவள் அமைதியோடு அழுத்தத்தோடு பேசினாள்; அவளது இதயத்தினுள்ளே ஓங்கி வளரும் இன்பத்தையும் பெருமிதத்தையும் உணர்ந்தாள். பேசிக் கொண்டே, பெட்டியிலிருந்து அந்தப் பிரதிகளை வாரியெடுத்து அங்குமிங்கும் கைகளை நீட்டிப் பிடிப்பதற்காகத் துடிதுடித்துக் கொண்டிருக்கும் ஜனக்கூட்டத்தை நோக்கி விட்டெறிந்தாள்.

"என் மகனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் ஏன் விசாரணைக்குக் கொண்டு வந்தார்கள் தெரியுமா? நான் உங்களுக்குச் சொல்கிறேன். ஒரு தாயின் இதயத்தை, என்போன்ற ஒரு கிழவியின் பேச்சை நீங்கள் நம்ப முடியும் அல்லவா? அவர்களை விசாரணைக்குக் கொண்டுவந்தது ஏன்? எல்லோருக்கும் அவர்கள் உண்மையை எடுத்துக் கூறியதற்காகத்தான். அந்த உண்மையை மறுத்துப் பேச ஒருவன் கூட இல்லை என்று நேற்று நான் உணர்ந்தேன்."

கூட்டம் அவளைச் சுற்றி அமைதியோடு பெருகியது. வட்டமிட்டுச் சூழ்ந்து நின்றது.

"வறுமை, பசி, பிணி-தங்களது உழைப்புக்குப் பிரதியாக, மக்களுக்கு இவைதான் கிடைக்கின்றன. சகல விஷயங்களுமே நமக்கு எதிராக இயங்குகின்றன. நமது வாழ்நாளெல்லாம், ஒவ்வொரு நாளும், நமது கடைசி மூச்சுவரை, இறுதி பலத்தையும் நமது உழைப்புக்காக அர்ப்பணம் செய்வதால் எப்போதும் நாம் அழுக்கடைந்து அவர்களால் ஏமாற்றவும் படுகிறோம். நாம் பெற வேண்டிய இன்பத்தையும், நலன்களையும் மற்றவர்கள் அறுவடை செய்து அனுபவிக்கிறார்கள். சங்கிலியால் கட்டிப் போடப்பட்ட நாய் மாதிரி நம்மை அவர்கள் அறியாமையில் ஆழ்த்தியுள்ளார்கள்-நமக்கு எதுவுமே தெரிவதில்லை. ஒவ்வொன்றுக்கும் பயப்படுகிறோம்-நாம் எதையும் தெரிந்து கொள்ளவே அஞ்சுகிறோம். நமது வாழ்க்கையே விடியாத இருள் நிறைந்த இரவாகப் போய்விட்டது!"

"சரிதான்!" என்று ஒரு மங்கிய குரல் எதிரொலித்தது.

"அவளது வாயை மூடு!"

கூட்டத்துக்குப் பின்னால் அந்த உளவாளியும் இரண்டு பொலிஸ்காரர்களும் வருவதைத் தாய் கண்டுவிட்டாள். அவள் அவசர அவசரமாக மிஞ்சியிருந்த பிரதிகளை விநியோகிக்க முனைந்தாள். ஆனால் அவளது கை தோல் பெட்டியைத் தொட்டபோது, அவளது கையோடு யாரோ ஒருவனின் கையும் மோதியது.

(தொடர்ந்து வரும்)


முரசில் வருகிறது

தூக்கு மேடைக் குறிப்பு

ஒரு போராளியின்
பூகம்ப வாழ்க்கை
வீரம்-தியாகம்-காதல்
மூன்றும் கலந்து
வாரா வாரம்
உங்கள் இதயத்தைத்
தொடப்போகும்
உணர்ச்சியான தொடர்

178வது முரசில் ஆரம்பம்




# பயணம்

## மானுடபுத்ரன்



"மோனை சிவராசு! உதிலை கொஞ்சம் 'கற்பகம்' வரைக்கும் போட்டு வா மோனை!"

"குஞ்சியப்பு இண்டையோடை முப்பத்தெட்டாவது நாள். போறதெண்டால் கொஞ்ச நஞ்சதூரமே.? என்ன செய்யுறது?" சிவராசன் சில்லறையைத் தேடினான். மேசை லாச்சியில் இல்லை. மெசின் லாச்சியில் பதின்மூண்டு ரூபா ஐம்பது சதம் கிடந்தது. எடுத்து களிசான் பொக்கட்டில் போட்டுக் கொண்டான்.

'போறதுக்குச் சரி. வாறதுக்கு...? பாப்பம்.' மனது நினைத்துக் கொண்டது. சிவஞானத்தார் ஈஸிச் செயாரில் சாய்ந்து கொண்டார்.

'என்ன கோதாரிக்கு இஞ்சை வந்தம் எண்டு கிடக்கு. எப்ப ஊரோடை போறது. எப்ப நிம்மதியாய் இருக்கிறது' சிவஞானத்தாருக்கு இதுதான் இரவு பகலாக யோசனை. எக்கணம் மனிசி வள்ளியம்மை என்ன செய்வாளோ. ஊரிலை பேரப்பிள்ளையள் என்ன செய்யுதுகளோ. வீடுவளவு என்ன பாடோ?

'முந்தியெண்டால் 'பிள்ளை யாரிலை' காலை ஆறு மணிக்கு ஏறினால் கடவுளே எண்டு ஒரு குறையுமில்லை யெண்டால் மூண்டு மூண்டே முக்காலுக் கெல்லாம் யாழ்ப்பாணம் பஸ் ஸ்ராண்டிலை கொண்டு போய் அடிச்சிடுவான்.

யாழ்ப்பாணம் செல்ல அனுமதி பெறுவதற்குள் எத்தனை விசாரணைகள். எத்தனை கேள்விகள்.' நினைத்துப் பார்த்தார் சிவஞானத்தார்.

"என்ன பெயர்?"

"சிவஞானம் ஐயா"

"வயது?"

"அறுபத்தைஞ்சு."

"என்ன அறுபத்தைஞ்சோ...அப்பிடி எண்டால் புலியார்தான் உம்மை இஞ்சை அனுப்பி வைச்சிருப்பினம்- போறவயதிலை ஏதாவது செய்துவிட்டுப் போகட்டும் எண்டு."

"ஐயா இஞ்சை பேரப்பிள்ளையள் இருக்கினம்." எல்லா தஸ்தாவேஜுக்களும் அவருக்கு முன்னால் அழாக்குறையாக வைத்தார் சிவஞானம்.

"சரி நீர் போகலாம்." கேள்விக்கு மேல் கேள்வி. அவஸ்த்தைக்கு மேல் அவஸ்த்தைப் பட்டவருக்கு அவன் "போகலாம்" என்று சொன்னது ஆறுதலாக இருந்தது. ஒரு மாதம் கழிந்து விட்டது.

எத்தனை முறை ஏறி இறங்கியாச்சு.

"இனி வரவேண்டாம் நாங்கள் கடிதம் அனுப்புவம். எங்களுக்குத் தெரியும் ஆரை அனுப்புறது ஆரை விடுறது எண்டு."

பலமுறை போய்கேட்டதன் பின்னால் அந்த அலுவலகத்தில் இருந்தவனின் பதில் இப்படி வந்தது.

இப்ப புதியதொரு செய்தி. அப்பிடி ஆராகிலும் போறதுக்கு தெரிவு செய்தால் அவையின்ரை பேர் "கற்பகம்" நோட்டீஸ் போட்டிலை வருமாம். அங்கை போறதிலும் பாக்க உது லேசு.

சிவஞானத்தாருக்கு "மண்டான்" சுருட்டு இல்லாமல் வாயெல்லாம் புளிச்சுப் போச்சுது. எந்தக் கடையிலை போய் என்ன சுருட்டைப் பத்தினாலும் மண்டான் இல்லாட்டில்.... அதை அடிக்க ஒண்டு மில்லை.

உச்சி வெயில் எறிக்கிறது. கொழும்புப் புழுக்கம். அவியுது மேலெல்லாம்.

ஊரிலை எண்டால் முற்றத்து வேப்ப மரத்துக்குக் கீழே சாக்குக் கட்டிலைக் கொண்டு வந்து போட்டிருந்தால் என்ன சுகம்.

சிவராசன் வியர்க்க விறுவிறுக்க வந்து கொண்டிருந்தான். "குஞ்சியப்பு.... உங்கடை பேர் விலாசத்தோடை "கற்பகம்" போட்டிலை போட்டிருக்கு. பதினோராம் திகதி பிளைட்டாம்."

கடவுளே..... இப்பவாவது வந்திருக்கே....சிவஞானத்தார் பட்ட கஷ்டம் அவருக்குத்தான் வெளிச்சம். ஏதோ உதிலை இருக்கிற யாழ்ப்பாணத்தை இன்னொரு நாடாக்கிப் போட்டான்கள். அவ்வளவு உத்தரிப்பு!

ஆனால் அனுமதி கிடைத்த மகிழ்ச்சி.

★★★

"அப்பு ஏதாச்சம் வாங்கிக்கொண்டு போவனெணை" தேவி சொன்னாள்.

"புள்ளை இஞ்சையிருந்து என்னத்தைத்தான் கொண்டு போறது? இடையிலை நடக்கிற செக்கிங்கிலை கொண்டு போக வேண்டாம் எண்டால் அவன்களுக்கு எல்லாத்தையும் தானம் பண்ணிட்டெல்லே போக வேணும்?"

தேவி, சிவராசனை விட்டு சன்லைட் ஒரு டசின், லக்ஸ் ஒரு டசின், பனடோல் நூறு, டிஸ்பிரின் நூறு இப்படி பாரமில்லாத மிகவும் தேவையான பொருட்களாய் வாங்கி பார்சல் பண்ணினாள்.

"அங்கை எதுதான் தேவையில்லை. எல்லாம் தேவைதான்- எல்லாமே அத்தியாவசிய தேவைதான். ஆனால்.... எப்பிடிக் கொண்டு போறது? மனிசருக்கு தேவைப்பட்டதைக் கொண்டு போனாலும் புலியளுக்கு கொண்டு போறியள் எண்டு பறிச்செடுத்துவிடுவான்கள்" சிவஞானத்தார் சலித்துக் கொண்டார்.

விமானப்பயணச் சீட்டு, கொழும்பில் தங்கியிருந்ததற்கான ஆதாரப் பத்திரம், பொலிஸ் றிப்போட், ஆமிச்செக்கிங் பாஸ், பிறப்புப் பத்திரம், பென்சன் பத்திரம், அடையாள அட்டை சகிதம் தனது துணிப்பையைத் தோளில் போட்டுக் கொண்டு ஒரு 'மாரி'ப் பெட்டி சாமான்களையும் எடுத்துக் கொண்டு சிவராசனோடு கூட சிவஞானத்தார் இரத்மலானையை நோக்கிப் பயணமாகிறார்.

"எப்படி ஊர் போய்ச் சேருவனோ?"

பெருமூச்சொன்று அவரை முந்தி வெளிப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

**திடீரென்று ஒருநாள் அரவிந்தனிடமிருந்து வந்த கவருக்குள் இருந்து ஒரு புகைப்படம் வெளியே வந்தது. அவன் வெள்ளைக்காரியை திருமணம் செய்துகொண்டான் என்பதை...**

# மகன்



ரூபராணி

தெருவோரமாக இருந்த அந்தச் சிறிய அறையில் வாகீசன் சக்கரநாற்காலி ஒன்றில் அமர்ந்திருந்தார். அங்கு நிலவிய நிசப்தத்தைத் தெருவில் போன வாகனங்கள் கலைத்துக் கொண்டிருந்தன.

வாகீசனுக்கு ஒரு கையும் காலும் வழங்காது. அவருடைய இடுங்கிய கண்கள் யன்னலின் ஊடாகத் தெருவில் வருவோர் போவோரை நோட்டமிட்டவாறு இருந்தன. தெரிந்தவர்கள் தன்னை அடையாளங்கண்டு பேசமாட்டார்களா என்ற ஆவல் வாகீசனுக்குத் தினசரி வருவது தவிர்க்கமுடியாதது. அவர் அருகேயிருந்த ரீப்போவில் வெளிநாட்டிலிருந்து வந்த வாழ்த்தட்டைகள் சில வரிசையாக உட்கார்ந்திருந்தன.

சற்றுமே எதிர்பாராத வேளை வைரமுத்து பிரசாதத் தட்டுடன் உள்ளே வந்தான். அவனுடைய முகத்தில் மகிழ்ச்சி மல்லிகைப் பூவாய் பரவிக்கிடந்தது. "ஹப்பி பேத்டே ஐயா" என்றவன் வாகீசனை அணைத்து முத்தமிட்டான். அவருக்கு எண்பதுவயது பூர்த்தியாகிவிட்டது. வைரமுத்து கொண்டு வந்த பிரசாதத் தட்டிலிருந்த விபூதியை வாகீசனின் நெற்றியில் இட்டான். பொங்கலையும் கொஞ்சம் கொஞ்சமாக அவர் வாயில் ஊட்டினான். "ஐயா, உங்களுக்காகக் காலையில் கதிரேசன் கோயில்ல அர்ச்சன பண்ணினன். நீங்க நல்லாருப்பீங்க!" வைரமுத்துவின் நாக்குத் தளதளத்தது.

வாகீசன் தன் ஒருகையால் குழந்தையைப்போல் வைரமுத்துவை தன் மடியில் சாய்த்தார். அவன் முகத்திலும் கன்னத்திலும் நெற்றியிலும் மாறி மாறி முத்தமிட்டார். அவருடைய கண்ணீர் வைரமுத்துவின் கன்னத்தை நனைத்தது. அவன் அருகில் இருந்த கைக்குட்டையால் வாகீசனின் முகத்தை அழுந்தத் துடைத்தான்.

"கொஞ்சம் பொறுங்கோ ஐயா; உங்களுக்குப் புடிச்ச சமையலை நொடியில செய்திட்டு ஓடிவாறன்," என்றவன் வாகீசனைச் சக்கர நாற்காலியில் இருந்து அலாக்காகத் தூக்கிக் கட்டிலில் கிடத்தினான். அவருக்கு வசதியாக இரண்டு தலையணைகளை தலைக்கடியில் வைத்துவிட்டுச் சென்றான். வாகீசன் வைரமுத்து சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்த நாள் ஞாபகம் அவர் நெஞ்சைத் தொட்டது.

—★□□★—

வாகீசன் ஒரு ஓய்வு பெற்ற அதிபர். பிரபல்யம் வாய்ந்த கல்லூரி ஒன்றுக்கு அதிபராக விருந்தவர். வாகீசன் பிறின்சிப்பல் என்றால் கடுமையும், கருணையும், கடமையும் தான் நினைவுக்கு வரும். அவர் செய்வதைத் தான் சொல்வார். அவருடைய பார்வை மாணவரை அப்படியே கட்டிப் போடும் சக்தி வாய்ந்தது.

அவருடைய மனைவி திலகவதி, ஐந்து வயது மகனையும் வாகீசனையும் தவிக்க விட்டுத் தெரு விபத்தொன்றில் இறந்து போனாள்.

வாகீசன் பள்ளியா, வீடா என்று போராடியபோது, ஆஜானுபாகுவான தோற்றமுடைய அவரை மறுமணம் செய்யும் படி ஆலோசனை சொன்னார்கள் பலர். வற்புறுத்தினார்கள் சிலர். தான் கடைசிவரை ஏகபத்தினி விரதனாக இருக்கப்போவதாக அடித்துக் கூறினார் வாகீசன். அதன் பிறகு எல்லோரும் அவர் பாடென்று விலகிப் போயினர்.

இந்தச் சமயத்தில் அவரிடம் வேலை கேட்டு வந்தவன்தான் வைரமுத்து. வாகீசன் முன்பின் யோசியாதவராய் வீட்டுப்பொறுப்புக்களையும் தன் மகன் அரவிந்தனையும் அவனிடம் ஒப்படைத்தார். வைரமுத்துவுக்கு வயசு இருபத்தைந்துக்கு மேற்படாது. கறுத்த உடம்பு. வாட்டசாட்டமாயிருந்தான். வாகீசன் தனக்கு வசதியாய் அவன் பெயரை 'முத்து' என்று சுருக்கிக் கொண்டார்.

"முத்து! என் தொழில் எப்படிப்பட்டது என்று உனக்குத் தெரியாமல் இருக்கலாம். என் கடமை பள்ளிக்கூடத்தோடு மட்டுமல்ல; ஒரு சமூகத்தோடும் சம்பந்தப்பட்டது. நான் மனச்சாட்சிப்படி நடந்து கொள்ள எனக்கு நீ மகனாய் இருந்தால் போதும். இந்த ஐந்து வயதுச் சிறுவனுக்கும் நீ அண்ணனாயிருந்து உதவ வேண்டும். செய்வாயா?" என்றார்.

படிப்பதிகம் இல்லாத முத்துவுக்கு வாகீசனின் வார்த்தைகள் புரிந்தும் புரியாமலும் இருந்தன. ஆனாலும் "சரி ஐயா" என்று தலையசைத்தான் பவ்யமாக.

காலப்போக்கில் முத்து வாகீசனின் மகனாகவே மாறிப் போனான். அவன் பள்ளியில் படிக்காத பாடங்களை வாகீசனிடமிருந்து கற்றுக்கொண்டான். தனக்குத் திருமணம் வேண்டாம் என்று பிடிவாதமாயிருந்தான். அடுப்பங்கரையில் இருந்து படுக்கை அறை வரை எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டான்.

அரவிந்தன் வளர்ந்து பட்டப்படிப்பை முடித்துக்கொண்ட சமயம் வாகீசனுக்கு ஒரு கையும் காலும் வழங்கமுடியாமல் இழுத்துக் கொண்டது. அரவிந்தன் மேற்படிப்புக்காகக் கனடா சென்று விட்டான். ஆரம்பத்தில் அவனிடமிருந்து கடிதங்களும் வாழ்த்துக்களும் தவறாமல் வந்தன.

வருடங்கள் பறந்தன. வாகீசனுக்கும் அவர் மகனுக்கும் எந்தவித தொடர்புமில்லாமல் போய்விட்டது.

திடீரென்று ஒரு நாள் அரவிந்தனிடமிருந்து வந்த கவருக்குள்ளிருந்து ஒரு புகைப்படம் வெளியே வந்தது. மகன் ஒரு வெள்ளைக்காரியைத் திருமணம் செய்து கொண்டான் என்பதை வாகீசன் அறிந்து கொண்டார், அவரால் சிரிக்கத்தான் முடிந்தது. அந்தச் சிரிப்புக்கு அர்த்தம் முத்துவால் கண்டுபிடிக்கமுடியவில்லை.

வாகீசன் தான் பெற்ற மகனையும் முத்துவையும் தன் மனத்தராசில் எடை போட்டுப்பார்த்தார். பெற்றால்தான் பிள்ளையா? 'எங்கிருந்தோவந்தான்' என்ற பாடல் அவர் நினைவுக்கு வந்தது.

சொந்தபந்தமில்லாத முத்து...

படிப்பறிவில்லாத முத்து...

நாகரிகம் இல்லாத முத்து

வாகீசன் மனதில் தெய்வமாய்த் தெரிந்தான்.

'அன்புகாட்டப் படிப்புத் தேவையா?

தொண்டுசெய்யப் பட்டம் வேண்டுமா?

பெற்றதனால் மட்டும் பிள்ளையாக முடியுமா?'

வாகீசன் மனதில் எழுந்த வினாக்கள் ஆச்சரியமாக மாறின.

—●●—

அன்று நள்ளிரவில் வாகீசனுக்குக் கடுமையான மார்புவலி கண்டது. முத்து பதறிப்போனான். அடுத்த வீட்டில் உள்ள குடும்ப நண்பர் ஒரு சட்டத்தரணி. அவரின் உதவியை நாடினான். வைத்தியர் உடனடியாக வரவழைக்கப்பட்டார். ஆனாலும் பயனளிக்கவில்லை. முத்துவின் கைகளைப் பற்றிய படியே அவர் உயிர்பிரிந்துவிட்டது. முத்துவின் கதறல் கல்நெஞ்சையும் கசியவைத்திருக்கும். அரவிந்தனுக்குச் செய்தி பறந்தது. முத்து வாகீசனின் பென்ஷனில் சிறுகச் சிறுகச் சேர்த்த பணத்தைச் சட்டத்தரணியிடம் கொடுத்து "ஐயாவுக்குச் செய்யவேண்டியதச் செய்யுங்க," என்றான் கண்ணீர் மல்க. அவருடைய பார்வையில் முத்து இமயமாக உயர்ந்தான். மூன்று மாதங்களுக்கு முன்னால், முத்துவுக்குத் தெரியாமல் வாகீசன் தன் வீட்டு உயிலை அவனுக்கு எழுதித் தன்னிடம் ஒப்படைத்ததை எண்ணி ஒருகணம் மெய்சிலிர்த்துப் போனார் சட்டத்தரணி.

கனடாவில் இருந்து அரவிந்தன் வந்து சேர்ந்தான். சைவ முறைப்படி சகல கிரியைகளையும் வெகு ஆடம்பரமாகச் செய்தான். ஐயர் மந்திரம் ஓதி... "வாய்க்கரிசி போட மகன் வாங்கோ" என்றார். அரவிந்தன் கம்பீரமாக எழுந்து சென்றான்.

முத்துவின் விம்மல் ஒலி.... வீட்டை நிறைத்தது.

# மன மாற்றம்

பொத்துவில் சிபி

மேசையில் கிடந்த 'தினமுரசு' பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தபோது, பக்கத்து அறையில் அம்மா அழுதுகொண்டிருப்பது கேட்டது. ஆனால் நிவேதா அதனை பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. கடந்த சில மாதங்களாக இது அவளின் வாடிக்கை என்பது நிவேதாவுக்குத் தெரியும். அம்மாவின் இந்த நிலைக்கு தான் தான் காரணம் என்பதை நினைக்கும் போது அவளுக்குச் சங்கடமாக இருந்தது. அவள் தாய்ப்பாசத்தால்தான் நிவேதாவை எண்ணி அழுகிறாள் என்பதைவிட, நிவேதாவின் கல்யாணம் முடிந்து தன் மடியை விட்டும் ஒரு சுமை இறங்கிவிடவில்லையே என்ற கவலை அவளுக்கு!

ஓய்வு பெற்ற ஆசிரியரான நிவேதாவின் அப்பா தனது சிறிய வருமானத்தால் குடும்பத்தை கட்டிக்காக்க முடியாமல் தடுமாறினார். ஆனால் எல்லோரும் 'சோமசுந்தரம் வாத்தியாரா.....? நல்ல மனுஷனாச்சே அவர்...!' என்று சொல்லும் அளவுக்கு கண்ணியமாக இருந்தார். நிவேதா உயர்தரம் வரை படித்துவிட்டு பரீட்சையில் பல்கலைக் கழகம் நுழையுமளவுக்கு சித்திபெறாததனால் வீட்டிலிருந்தாள்.

அப்பா பலமுறை வற்புறுத்தியும் மீண்டும் பரீட்சை எழுத மறுத்து, இறுதியில் ஆசிரியர் போட்டிப் பரீட்சை எழுதி அதிலும் தேர்வாகாமல் இருந்தாள். பரீட்சை முடிவை வைத்து தொழில் எடுத்து விடலாமா என்ன? அதற்குப் பணமும், அரசியல் பலமும் அல்லவா வேண்டும்? இந்த இரண்டு வசதியிலும் அவளுடைய அப்பா குறைந்தவராக இருந்தார். தான் ஏதாவது தொழில் செய்தால், அதன் மூலம் கிடைக்கும் வருமானமாவது குடும்பச் செலவை சரிக்கட்ட அப்பாவுக்கு உதவியாக இருக்கும் என்று எண்ணி, தன் வீட்டிலேயே சிறிய ஆங்கில டியூசன் வகுப்பு ஒன்றை ஆரம்பித்து நடத்தி வந்தாள். இதனால் அவளாலும் நாலு காசு சம்பாதிக்கக்கூடியதாக இருந்தது.

ஒருவேளை நிவேதாவின் அண்ணன் இருந்திருந்தால்கூட குடும்பம் இவ்வளவு கஷ்ட நிலைக்குப் போயிருக்காது. அவனை 'சந்தேகத்தின் பேரில்' என்று கூறி இராணுவத்தினர் கைது செய்து கொண்டு சென்று நாலுவருடமாகிவிட்டது. ஆனால் இன்னமும் அவனைப் பற்றித் தகவல்கள் இல்லை. அதனால் அவனைப் பற்றி சிந்திப்பதால் பயனும் இல்லை. நிவேதாவுக்கு இரண்டு தங்கைகள். இருவரும் படிக்கின்றனர். அவளில் ஒருத்தி ஒரு வருடத்திற்கு முன்னர் 'வயதுக்கு' வந்ததிலிருந்து, நிவேதாவின் அப்பா நிம்மதியாய் தூங்கியதும் இல்லை. "ஒன்றுக்கு இரண்டாக நெருப்பை மடியில் கட்டிக்கொண்டு இருக்க ஏலாது.... இவளுக்கு ஒரு நல்ல இடத்து மாப்பிள்ளையாகப் பார்த்து கல்யாணத்த முடிச்சு வச்சிடணும்" என்று அடிக்கடி கூறிக்கொண்டிருந்தார்.



நிவேதா உயர்தரம் படிக்கும்போதுதான் சதீஷின் அறிமுகம் கிடைத்தது. இருவரும் சாதாரணமாகத்தான் பழகினார்கள். ஆனால் நாட்கள் நகர நகர தன் எண்ணத்தை வெளிப்படுத்தினான் சதீஷ். அவன் நிவேதாவைக் காதலிப்பதாகக் கூறியும் அதை ஏற்க மறுத்தாள் அவள். நிவேதா தன் குடும்ப நிலவரத்தைக் காரணம் காட்டி, காதல் என்பது தனக்கு அப்பாற்பட்ட விவகாரம் என சதீஷிடம் கூறினாள். இருப்பினும் அவனிடம் வெறுப்போ, கோபமோ கொள்ளாதவளாக அவள் நடந்து கொண்டாள். இறுதியில் காலம் தீர்ப்பளித்தது– நிவேதா, சதீஷின் காதலை ஏற்றுக் கொண்டாள்.

சதீஷ் பட்டம் பெற்று பல்கலைக்கழகத்தை விட்டும் வெளியாகி ஒரு கம்பனியில் வேலையும் பார்க்கத் தொடங்கி விட்டான். அவனை வரன் பேசி பணக்காரர்கள் படையெடுப்பதும், அவனுடைய அப்பா அவனை நல்ல 'பசை' உள்ள இடமாகப் பார்த்து 'ஒட்டவைக்க' முயற்சிப்பதும் நிவேதாவின் காதுகளில் எட்டியது. நிவேதா சதீஷை சந்திக்கச் சென்றாள். அவள் கடற்கரைக்கோ, பார்க்கிற்கோ அவனோடு சென்றதில்லை. அதனால் வழமையாக அவனை சந்திக்கும் தனது நண்பியின் வீட்டிற்குச் சென்றாள். அங்கு சதீஷும் வந்திருந்தான்.

முன்பிருந்ததை விட சற்றுக் கொழுத்திருந்தான். வழமையான புன்னகை அவன் முகத்தில் தெரியவில்லை. ஏதோ வேண்டாத பொருளைப் பார்ப்பதைப்போல் நிவேதாவைப் பார்த்தான். நிவேதாவின் புன்னகையை அவன் கவனித்ததாகவும் தெரியவில்லை. முதன்முதலாக நிவேதாவின் அடிமனதிற்குள் அச்சம் பிடித்துக் கொண்டது.

முன்னர் சந்தித்தால், தன் முகத்தையே பார்த்துக்கொண்டிருப்பான்; ஆனால் இன்று ஏன் இப்படி நடந்து கொள்கிறான் என்ற கேள்வி அவளின் மனதில் உதித்தது! முதலில் அவளே பேசினாள்: "சுகமா இருக்கீங்களா....?" என்றாள். "சுகத்துக்கு ஒண்ணும் குறைச்சலில்ல.... நீ பேச வந்த விசயத்தை

**முன்பிருந்ததைவிட ❤❤ சற்றுக் கொழுத்திருந்தான். முகத்தில் புன்னகை இல்லை. ஏதோ வேண்டாதபொருளை பார்ப்பதுபோலப் பார்த்தான்.**

சொல்லு...." என்றான் அவன்.

முதன் முதலில் அவள் இதயத்தில் இடி விழுந்தது. "அது.... வந்து.... வந்து.... நம்ம கல்யாண விசயம்தான்..." என்றாள். ஏதோ கெட்ட பேச்சைக் கேட்டது போல சீறினான் சதீஷ். நிவேதாவுக்கு இதயத்துடிப்பு எண்பதைத் தாண்டிக் கொண்டிருந்தது.

"இதப்பாரு நிவேதா.....நான் இப்பகூட உன்னில கோபமோ, ஆத்திரமோ கொள்ளல... நாம் சின்ன வயசுல வந்த ஆசையால காதலிச்சுட்டோம். அப்போ நான் கல்யாணம் பண்ணிக்கிறதாகூட உனக்கு வாக்குத் தந்தேன்.... உண்மைதான். ஆனால் வாழ்க்கையோட அர்த்தம் தெரியாத பருவத்தில, நாம் செய்துகொண்ட முடிவு அது.... அது தப்பு நிவேதா..... தப்பு! வாழ்க்கையில வாய்ப்புக்கள், வசதிகள் வரும்போது அவற்றைப் பயன்படுத்திக்கணும்..... இப்போ..... என்னைத் தேடி எத்தனையோ பணக்காரங்க என் வாசலுக்கு வாறாங்க..... நிவே..... லீவ் மீ ப்ளீஸ்.... என் அப்பாக்கிட்ட ஒருமுறை உன்னப்பத்தி சொல்லிப்பார்த்தேன்..... அவர் கூட மறுத்திட்டார்.....அவர் என்னை ஒரு பணக்கார எடத்தில கல்யாணம் கட்டிக்கச் சொல்லிட்டார்..... என்னால அத மீற முடியாது..... சோ....நீயும் உனக்கு தகுந்த மாதிரி ஒருத்தனைப் பார்த்து கல்யாணம் பண்ணிக்க..... இட்ஸ் சிம்பிள்.....டேக் இட் ஈஸி...!" மூச்சுவிடாமல் சதீஷ் பேசி முடித்தான்.

நிவேதாவுக்குள் ஆயிரம் இடிகள் இடித்தன. தலை சுற்றுவது போலிருந்தது. தன்னை சுதாகரித்துக் கொண்டவளாய், "உங்க அப்பாவின்ர அனுமதி எடுத்தா என்னை காதலிச்சீங்க...?" என்று கேட்டாள்.

"நோ... காதல் வயசுக்கோளாறு. அது அப்பாவ கேட்டிட்டு வராது..... தானா முளைக்கும்....ஆனால்- அதை ஆழமா வேர்விட விடக்கூடாது!" என்றான். இனியும் இவனுடன் பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்று உணர்ந்தாள்.

"உங்க காதலுக்கு ரொம்ப நன்றிங்க.... நல்ல பணக்கார எடத்தில கல்யாணம் முடித்து வசதியா வாழுங்க.... நான் வரேன்.....!" கூறிவிட்டு மளமளவென்று வீட்டிற்கு திரும்பினாள். அவள் கண்களில் அல்ல.....அவள் மனதுக்குள் கண்ணீர் பீறிட்டது....மனதை கஷ்டப்பட்டுத் திடப்படுத்தினாள். அவள் என்ன பாவம் செய்தாள்? அவள் ஏன் அழவேண்டும்?

அம்மாவின் அழுகை சற்று அதிகமாகவே, தினமுரசு பத்திரிகையை மேசையில் வைத்து விட்டு, அம்மாவிடம் சென்றாள். "அம்மா.....இதப்பாரு.... எனக்கு கல்யாணம் ஆகணும்; அவ்வளவுதானே....? இதற்கு நீ ஏன் அழுற...? எனக்கென்று எவனாவது இந்த பூமியில பொறக்காம இருந்திருப்பானா...?" என்றாள் ஆவேசமாக நிவேதா. அவள் அடி நெஞ்சிலிருந்து ஒரு பெருமூச்சு வெளியாகி காற்றோடு கலந்தது.

# நிறம் மாறிய பால்

ஜெயமணி

நடந்த அனர்த்தங்களை மறந்து தூங்குவதற்கு முயற்சிக்கிறேன். குழந்தையின் சிணுங்கல் சத்தம் கேட்கிறது. அருகில் தூங்கிக்கொண்டிருந்த அக்கா விழித்துக் கொண்டாள்.

எழுந்து கவரோடு சாய்ந்தவள், அவனை மார்புக்கு விடுகிறாள்.

'ப்பூச்.. ப்பூச்' சத்தம் குழந்தை ஆனந்தமாக பால் குடிப்பதை உணர்த்துகிறது.

மீளவும் கண்களை மூடி தூக்கத்தை வருவிக்க முயலுகிறேன். அந்த விட்டு விட்டு கேட்கும் சின்ன இதழ்களின் தாளகதியான ஓசை எனக்குள்ளே ஒரு ஏக்கத்தை தொடுகிறது.

அன்னையின் அணைப்புக்குள், முந்தானைக்குள் முழு உலகையும் வெற்றி கொள்ளும் களிப்பு அவனுக்கு.

அகதி இல்லை.

அடிப்படைத் தேவைகள் கிட்டுகின்றன. கவலையற்ற ஜீவனம். சஞ்சலம், எதிர்காலக் கேள்வி, இழப்புக்கள் எதிலுமே அவனுக்கு சிந்தனை பதியாத ஒரு உன்னத பருவம்.

ஆனால் நாம், அத்தனையையும் தேடலுக்குள் அர்ப்பணித்துவிட்டு, விடியுமா என்ற கேள்விக்கு விடியும் பொழுதுகளை மட்டும் சுமப்பவர்களாகி... 'இப்பவோ எப்பவோ, எது நிகழுமோ இல்லையோ?' ஏங்கியவர்களாக பெருமூச்சுக்களில் ஆசுவாசம் தேடிக் கொண்டு சலித்துப் போகிறோம்.

தூக்கம் எப்படி அனுகும்?

சிந்தனை ஓய்ந்து அயர்ந்து போகும் எத்தனையோ சந்தர்ப்பங்களில் வெடிச்சத்தம் திடுக்குற்று விழிக்கவைக்கும்.

என்ன சத்தம் அது?

நினைவுக்கு கேட்கிறதோ? செவிகளைக் கூர்மைப்படுத்திக் கொண்டு கேட்கிறேன். தொலைவில் வெடிச்சத்தம் சடசடக்கிறது.

பழக்கப்பட்டுப் போனதால் அக்கா எதுவும் கேட்கவில்லை போலும். நானும் பேசவில்லை. நாய் ஒன்று ஊளையிட்டு ஆரம்பித்து வைத்ததைத் தொடர்ந்து, இன்னும் சில தோள்கொடுக்கத் தொடங்கின. இருந்த மரங்களை விட்டு ஜிவ்வெனப் பறந்த பறவைகள் பட படவென சிறகடித்து வட்டமடித்துவிட்டு, மீளவும் அமர்வதற்கு இடம் தேடிச் சுழன்றன.

சிறிது நேரத்தில் ஓய்ந்து விடும் என நினைத்த வெடியோசை மேலும் தீவிரம் அடைந்தது. அக்கம் பக்கத்தில் பரபரப்பான பேச்சுக்குரல்கள் கேட்கின்றன.



அப்படியேதான் நானும் அக்காவும்.

எழுந்துதான் ஆகப் போகிறதென்ன? இவை அகதி வாழ்க்கையின் அன்றாட நிகழ்வுதான். சத்தம் ஓய்ந்த மாதிரி நிதானமான அமைதி. சில விநாடிதான் அது நீடித்தது. ஒரு பயங்கர உறுமல் உருளல் நிசப்சத்தை கிழிக்கிறது.

நாம், படுத்திருக்கும் திண்ணைக்கு மேலாகவா கேட்கிறது? நான் நிதானிப்பதற்குள் இன்னொன்று பாய்கிறது.

உடம்பு படுக்கையில் ஒரு முறை அதிர்ந்து அடங்குகிறது.

விழிகளை இறுக மூடிக் கொண்ட என் உள்ளுணர்வுகளில் ஏதோ ஒரு தாக்கம்.

குழந்தையின் பால் குடிக்கிற சத்தம் கேட்கிறதே- அக்கா தூங்குகிறாளா? இந்த சத்தத்திலுமா..?

கண்களைத் திறந்து பார்க்கிறேன்.

"அக்கா" அலறிய எனது சத்தம் எனக்கே கேட்கவில்லை.

என்ன கொடூரமான காட்சி அது!

அக்கா வெறும் முண்டமாக, கழுத்திற்குச் சொந்தமான.... வெறுமையாக, அதிலிருந்து இரத்தம் கொப்பளித்து மார்பை நனைத்து வழிந்தோட....

குழந்தை எதையுமே உணராதவனாக விழி மூடி, சுகமான கதகதப்பில் அன்னையின் மார்பில் புதைந்து தன்னிச்சையாக சப்புக் கொட்டிக் கொண்டிருக்கிறான்.

அந்த பச்சைத் தளிரை அள்ளி எடுத்து நெஞ்சோடு அணைத்துக்கொள்ளுகிறேன். அமுதுண்ட மலரிதழ்களில் வடிவதை துடைக்கிறேன். பார்க்கிறேன். அது சிவப்பாகத் தெரிகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# தீத்திக்கும் தீ

**தருவது - ரசிகன்**

நெஞ்சக்குள் மூண்டது தீ.
நினைவுகள் தீ மிதிப்பு நடத்துகின்றன.
மனப் பொந்துக்குள் அக்கினிக் குஞ்சு.
தினம் வைத்தது யார்? தீ விதைத்தது யார்?

யாருக்கும் தெரியாத இரகசியம்
ஊருக்குத் தெரியாது, உள்ளத்துக்குத் தெரியும்!
அவளுக்குத்தான் தெரியும். அவளுக்குத்தான் புரியும்!
களவுக்குத்தான் கொடுத்தாள் மனதை!

கேட்டுத்தான் திருடவில்லை அவனும்
கேட்காமல்தான் கொடுத்தாள் இவளும்.
சுகமான திருட்டு! சுகமான இழப்பு!
பதமான இடத்தில் பறிகொடுத்த நினைப்பு!

திருட்டுப் போனது சேதமாகாது
திருப்பித் தந்தால்தான் சேதமாகும்.
இழப்புக்கு ஈடாய் இன்னொரு மனதை
இழுத்துக் கொண்டதால் லாபம் இன்பம்.
அதன்பேர் காதல்! அதுவே காதல்!

அது அவளுக்குத்தான் தெரியும்.
அது அவளுக்குள்தான் தெரியும்!

விதைபோடாமலே முளைத்து விடுகிறது
கதை பேசாமலே விடை கிடைக்கிறது.
பொருள் சொல்லாமலே புதிர் புரிகிறது
இருள் விலகாமலே பகலாய் தெரிகிறது.

அதுதான் காதல். அவளுக்குத்தான் தெரியும்!
எதுதான் காதல் என்பீர்-திரும்
அனுபவித்தால்தான் தெரியும்.
அகழ்ந்து பொருள் அறிந்தால்தான் தெரியும்!

நெஞ்சக்குள் பூப்பூவாய் மொட்டவிழும்.
நினைவு பூப் பூவாய் தாவி விழும்.
கனவு முழுக்க நந்தவனம்-அங்கே
நனவில் சந்தித்த முகம் பூக்கும்!

விழிகள் நினைவில் படபடக்கும்.
இமைகள் கதவைத் திறந்துவைக்கும்.
சுமைகள்தானோ சுகங்கள்?
சுமக்கச் சுமக்க பஞ்சுப் பொதி
ஓ.. கனமே இல்லாத சுமைகள்!

காதலின் ஆரம்பம் அப்படித்தான்.
அவளுக்கும் இருந்தது அப்படித்தான்.

பேசிக்கொள்ளாமல் பார்த்துக் கொண்டதும்
பார்த்துக்கொள்ளாமல்
தனியே இருந்து தமக்குள் பேசிக்கொண்டதும்
உதடுகள் திறக்க முன்னரே
ஒத்திகை மட்டும் நடத்திப் பார்த்ததும்
சந்தித்ததும் மனம் தித்தித்ததும்
உதடுகள் பேச எழாமல் திக்கித்ததும்
காதலின் ஆரம்பம் அப்படித்தான்!

ஒரு நாள்; தயக்கத் தடைகளை
உடைத்துக்கொண்டு
உதடுகள் பேசிக்கொண்ட பெருநாள்!

உச்சரித்த ஒவ்வொரு வார்த்தைக்கும்
நட்சத்திர மரியாதை கிடைத்தது!
பேசினாள்-பேசினான்.

அம்மா என்றழைப்பது முதல்வார்த்தை
அன்பே! என்றழைத்ததுதான்-அதுவே
அவன் பேசிய முதல் வார்த்தை!

செவிக்குள் தேன் பாய்ந்தது.
திக்கெட்டும் கேட்டுவிடுமோ என்று
நெஞ்சக்குள் பயம் பூத்தது! மனப்
பொந்துக்குள் புறா சிறகடித்தது!

ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்
அடித்த காதல் காற்றில்-நெஞ்சைப்
பிடித்த அச்சமும் பறந்தது.

சந்திக்காத நாளெல்லாம் அமாவாசை
சந்திக்கும் நாளெல்லாம் பௌர்ணமி.
சிந்திக்கும் நினைப்பெல்லாம்-எங்கே
சந்திக்கலாம் என்பதைப் பற்றியே!

தேன் அள்ளித்தா என்றான்.
"ஏன், கேட்டா பெறுவது" என்றாள்.
"வான் அதற்கும் எல்லையுண்டாம்
நான் உன்னை நேசிப்பதற்கு
காணத்தான் முடியவில்லை எல்லை"
"நானும்தான் காணவில்லை எல்லை
காணும்தான் நீர் செய்யும் தொல்லை.
வேணும்தான் இன்னுமெனில்
நானும்தான் என் செய்வேன்?"
என்பாள்- மறுக்கமாட்டாள்

"போதும் என்ற மனமே
பொன் செய்யும் மருந்து."

"போடி' அது
உணவுக்கு சொன்னமொழி.
வாடி! நீ
உணர்வுக்கு போடு விருந்து!"

"உண்ட களை தொண்டனுக்கும்
உண்டு-நீர்
உண்டதெல்லாம் போதும் உறங்கும்!"

"போடி! தொண்டனுக்குச்
சொல்லு அது பொருந்தும்.
வாடி! நான் பக்தனடி
வரத்தை அள்ளிப் போடு!"

"ஆக்கப் பொறுத்தீர்-கொஞ்சம்
ஆறப் பொறுத்துக் கொள்ளும்.
மணமாலை மாற்றிய பின் நீரும்
மனமாற விருந்துண்ண வாரும்!"

"ஆறும்வரை தேறாதம்மா நெஞ்சம்-உன்னை
ஆளும்வரை தந்துவிடு கொஞ்சம்.
இன்று ஆறாவிட்டால்-பின்னர்
தாங்காதம்மா மஞ்சம்!"

"அவசரமோ, எதிலும் அவசரமோ
அடங்கியிடும் பிள்ளாய்!"

குறு நகை வீசி இடையது அசைய
விறு விறுவென்று வந்தே விட்டாள்.

"மோகினி தாக்கினாள் பாரீர்!
மேதினியீரே இதென்ன நியாயம்?
குற்றுயிராகக் கிடக்கிறான் காளை
சற்றும் மன மிரங்காமல் போகிறாளே கோதை"
குரலை உயர்த்திய அவன்
புலம்பி நடித்தது நினைவில் இனித்தது.



மாலை மங்கி நிலவு தெரிய
மனதில் பிரிவு தீயாய் சுட்டது!

தேன் அள்ளியதும்-கரத்தால்
தேகத்தை அள்ளியதும்-தனிமையில்
தாகத்தை வளர்த்தது!

தினம் இதுவே வேதனை.
தனிமை என்பது காதலின் சோதனை.

"இரவே போய்விடு-என்
உறவு மலர வழிவிடு!"

விடியும் வரை விளக்கெரிய
விழிகளும் தூங்காமல் எரிய
மாலை வரும் நேரம் வரை
மனதுக்குள் தீ எரியும்!

தென்றலும் சுடும்-சூளும்
குளிரும் சுடும்.

மஞ்சம் சுடும்-ஆறாத
நெஞ்சமும் சுடும்.

சந்திப்பு தித்திக்கும்- அது
முடிந்துவிட்டாலோ
நெஞ்சத்தில் தீப்பிடிக்கும்!

காதலின் வேதனை
காமனின் சோதனை!

"விரலை வைத்தால்தானே
தீ சுடுகிறது.
விலகி வந்தால்தானே-என்
தேகம் சுடுகிறது?"
கட்டழகி வியந்து
விடை தேடினாள்.

விடை திருக்குறளில்
இருக்கிறது.
காதல் நோய்
தொடாமல் சுடவல்லது.
தீயைவிட பொல்லாதது.
ஆனால் ஒன்று:-இது
தீய்க்காது, தித்திக்கும்!

"தொடிற் சுடின் அல்லது
காமநோய்–போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ"
அதிகாரம்-116. குறள்-1159.

**இலக்கிய நயம்**

# அவுஸ்திரேலியாவை... வீழ்த்திய... இந்தியா!

## சான்றோன் எனக்கேட்டு மகிழ்ந்த அம்மாக்கள்!

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் சமீபகாலமாக அடிமேல் அடிவாங்கிய இந்தியா 21.10.96ல் அவுஸ்திரேலிய அணியை ஓரம் கட்டியது.

இந்தியாவில் நடைபெற்றுவரும் டைட்டன் கிண்ணத்துக்கான ஒருநாள் போட்டிகளில் இந்தியாவுக்கு கிடைத்த முதல் வெற்றியும் அதுதான்.

இந்திய அணியின் பந்துவீச்சும், பந்து தடுப்பும் முதல் பதினைந்து ஓவர்களுக்கு அவுஸ்திரேலிய அணியை திணறடித்தது.

கப்டன் மார்க் டெய்லர் நிதானமாக இந்திய பந்துவீச்சை எதிர்கொண்டு ஆடத் தொடங்கியதால் அவுஸ்திரேலியாவின் ரன் எண்ணிக்கை ஏறத்தொடங்கியது. மார்க் டெய்லர் சதம் போட்டார். இதுவரை 98 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள மார்க் டெய்லர் அடித்த முதலாவது சதம் அதுதான்.



அவுஸ்திரேலிய அணி 215 ரன்களுடன் 7 விக்கெட்டுக்களை பறிகொடுத்தது.

இந்திய அணியின் ஆரம்ப ஆட்டமும் 'அவுஸ்திரேலிய அணி பதினைந்து ஓவர்களில் அடித்த ரன்களைவிட குறைவான ரன்களை அடித்துக் காட்டுகிறோம் பார்' என்று போட்டி போடுவதுபோலவே இருந்தது.

ஆரம்ப துடுப்பாட்டக்காரர் சஜித் சோமசுந்தர் 7 ரன்களுடன் திரும்பினார். சமீபகாலமாக இந்திய அணியை தூக்கி நிறுத்தி வரும் ராகுல் திராவிட் ஆடவந்த வேகத்தில் திரும்பிப்போனார். அடுத்து வந்த அசாருதீனுக்கு எல்.பி.டபிள்யூ. கொடுத்தார் நடுவர். அவரது தீர்ப்பு தவறானதுதான். அவசரப்பட்டு கையைத் தூக்கிவிட்டார். அசாருதீன் தனக்கு நேர்ந்த அநியாயத்தை எதிர்த்து சத்தம் போட்டுவிட்டுப் போக, பார்வையாளர்கள் படு டென்ஷனாகி விட்டார்கள். ஆடுகளத்தை நோக்கி புட்டிகளும் கற்களும் சரமாரியாகப் பறந்துவர ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

அதன்பின்னர் அசாருதீன் வந்து மைதானத்தைச் சுற்றி சுற்றி ஓடி பார்வையாளர்களை அமைதிப்படுத்திய பின்னர்தான் ஆட்டம் தொடர்ந்தது.

சமீபகாலமாக வந்த வேகத்தில் திரும்பி வெறுக்கவைத்துக் கொண்டிருந்த கப்டன் டெண்டுல்கர் இம்முறை சிறப்பாகவும் பொறுப்பாகவும் ஆடி 88 ரன்களை சேகரித்துக்கொடுத்து விட்டு ஆட்டம் இழந்தார்.

### முடிந்தது இனி

42 வது ஓவரில் டெண்டுல்கர் அவுட்டானதும் இந்தியாவின் தோல்வி உறுதி என்று நம்பப்பட்டது. எட்டு விக்கெட்டுக்கள் வீழ்ந்திருந்தன.

ஸ்ரீநாத்தும், அனில் கும்ப்ளேயும் களத்தில் நின்றனர். மேலும் 52 ரன்களை வரவு வைத்தால்தான் இந்தியா வெல்ல முடியும். கையிருப்பில் இருப்பது ஒரே ஒரு விக்கெட். மீதியுள்ள ஓவர்கள் எட்டு. 'ம்ஹீம் இந்தியா தோல்வியில் இருந்து மீளச் சான்சே இல்லை' என்றுதான் நம்பப்பட்டது.

அப்போதுதான் ஆச்சரியம் நிகழ்ந்தது. ஸ்ரீநாத் ஒரு சிக்ஸர் அடித்ததோடு பொறுப்பாக ஆட, மறுபுறத்தில் அனில் கும்ப்ளேயும் ஒரு ஃபோர் அடித்ததோடு டென்ஷன் இல்லாமல் ஆடத் தொடங்கினார்.

விக்கெட்டுக்களுக்கு இடையே ஓடி ரன் குவிப்பதற்காக இருவரும் ஓடியது நெருப்பு ஓட்டம்.

பார்வையாளர்களின் ஆனந்தக் கோஷம்: இருவருமே பெங்களூர்க்காரர்கள்; போட்டி நடந்ததும் பெங்களூரில். அதனால் உற்சாகம் இரு மடங்கு. இறுதியில் 49வது ஓவரில் இந்தியா வெற்றிக் கனியை தட்டிப் பறித்தது.

போட்டியில் கண்ட சில சுவாரசியக் காட்சிகள் பின்வருமாறு:

நடுவர் அசாருதீனுக்கு கொடுத்த அநியாயமான அவுட்; பார்வையாளர்களது கோபம் கண்டு நடுவர்கள் முழி பிதுங்கியது.

டெண்டுல்கர் அடித்த பந்தை தடுக்க முயல, அது எல்லைக் கோட்டைத் தொட்டுவிட்டது. அதனை நன்கு அவதானித்தும்கூட பந்தை தடுத்த அவுஸ்திரேலிய வீரர் தனக்குத் தெரியாது என்று நடுவரிடம் அநாகரீகமாக சொன்னது. நடுவரிடம் வோக்கி டோக்கி இல்லாததால் மூன்றாவது நடுவரிடம் கேட்க முடியாதுபோக, பவுண்டரி அடித்தும் மூன்று ரன்களை மட்டுமே இந்தியா பெறமுடிந்தது.

இரண்டு தடவை அப்படி நடந்தது. அவுஸ்திரேலிய அணியினர் வழக்கமாக இவ்வாறான அநாகரிக முறைகளில் நடப்பதுண்டு.

அதனால்தான் அவுஸ்திரேலிய அணிக்கு எங்கு சென்றாலும் எதிர்ப்புக் கிளம்புகிறது.

பார்வையாளர் வரிசையில் ஸ்ரீநாத்தின் அம்மாவும், அனில் கும்ப்ளேயின் அம்மாவும் அமர்ந்திருந்தனர். இருவருமே ஒரேநிற சேலையில் இருந்தனர். அணியை ஸ்ரீநாத்தும், அனில் கும்ப்ளேயும் வெற்றிப்பாதைக்கு இழுத்துச் செல்லத் தொடங்க பார்வையாளர்கள் இரண்டு அம்மாக்களிடமும் ஓடிப்போய் கை கூப்பி வணங்கியதும், கண்ணீர்விட்டதும் நெகிழ்ச்சியாக இருந்தது.

'ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்' எப்படியிருந்திருப்பாள் என்பதை அறிய இரண்டு அம்மாக்களின் முகங்களையும் குளோசப்பில் காட்டிய கமராவுக்கு நன்றி சொல்லலாம்.

இந்தியப் பெண்களும் மாறித்தான் போனார்கள். பார்வையாளர் வரிசையில் பெண்கள் பட்டாளமே மையம் கொண்டிருந்தது. துள்ளல் என்ன, துடிப்பென்ன?! வெற்றிக்கு ஊக்க மாத்திரையோ? கமராக்காரருக்கு குறும்பு. அடிக்கடி துள்ளலைக் காட்டி புண்ணியம் சேர்த்துக்கொண்டார்.

# சிந்தியா பதில்கள்

* சிந்தியா! நம்நாட்டில் மனிதாபிமானம் யாரிடம் இருக்கிறது?

றபீக்கா-ஜே. ஜிப்ரி, அக்கரைப்பற்று-04.

யுத்தத்திடம்தான்! இல்லாவிட்டால் இன்னமும் நம்மையெல்லாம் உயிரோடு இருக்க விட்டிருக்குமா? ச்சா... என்னவொரு மனிதாபிமானம்!

* அன்பின் சிந்தியா! தீர்வுப்பொதி எந்த நிலையில் உள்ளது?

ஆர். கிருஷ்ணன், கொழும்பு-15.

பொறிக்குள் சிக்கிய நிலைக்குள்.



* தன்னைத்தானே புகழ்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஏ.ஜே.எம். ஜ..பார், கொழும்பு-15.

கை கொஞ்சம் நீளம்: தமது முதுகை தாமே தொடும் அளவுக்கு!

* செல்வி ஜெயலலிதா மீண்டும் ஆட்சியைப் பிடிப்பாரா?

வே. சந்திரமோகன், மாத்தளை.

செல்வியின் எதிர்காலம் கலைஞரின் கையில்தான் இருக்கிறது. ஜெயலலிதா ஆட்சிக்கு வர நம்பியிருப்பது அ.தி.மு.க.வையல்ல, தி.மு.க.வை!

* நடிகைகளில் அழகானவர்கள் தமிழ் நடிகைகளா இந்தி நடிகைகளா?

செல்வி. எம். பவானி, ஹட்டன்.

கவர்ச்சி உதிரும்வரை நட்சத்திரங்கள் யாவுமே அழகுதான்.

* சிந்தியா! நம்மைப் புகழ்ந்து பேசுபவர்களை நம்பலாமா?

நா. ஜெயகணேஸ், பொகவந்தலாவ.

புகழ்ச்சியாளர்கள் இரண்டு ரகப்படுவர். வஞ்சகப் புகழ்ச்சியாளர். நெஞ்சாரப் புகழ்ச்சியாளர். பின்னவர்களை நம்பலாம்

* சமீபத்தில் உங்களை மெய் மறக்கச் செய்தவர் யார்?

பா. நிரஞ்சன், மட்/ தாண்டவன்வெளி,

மெய் மறந்துபோகுமளவுக்கு பொய்களை நான் நம்பியதில்லை.

* புலிகள் இயக்கத் தலைவர்கள்மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதே? என்ன காரணம்?

மு. மகேந்திரன், கொழும்பு-5.

மத்தியஸ்தம் செய்ய யாரும் வருவதற்கு முன்னரே குற்றவாளிக்கூண்டில் புலிகள் இயக்கத் தலைவர்களை நிறுத்தியாச்! தாக்கல் செய்யப்பட்டிருப்பது பாரதூரமான வழக்குகள் என்பதால் விசாரணை முடியும்வரை மத்தியஸ்தப் பேச்சு எழ வாய்ப்பே இருக்காதல்லவா? மொத்தத்தில் புலிகள் இயக்கத்துடன் பேச்சு நடத்தும் சூழ்நிலை ஒன்றை உடனடியாக எதிர்கொள்ள அரசு விரும்பவில்லை. அதற்கான ஓர் அறிகுறிதான் வழக்கு.

* தமிழ் திரையுலகில் யாருக்குப் பஞ்சம்?

பாத்திமா அனூஷியா, உக்குவளை.

பஞ்சம்-காத்திரமான கதைகள்.
தாராளம்-கவர்ச்சிகரமான சதைகள்.

* டியர் சிந்தியா! எலும்புக்கூடுகளைக் கண்டால் என்ன நினைப்பீர்கள்?

பி. திலீபன், கெங்கல்ல.

சும்மா மிரட்டாதேயும். பாதியைக் கண்டு கொண்டிருக்கிறோம். மீதியை நாளை காணப்போகிறோம். காணாவிட்டால்தான் காலம் மாறிவிட்டதா என்று நினைப்பேன்.

* அரைகுறை ஆங்கிலம் தெரிந்தாலும் நுனி நாக்கில் பேசிக்கொண்டு திரிபவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

எச்.எம். முஸ்தபா, புத்தளம்.

எப்போதாவது ஒருநாள் வசமாகச் சிக்கிக்கொண்டு முழிக்கப்போகிறார்கள்.

இப்படித்தான் வெளிநாட்டுத் தூதர் ஒருத்தர் ரசியாவுக்குச் சென்றார். ரசிய மொழியில் சொற்பொழிவை எழுதி மனப்பாடம் செய்து வைத்திருந்தார். ஆனால் "சீமாட்டிகளே, கனவான்களே" என்று தொடங்கும் வாசகத்தை எழுத மறந்துவிட்டார். எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது?

வழியில் ஒரு பொதுக் கழிப்பிடத்தில் 'ஆண், பெண்' என்று ரசிய மொழியில் எழுதியிருந்தார்கள்.

தூதருக்கு சந்தோசம். இதை வைத்துச் சமாளிக்கலாம் என்று மனத்திருப்தியுடன் அந்த ரசிய வாசகத்தை எழுதிக்கொண்டார்.

அவர் பேச்சை யாருமே ரசிக்கவில்லை. தூதருக்கோ காரணம் புரியவில்லை.

ஒரு ரசிய நண்பர் கடைசியில் அவரது சந்தேகத்தைப் போக்கினார்.

"உங்கள் பேச்சு அருமையாக இருந்தது. ஆனால் ஏன் அப்படி ஆண், பெண், பொதுக் கழிப்பிடமே! என்று பேச்சை ஆரம்பித்தீர்கள்?"

* டியர் சிந்தியா! ஊடல், கூடல் என்றெல்லாம் இலக்கிய நயத்தில் வருகிறதல்லவா? இக்காலத் தம்பதியினரிடமும் அதெல்லாம் இருக்கிறதா?

சி. தம்பிராசா, திருக்கோணமலை.

இல்லாமல் போகுமா?

நீதிமன்றத்தில் ஒருபெண்மணி சொன்னாள்: "கனம் நீதிபதியவர்களே! என் புருஷன் என்னை நிர்க்கதியாக விட்டுவிட்டுப் பிரிந்து சென்றார்."

நீதிபதி கேட்டார்: "எத்தனை வருஷத்திற்கு முன்பு?"

"12 வருஷத்திற்கு முன்னால்," என்றாள் பெண்மணி.

"என்ன 12 வருஷங்களா? அப்படியென்றால் உனக்கு ஏழெட்டுப் பிள்ளைகள் 13 வயதிலிருந்து 2வயதுவரை இருக்கிறார்களே, அது எப்படிச் சாத்தியமாயிற்று?" என்று கேட்டார் நீதிபதி.

பெண்மணி சொன்னாள்:

"ஓ...அதுவா? என்னைத் தவிக்கவிட்டு போனது தப்புத்தான் என்று மன்னிப்புக் கேட்டு அவர் அடிக்கடி என் வீட்டுக்கு விஜயம் செய்வது வழக்கம்."

* டியர் சிந்தியா! எய்தவன் இருக்க அம்பை நோபவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

எம். யோகன், திருமலை.

விழுந்து வெடித்த ஷெல்லை வெறுப்போடு நோக்குவோர் போன்றவர்கள்.

* தமிழ்நாட்டில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தல் முடிவுகள் எதனைக் காட்டுகின்றன?

கே. கந்தசாமி, நீர்கொழும்பு.

தி.மு.க. ஆட்சிமீது கெட்ட பெயர் ஏற்பட முன்னரே உள்ளாட்சித் தேர்தலை நடத்திமுடித்துவிட்ட கலைஞரின் கெட்டிக்காரத்தனத்தை!

* ஹலோ சிந்தியா! முடியைப்பிய்த்துக் கொள்வது மாதிரியான ஒரு கதை சொல்ல முடியுமா?

வி. பாக்கியநாதன், மட்டக்களப்பு.

கதை வேண்டாம். சமீபத்தில் தமிழக சஞ்சிகை ஒன்றில் பொன்மொழி ஒன்று படித்தேன்! புரிகிறதா பாருங்கள்.

"இக்கரையில் இருப்பவன் அக்கரைக்குப் போகவேண்டும் என்று நித்திரையைக் கெடுத்துக் கொண்டு அக்கறை காட்டி ஆசைப்படுவதற்கு முன்பு இக்கரையில் இருந்துகொண்டே அக்கரையிலும் இக்கரை சோகம் முத்திரை பதித்திருக்கிறதா என்பதைப் பார்க்கும் கலங்கரை விளக்கப் பார்வையை பழகிக்கொள்வது இக்கரையில் இருந்தாலும் அக்கரைக்கு மட்டுமல்ல எக்கரைக்கும் உதவுகிற வெற்றி மாத்திரை."

முக்கிய குறிப்பு:- மளமளவென்று மனப் பாடமாக இதைச் சொல்ல முடிந்தவர்கள் இன்னும் ஏழுபேருக்கு சொல்லக் கடவீர்.

*இந்திய அணிக்குத் தேவையானது எது?

எம். சத்திரசேகரன், கண்டி.

தேவையானபோது போதுமான வேகம்.



படிப்பகம்

# இராமாயணம் அங்கம் 54

## கிட்கிந்தை மன்னன் சுக்கிரீவன்

இராமபிரானின் கணையால் தாக்குண்டு தரையில் விழுந்து கிடந்த வாலியின் முகத்தில் அமைதி குடிகொண்டிருந்தது. அவனுடைய பதட்டநிலையும் மறைந்திருந்தது. அவன் மனைவி தாரையும் மகன் அங்கதனும் வந்து வாலியைச் சூழ்ந்து நின்றனர். அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் கரை புரண்டோடியது. அவர்களை சாந்தம் தவழும் தன் முகத்தைத் திருப்பி ஒரு தடவை பார்த்துவிட்டு இராமரின் முகத்தையும் பார்த்தான்.

“பிரபு! மண்ணில் பிறந்தவர் எவரும் மண்ணுக்கே இரையாக வேண்டும். எனக்கு அழிவில்லை என்று கூறிய என் தந்தை தேவேந்திரனும், இதோ என்மார்பில் தொங்கும் இந்த மாலையையும் எனக்களித்தார். இந்த இந்திரமாலையை என் கழுத்திலிருந்து அகற்றும் வரை என்னுயிர் இந்த உடலை விட்டுப்பிரியாது. எனக்கு அழிவில்லை என்ற எண்ணத்தினால் எழுந்த கர்வமே என்னை இதுவரை பல கொடுமைகளைப் புரிய வைத்துவிட்டது. இராமபாணம் என் கர்வத்தையும் அகந்தையையும் அகற்றி விட்டது. என்தம்பி சுக்கிரீவன்மேல் எனக்கு எக்கோபமும் கிடையாது. அவன் எனக்கு ஈடில்லா மோட்ச சாம்ராஜ்ஜியத்தை அளித்திருக்கிறான். தம்பி சுக்கிரீவனுக்கு ஏற்கனவே யுவராஜப் பட்டமளித்திருந்தேன். என் மகன் அங்கதனுக்கு அரசப் பதவி வேண்டாம். அவனை இதோ தங்களிடம் ஒப்படைக்கிறேன். தம்பி சுக்கிரீவனும் தாங்களுமே அவனை வழி நடத்த வேண்டும். சுக்கிரீவனே கிட்கிந்தையின் இராச்சிய பாரத்தினை ஏற்கட்டும்.

சுக்கிரீவன் சில வேளைகளில் வெறியேறி தங்களுக்குக் கோபமூட்டினாலும் அவன் மீது- என்மீது ஏவியதைப் போல் இராம பாணத்தை ஏவி அவனை மாய்த்து விடத் துணியாதீர்கள்!”

### தெய்வம் வழி நடத்தும்

இவ்வாறு கூறிய வாலி தன் மனைவி தாரையின் பக்கம் திரும்பி, “அழாதே தாரை! உங்களை நான் அனாதையாக்கிவிடவில்லை. தெய்வம் உங்களை வழி நடத்தும். எனக்கு மோட்ச இராச்சியத்தை அருளிய அத்தெய்வம் உங்களிருவரையும் வழி நடத்தும். தம்பி சுக்கிரீவன் வானரர்களுக்கு எக்குறையும் வைக்க மாட்டான். கிட்கிந்தை திரும்பி அமைதியாக வாழுங்கள்,” என்றான். சுக்கிரீவனையும் தன் அருகில் அழைத்து, அவனுடைய வலது கையையும் மகன் அங்கதனுடைய கையையும் எடுத்து இராமரின் வலது கையில் வைத்தான். பின்னர் மனதால் இராமபிரானைத் துதித்தான். ‘அவதார புருடரே! தாங்கள் எனக்களித்த வரத்தால் இவ்வுலகுள்ள காலம் வரை நிச்சயமாக என் பெயர் அழியப்போவதில்லை. எனக்குப் பெறற்கரிய பேற்றினை அளிப்பதற்காக பெரும் பழியைச் சுமந்தீர். என்னால் தங்களுக்கு அழியா அபகீர்த்தி நேர்ந்து விட்டது. என்னை மன்னித்தருளுங்கள். அதோ மாவீரர்களுக்கான மோட்ச இராச்சியக் கதவுகள் என்னை வரவேற்கத் திறந்து கொண்டுள்ளன. நான் புறப்படுகிறேன்.’ இவ்வாறு தனது உள்ளத்தால் இராமருடன் உறவாடிய வாலி தன் கண்களைச் சுழற்றி ஒருமுறை எல்லோரையும் பார்த்துவிட்டு கண்களை மூடினான். பேருவகையுடன் தூங்குவது போன்று அவன் முகம் பிரகாசித்தது. உயிர் பிரிந்தது.

தாரை, அங்கதன், சுக்கிரீவன், அனுமன் முதலானோர் கண்களிலிருந்து அருவிகள் பெருகின. இராமர் அனைவரையும் பார்த்து



இராஜகுமாரன்

“வாலி மாபெரும் வீரன். அவன் உயிர் வீர சுவர்க்கம் நோக்கிப் பயணமாகும்போது யாருமே அழக்கூடாது. அனுமனும் இலக்குவனும் வாலியின் பூதவுடலுக்கான இறுதிக் கிரியைகளை அங்கதனைக் கொண்டு முடித்து விடுங்கள். நாளை அதிகாலை நல்ல முகூர்த்தம். அம் முகூர்த்தத்திலேயே கதிரவனின் மகனான சுக்கிரீவனுக்கு மகுடாபிஷேகம் செய்து விடுங்கள். தம்பி இலக்குமணா! சுக்கிரீவனுக்கு மகுடம் சூட்டும் கைங்கர்யத்தை நீயே செய்து விடவேண்டும்!” என்று கூறியவாறு உருசியமுகம் குகைக்குச் சென்றார்.

வாலியின் பூதவுடல் நன்கு அலங்கரிக்கப்பட்ட சிவிகையில் ஏற்றப்பட்டு கிட்கிந்தைக் கோட்டைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு உரிய முறைப்படி இறுதிக்கிரியைகள் நடைபெற்ற பின்னர் கோட்டையின் வெளியே அமைக்கப்பட்ட சிதையில் சடலம் ஏற்றப்பட்டது. மாலைக்கதிரவன் மறையும் வேளையில் அங்கதன் தன் தந்தையின் சிதைக்குத் தீ மூட்டினான். வானரர்கள் எங்கும் குழுமியிருந்து தங்கள் தலைவனுக்கு இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

### கதிரவன் வரவு கூறும் கம்பர்

அடுத்த நாள் பொழுது புலர்கிறது. சுக்கிரீவன் கதிரவனின் மகனல்லவா? தன் மகன் ஒரு நாட்டின் அரசனாக முடி சூடுவதை எந்தத் தந்தைதான் மகிழ்ச்சியோடு பார்க்க வராதிருப்பான்?

கதிரவனுக்கு பெரு மகிழ்ச்சி. பொன் மயமான முடி தன் மகனின் சிரசில் ஏறப்போகிறது. இந்த விழாவுக்கு வருமாறு அதிகாலையிலேயே திருமாலை அழைக்கச் செல்கிறான் பகலவன். திருமால் எங்கே சயனித்திருக்கிறான் என்பதனை அறிகிறான். அவன் தாமரை மலரினுள் படுத்துறங்குகிறான். திருமாலை எப்படியோ எழுப்பியாக வேண்டும். தன்னுடைய பொற்கிரணக் கைகளால் தாமரை இதழ்களை மெல்ல விரிக்கிறான். இதழ்க் கதவுகள் திறந்து கொள்கின்றன.

அதற்கு மேலும் திருமாலால் உறங்கத்தான் முடியுமா?

கதிரவன் உதயத்தை கவிச்சக்கரவர்த்தி காட்டும் வண்ணம் இதோ:

**புதல்வன் பொன் மகுடம் பொறுத்தலால்**
**முதல்வன் பேரு வகைக்கு முந்துவான்**
**உதவும் பூமகள் சேர ஒண் மலர்க்**
**கதவம் செய்ய கரத்தின் நீக்கினான்.**

(கிட்கிந்தா காண்டம்-407) (4114)

இராமபிரானின் கோரிக்கைக்கிணங்க இலக்குவனும் அனுமனும் சுக்கிரீவனின் முடிசூட்டு விழாவுக்கான சகல ஏற்பாடுகளையும் செய்து முடித்தனர். வேதியர்கள் வேதங்களை முழங்க, முறைப்படி இலக்குவன் சுக்கிரீவனின் சிரசில் தங்க முடியினைச் சூட்டினான். சுக்கிரீவனின் மனைவி உருமையும் கலந்து கொண்டாள். வானரக் குடிகள் பலவிதமான கொண்டாட்டங்களிலும் ஈடுபட்டனர்.

### இராமரின் அறிவுரை

முடிபுனைந்த கையோடு இராமர் தனித்திருந்த உருசிய முகக் குகைக்கு சுக்கிரீவன் சென்றான். இலக்குவன், அனுமன் மற்றும் சுக்கிரீவனின் அமைச்சர்கள் முதலானோரும் உடன் சென்றனர். இராமரின் தாளிணைப் பணிந்த சுக்கிரீவனை வாரி அணைத்து இராமர் மார்புறத் தழுவிக்கொண்டார். தனித்திருக்காமல் தன்னுடன் கிட்கிந்தை வந்து சிலகாலம் தனது விருந்தினராக இராமரும் இலக்குவனும் தங்கியிருக்க வேண்டும் என்று கேட்டான் சுக்கிரீவன். ஆனால் அதனை ஏற்க மறுத்து விட்டார். “நாங்கள் துறவறம் பூண்டு கானகம் வந்துள்ளோம். எங்களுக்குரிய காலக்கெடு முடியும்வரை நாங்கள் அரண்மனை சுகத்தை நாடமுடியாது. ஆகவே, உனக்குரிய அமைச்சர் முதல் உறவினர், குடிமக்களுடன் சேர்ந்து கிட்கிந்தையில் நல்லறம் செழித்தோங்க அரசு புரிவாயாக,” என்று கூறி ஆட்சி முறையில் கைக்கொள்ள வேண்டிய தர்ம நெறிகளை எடுத்துரைத்தார்.

அப்போது மழைகாலம் தொடங்குவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. அக்காலத்தில் சீதையைத் தேடி கண்டுபிடிப்பது கடினம் என்பதை உணர்ந்த இராமர் சுக்கிரீவனிடம், “நான்கு மாதங்கள் மழை பொழியும். அம்மழைக்காலம் முடிவடைந்ததும் உனது படைகளுடன் என்னை வந்து காண்பாயாக” என்று கேட்டுக் கொண்டார். வாலியின் மகன் இராமரின் தாள் தொட்டு வணங்கி, தனக்குரிய பணி என்ன என்று கேட்டது போல் காத்து நின்றான். அவனை அருகழைத்து, உச்சி மோந்து இராமர், “சுக்கிரீவனுடன் நீ செல்லலாம். சுக்கிரீவனை உன் சித்தப்பா என்று நீ கருதலாகாது. உன் தந்தை என்ற நிலையில் சுக்கிரீவன் இருக்கிறான். அவனையே உன் தந்தையாக ஏற்றுக்கொள். நான்கு மாதங்கள், உன்னைப் போன்ற இளைஞருக்குரிய வீரப்பயிற்சிகளைப் பெறுவதுடன் கல்வி கேள்விகளிலும் உன் காலத்தைச் செலவிட்டு விட்டு வானரப் படைகளுடன் என்னிடம் வருவாயாக!” என்றார்.

அடுத்ததாக இராமரின் அடிதொழுது நின்றவன் அனுமன். அனுமனின் கண்களில் சுடர் விட்டுப் பிரகாசித்த அறிவொளி இராமரையே திகைக்க வைத்தது. “ஆஞ்சநேயனே! உனக்கு நான் சொல்ல வேண்டியது எதுவுமே இல்லை. முக்காலமும் உணர்ந்தவன் நீ. உனக்கு வழி காட்ட இந்த வையகத்தில் எவருமே இல்லை. ஆத்ம ஞானத்தில் நீ மாமேரு மலையை ஒத்தவன். உன்னுடைய ஆற்றல் சிலகாலம் சுக்கிரீவனுக்குப் பயன்படட்டும். கிட்கிந்தையில் நல்லறமும் நீதிநெறியும் சிறக்க உன் பணி அங்கு அவசியம். அதே வேளை எனக்கும் உன் துணை தேவை. இருப்பினும் நான்கு மாதங்கள் கிட்கிந்தையிலிருந்து விட்டுப் படைகளுடன் வா!” என்று இராமர் கூறியதும் அனுமனின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகியது. இராம இலக்குமணர்களுக்குப் பின்புறத்தைக் காட்டாமல் கை கூப்பியவண்ணம் பின்புறமாகவே நடந்து சென்று சுக்கிரீவன் குழுவினருடன் சேர்ந்து கொண்டான்.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 52

சரியானவிடை:- வானரர் குலம்.

1. செல்வி ச. அருணாசலம். 250, காலி வீதி, வெள்ளவத்தை.
2. சி. ஞானசீலன். ப/பாரதிமாதா தமிழ் வித்தியாலயம், பதுளை.
3. கே. பாஸ்கரன். வங்கி ஓயா கீழ் பிரிவு, நானு-ஓயா.
4. எம். அன்னி டொரீன் 66, பிரதான வீதி, பெல்மதுளை.
5. எம். ஜீவரெட்ணம்., ஊவா பென் ஹட், ஏ.பி.சி.(100.ஏ), வெளிமடை

**போட்டி இல. 54** கேள்வி:- இராமர் சுக்கிரீவனுடன் கிட்கிந்தை செல்ல மறுத்த காரணம் என்ன?

நவம்பர்.02 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
**இராமாயணப் போட்டி—இல.54, தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

# பட் பட் பட் ஜெட் ஜெட் ஜெட் 'பட்' ஜெட்

## காதில பூ கந்தசாமி

‘பட்ஜெட்’ வரப்போகிறது என்றதும் ஒரு கற்பனைப் பேட்டி நடத்தி முடித்துவிட்டார் காதிலை பூ கந்தசாமி.

பாடல் ஒலிக்கிறது.

*பட்ஜெட் பாரு, பட்ஜெட் பாரு*
*பார்சா என்னைக்குப் பலிக்கும் பாரு*
*பட்ஜெட் வோட்டில் ஜெயிக்கும் பாரு*
*பட்ஜெட் இதன் பேரைச் சொன்னா*
*அரிசி விலை உயரும் பாரு*
*வரவு செலவு கணக்கையெல்லாம்*
*சொல்லி அடிக்கும் சூரன்பாரு*
*ஒவ்வொரு முகங்கள் மாறி*
*வந்தும் ஏறு முகத்தில்*
*இருக்கும் விலைகள் தானடா*
*இந்தப் பேருக்குள்ளே ‘ஜெட்’டும் உண்டு*
*உண்மைதானடா.*

கா.பூ.க :- மன்னா!
மன் :- என்னவோ?
கா.பூ.க :- பட்ஜெட் பற்றி ஒரு பேட்டி தேவை.
மன் :- பட் பட் என்று நீங்க கேள்வி கேட்டா ஜெட் வேகத்திலே நாங்க பதிலைச் சொன்னா டடா. டட்டடா.
கா.பூ.க :- மன்னர் இன்று குஷிமூட்டில் உள்ளீர்கள் போல் இருக்கிறது.
மன் :- ஆம் யாம் குஷியாகத்தான் உள்ளோம். வானம் இடைக்கிடையே பொழிகிறது. பூமி எப்போதாவது விளைகிறது. அது போதாதா குஷியாக இருக்க?
கா.பூ.க :- போதும், போதும். ‘பட்ஜெட்’ ஜெட் வேகத்தில் தயாராகிக்கொண்டிருக்கிறதா மன்னா.
மன் :- யாரங்கே.. பட்ஜெட் மினிஸ்டரை அழைத்து வாருங்கள். கம் குயிக்.
அமைச்சர்:- *(பாடிக்கொண்டே வருகிறார்)*
*நான் பட்ஜெட்காரன், பட்ஜெட்காரன்*
*நாலும் தெரிஞ்ச கணக்குக்காரன்*
*நியாயமுள்ள சப் ஜெக்ட்காரன்*
*அட பட்ஜெட் என்ன பட்ஜெட்தான்*
*சப் ஜெக்ட்டென்னா சப்ஜெக்ட்தான்.*
*மன்னா! அழைத்தீர்களாமே. வட் இஸ்த மேற்றர் மன்னா!*
மன்:- பத்திரிகை ஓலைக்காரர் வந்திருக்கிறார். பட்ஜெட் பேட்டி வேண்டும் என்று செப்புகிறார்.
அமைச்சர்:- டோண்ட் ரெல் மன்னா. டோண்ட் ரெல். போட்டியை சென்சார் பண்ணிவிடுங்கள்.
மன்:- எதிர்க்கட்சிக்காரர்கள் கண்டன ஷெல் ஏவிவிடுவார்கள் அமைச்சரே! தாழப் பறந்து நோட்டமிடும் விமானங்கள் போன்றவர்கள் அவர்கள்.
அமைச்சர்:- தணிக்கை ஏவுகணையால் பட்டுப்பட்டென்று சுட்டுவீழ்த்திவிடுங்கள் மன்னா.
மன்:- ராடரில் விழாமல் வட்டமிடுகிறார்கள்.




குறி பார்க்க முடியவில்லை அமைச்சரே.
அமைச்சர்:- தரமான ராடர்களை இறக்குமதி செய்து விடலாம் மன்னா.
மன்:- விலை அதிகமாக இருக்குமே. குறைத்துக் கேட்டால் ;.பிக்சட் பிரைஸ் என்று சொல்வார்கள்.
அமைச்சர்:- அதனால் என்ன மன்னா. வாங்கிவிட்டு ‘பட்ஜெட்’டில் செலவுக் கணக்கில் எழுதிவிடலாம். செலவை ஈடுசெய்ய பாண் விலையை சற்று உயர்த்திவிடலாம்.
மன்:- குட் ஐடியா! பட், பாண் விலை வான் வரை உயர்வதாக எதிர்க்கட்சிக்காரர்கள் மீட்டிங்போட்டு மைக்கில் கிழித்து விடுவார்களே! என்னசெய்யலாம்?
அமைச்சர்:- நாட்டில் நடப்பதென்ன மன்னா?
மன்:- அதுதான் புரியவில்லை. உமக்கு ஏதாவது புரிகிறதா?
அமைச்சர்:- யுத்தம், வோர். நடக்கிறது மன்னா. வோர்! வாள் வீச வேண்டிய நேரத்தில் எதிர்க்கட்சிக்காரர்கள் வாய் வீச்சு நடத்துவதா? வெட்கம். வெட்கம்.
மன்:- யாருக்கு சொல்கிறீர். துடிக்கிறது மீசை.
அமைச்சர்:- சம்பள உயர்வு கேட்டு சலூன் காரர்கள் ஸ்ரைக் பண்ணுகிறார்களா மன்னா? பரவாயில்லை பிளேட் விலை உயரும் முன்னர் ஒரு பிளேட் வாங்கி நீங்களே மழித்துக் கொள்ளுங்கள்.
கா.பூ.க :- மன்னிக்கவேண்டும்.
மன் :- பொது மன்னிப்பு நாம் வழங்குவதில்லை. வழக்குத்தான் போடுவோம்.
கா.பூ.க :- மன்னா! நான் ஒரு பத்திரிகையாளர். பேட்டி எடுக்க வந்தேன்!
மன் :- ஆமாம், மறந்தேவிட்டேன். அமைச்சரே! போனால் போகட்டும், ஒரு பேட்டி கொடுத்துவிடும்.
அமைச்சர்:- உத்தரவு! ம்.. நீர் கேள்விகளை சுடுகிறீரா? அல்லது யாம் சுடலாமா?
கா.பூ.க :- என்ன.. சுடப்போகிறீர்களா... அய்யகோ.. பேட்டியும் வேண்டாம் வேட்டியும் வேண்டாம். தேவையென்றால் என் வேட்டியை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்.
அமைச்சர்:- டோண்ட் மிஸ் அண்டஸ்டாண்ட். நாட்டை யுத்தச் சிற்றுவேசனில் வைத்திருக்க வேண்டாமோ? அதனால் தான் யுத்த ஸ்ரைலுக்கு ஏற்ப பேசவேண்டியிருக்கிறது. சரி, நீர் கேள்விகளை சூட் பண்ணும்.
கா.பூ.க :- ‘பட்ஜெட்’ என்பது?
அமைச்சர்:- வரவும் செலவும்!
கா.பூ.க :- நிரப்பமுடியாதது?
அமைச்சர்:- துண்டுவிழும் தொகை.
கா.பூ.க :- பிரிக்க முடியாதது?
அமைச்சர்:- யுத்தமும்-செலவும்
கா.பூ.க :- பிரிக்கக்கூடியது?
அமைச்சர்:- உடலும் உயிரும்!
கா.பூ.க :- பிரிந்தே இருப்பது.
அமைச்சர்:- ஆளும் கட்சியும்- எதிர்க்கட்சியும்.
கா.பூ.க :- மறக்கக்கூடியது?
அமைச்சர்:- சென்றகால வாக்குறுதிகள்!
கா.பூ.க :- மறக்காமல் இருப்பது?
அமைச்சர்:- வருங்காலத் தேர்தல்கள்!
கா.பூ.க :- நிரந்தரமானது?
அமைச்சர்:- விலைவாசி உயர்வு!
கா.பூ.க :- எதிர்காலம் என்பது?
அமைச்சர்:- இருண்டே இருப்பது!
கா.பூ.க :- நிகழ்காலம் என்பது?
அமைச்சர்:- இருட்டுக்கு முன்னுரை.
கா.பூ.க :- சோகத்துக்கு?
அமைச்சர்:- பட்ஜெட்!
கா.பூ.க :- மகிழ்ச்சிக்கு?
அமைச்சர்:- கிரிக்கெட்
கா.பூ.க :- அமைச்சரே அசத்திவிட்டீர்கள். ஒரே அசத்து. மன்னா தங்களிடம் சில கேள்விகள் கேட்கலாமா?
மன்:- புறப்படத் தயாராக இருக்கிறது படை. நான் கொடுக்க வேண்டும் விடை. ஐ யாம் வெரி பிஸி. உமக்கு கேள்விப் பசி. சிம்பிள் கேள்விகளை மட்டும் கேளும்.
கா.பூ.க:- ‘பட்ஜெட்’டில் மங்களகரமான விஷயங்கள் இருக்குமா?
மன்:- பட்ஜெட் என்ன கல்யாண சப்ஜெக்டா மங்களமாக இருப்பதற்கு? நெக்ஸ்ட்?
கா.பூ.க:- கவர்ச்சிகரமான திட்டங்கள் ஏதாவது?
மன்:- அமைச்சரே! பிளீஸ் ரெல்!
அமைச்சர்:- உண்டு. நிறைய உண்டு. போத்தலில் அடைக்கப்படும் பானங்களுக்கு லேபிள் இருக்காது. தேவைப்படாவிட்டால் மூடியும் இருக்காது. சந்தைக்கு வரும் அழகான பொருட்களுக்கு இனிமேல் உறைகள் இருக்காது.
கா.பூ.க :- நல்ல கவர்ச்சியான திட்டம்! இதனால் பயன் என்னவோ?
அமைச்சர்:- காகித விலை உயர்வு கட்டுப்பாட்டில் இருக்கும். காகிதச் சிக்கனத்தால் மீதமாகும் பணத்தில் போருக்கு கப்பல் வாங்கப்படும்.
கா.பூ.க:- புல்லரிக்கிறது! போய் வருகிறேன்.
பட்ஜெட் பாரு பட்ஜெட் பாரு
பதமிருக்கும் பட்ஜெட் பாரு
பட்ஜெட் பெயரில் ஜெட்டு பாரு
மாதம் கொட்டும் செலவு பாரு
பிளேன் போரில் குண்டடிச்சா
பட்ஜெட்டுக்கும் பங்கு பாரடா.
இதன் பேருக்குள்ளே ஜெட்டும் உண்டு
உண்மைதானடா.”

யாவும் சுத்தமான கற்பனை

www.padippakam.com



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

# ஊதுவதில் மன்னன்

← பபிள்கம்மை வாயில் போட்டு மென்றும் உமிழ்ந்தும் ஊதிப்பார்த்தும் ரசிப்பது வழக்கம்தான். எப்படித்தான் ஊதினாலும் ஒரு அளவுக்கு மேல் நம்மால் ஊத முடியாது. ஆனால் ஒரு பெண்மணி பபிள்கம் ஊதுவதில் அசத்தியிருக்கிறார். வல்லவனுக்கு புல்லும் ஆயுதம். இப் பெண்மணிக்கு பபிள்கமும் உலக சாதனைக்கு ஒரு ஆயுதமாகிவிட்டது. ஊதோ ஊதென்று ஊதி 23 அங்குலம் விட்டமுடைய முட்டையாக்கிக் காட்டியிருக்கிறார். 19 ஜூலை 1994 இல் இச்சாதனை படைக்கப்பட்டது. சாதனைப் பெண்ணின் பெயர் சூசன் மொன்ற் கோமெறி வில்லியம்ஸ். அமெரிக்காவைச் சேர்ந்தவர்.

தலைப்பில் ஒரு தவறு. மேலோட்டமாக படத்தைப் பார்த்துவிட்டு மன்னன் என்று போட்டாச்! விஷயத்தை அறிந்து விட்டு படத்தை உற்றுப்பார்த்தால் அட.. பெண்! ஆகவே ஊதுவதில் மன்னி என்று திருத்தி வாசிக்கவும்.



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
323657
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# வா! காணாமல் போகலாம்!



வாயைப் பிளந்து இருக்கும் → முறையைப் பார்த்தால் 'வா வா' என்று அழைப்பது போலத் தெரிகிறதா? கிட்டப்போனால் கதை குளோஸ். லபக்கென்று உள்ளே போய்விடுவீர்கள். விசாரணைக் குழு வைத்தாலும் கண்டுபிடிக்க முடியாது!

இதுதான் உவர்நீர் முதலை. ஊர்வனவற்றில் உலகிலேயே மிகவும் பெரிய்ய்ய்யது இதுதான். இதன் நீ....ள....ள...ம் எவ்வளவு தெரியுமா? 23 அடி. ஒரு சராசரி மனிதனைவிட நாலு மடங்கு நீளம். இதன் வயிற்றுக்குள் போனால் நாம் வசதியாக இருக்கலாம்!

# நாங்க அக்கடான்னு உடை போட்டா

↓ என்ன ஒரு ஸ்டைலு. என்ன ஒரு ஒயிலு. நாயாரைப் பார்க்க பொறாமையாக இருக்கிறதல்லவா. எல்லாம் நேரம்தான்.

நாயார் அணிந்துள்ள ரீ சேட்டிலும் ஒரு விஷயம் இருக்கிறது. ரீசேட்டில் ஒயாசிஸ் என்னும் எழுத்துக்கள் காணப்படுகிறதல்லவா. அது ஒரு பிரபலமான இசைப்பட ஆல்பம். அதற்கு கடுமையான மவுசு. சிறியவர் முதல் பெரியவர்வரை போட்டிபோட்டு வாங்கினார்கள். ஒரு வருடகாலத்திற்குள் 30 இலட்சம் ஆல்பம்கள் விற்றுத்தீர்ந்தன. ஆல்ப விற்பனையில் அது ஒரு உலக சாதனை என்றால் பாருங்களேன்.

'ஒயாசிஸ்' என்ற முத்திரையோடு ரீசேட்டுக்கள் அணிவது ஒரு பாஷனாகியது. இந்த நாயாரின் உரிமையாளரும் ஒயாசிஸ்பைத்தியம். அவருக்கு பிள்ளைகள் இல்லையாம். செல்ல நாயாருக்குப் போட்டு அழகு பார்த்திருக்கிறார்.




# நம்பர் வன்



படத்தில் இருப்பது சராசரியான கார்களில் மிக வேகமாக செல்லக் கூடிய கார். இதன் உச்ச வேகம் மணிக்கு 349.3 கிலோ மீட்டர். (217.1 மைல்கள்) 1992ல் பிரிட்டனில் நார்டோ சர்க்கிற் என்ற பகுதியில் இதன் வேகம் பரிசீலிக்கப்பட்டு உலக சாதனையாக பதிவு செய்யப்பட்டது.

மற்றொரு தகவல்:- ஜெட் என்ஜின் பூட்டிய கார் ஒன்று சென்றவாரம் பிரிட்டனில் ஓட விடப்பட்டது. இக்காரின் குறைந்த வேகம் மணிக்கு 650 மைல். உச்சவேகத்தில் சென்றால் ஒலியின் வேகத்தையும் இதனால் தாண்ட முடியும் என்றும் கூறுகிறார்கள். அக்காரின் வேக ஓட்டத்தை பரிசீலிக்க பிரிட்டனில் நீண்ட சாலைகள் போதாமையால் ஜோர்டான் நாட்டின் நீண்ட சாலைகளில் ஓடவிட்டு பரிசீலித்தார்கள். போர் விமான வேகத்தில் கார்கள் ஓடும் காலம் வந்துவிட்டது.

# வேகமான பயணம்

↓ மக்களின் போக்குவரத்தை சலபமாக்கவும், துரிதமாக்கவும் என்ன செய்யலாம் என்று விஞ்ஞானிகள் மண்டையைக் குடைந்து கொள்கிறார்கள். புதிது புதிதாகவும் கண்டு பிடிக்கிறார்கள்.

படத்தில் குட்டிக் கப்பல் வடிவில் தெரிவது என்ன தெரியுமா? கடல் ஏரிகளை கடக்க உதவும் ஃபெரி. தமிழில் இதனைத்தான் 'பாதை' என்கிறோம். உலகிலேயே மிக வேகமாக செல்லும் 'பாதை' இதுதான். கார்கள் மற்றும் வாகனங்களுடன் பயணிகளையும் தன் வயிற்றுக்குள் போட்டுக்கொண்டு படுவேகமாகச் செல்லும். 1500 பயணிகளையும், 375 கார்களையும் இது தாராளமாகத் தாங்கும். இதன் அடிப்பகுதி (செசி) அலுமினியச் சட்டத்தால் கட்டுமரம் போன்று வடிவமைக்கப்பட்டது.

இதன் நீளம் 126.6 மீட்டர். அகலம் 70 மீட்டர். இதன் வேகம் மணிக்கு 40 தொடக்கம் 44 கடல்மைல்கள். (அதாவது 74 தொடக்கம் 82 கிலோ மீட்டர்கள்) இதன் பெறுமதி 559 கோடி ரூபாய்கள்.

மக்களின் போக்குவரத்தை சலபமாக்கவும், துரிதமாக்கவும் எவ்வளவு செலவு செய்கிறார்கள் பாருங்கள். நம் நாட்டில் கதை வேறு. மக்களின் போக்குவரத்தை எப்படியெல்லாம் தாமதப்படுத்தலாம் என்று கண்டுபிடிப்பதில் நம் நாட்டின் ஸ்பெசலிஸ்டுக்களை அடிக்க யாராலும் முடியாது.





படிப்பகம்